# தமிழரசு


16-10-1981 50காசு


திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி — புரட்டாசி 30



சுடரொளியில் பட்டுத் தெறிக்கும்
எழிற்கோலத்தின் வண்ணக் காவியம்

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி





# குடும்பநல இயக்கம் மக்கள் இயக்கமாக மலர வேண்டும்!

## மாண்புமிகு முதல்வர் வேண்டுகோள்!

இந்தியாவில் இன்னும் 35 ஆண்டுகளில் மக்கள் தொகை இரட்டிப்பாகுமென்று உலக அளவிலான புள்ளி விவர அறிக்கை கூறுகிறது. கி. பி. 2000ல் இந்தியாவில் மக்கள் தொகை 1017.7 மில்லியன்களாக உயர்ந்து விடும் என மதிப்பிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு, குடும்ப நலத்திட்டச் செயலாக்கத்தில் தனி அக்கறை காட்டிச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மக்கள் தொகை 1961ல் 34 மில்லியன்கள். 1971ல் 41 மில்லியன்கள். இப்போது 48 மில்லியன்களையும் தாண்டிச் சென்று கொண்டிருப்பதாக அறிகிறோம்.

உலக அளவிலும் சரி, இந்தியாவிலும் சரி மக்கள் தொகைப் பெருக்கம் கண்ணுக்குப் புலப்படாத ஒன்றாக, கருத்துக்கு எட்டாத ஒன்றாக வளர்ந்து கொண்டே போக அனுமதித்தால், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை நாட்டில் காண்பது கடினம்.

வகுக்கப்பட்ட திட்டங்களின் வழி, அரசு செயல்படுத்தும் வளர்ச்சிப் பணிகளால் விளையும் பயனைச் சமுதாயம் முழுமையாகப் பெற வேண்டுமானால், மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டாக வேண்டும் என்பதில் எல்லோரும் ஒத்த கருத்து உடையவர்களாகவே இருப்பார்கள்.

மது அருந்துவது மக்கள் அறியாமலே எத்தகைய கேடுகளை அவர்களுக்கு உண்டாக்குமோ, அதுபோல மக்கள் தொகைப் பெருக்கமும் நாம் அறியாமலேயே சமுதாயத்துக்குக் கேடுகளை உண்டாக்கும் என்பதை அனைவரும் மனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

குடும்பநலத் திட்டம் என்ற கோட்பாடு தனிப்பட்ட எந்த நபரினுடைய கொள்கையுமல்ல, அல்லது எந்தக் கட்சியினுடைய கொள்கையுமல்ல. அது, நாடு முழுமைக்குமான சமுதாயக் கொள்கை, உலகளாவிய கொள்கை. அனைவரும் ஒருமித்த கருத்துடன் ஏற்றுச் செயல்படுத்த வேண்டிய கொள்கை, எனவே அதிலே அரசியல், சாதி, சமய, இன வேறுபாடுகளுக்கோ, வேற்றுமைகளுக்கோ இடமே இல்லை. எவ்வித வேறுபாடுமின்றி நாட்டு மக்கள் அனைவரும் 'சிறு குடும்ப நெறி' ஏற்க முந்த வேண்டுமென்றும், குறிப்பாகத் தாய்க்குலம் இத்திட்டத்திற்கு நல்லாதரவு நல்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி — புரட்டாசி 30

மலர் 12 இதழ் 8

16—10—1981

# வனவிலங்குப் பாதுகாப்பு



மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்

## திரு. இராம. வீரப்பன்

உலகில் அருகி, அழிந்து வரும் வன உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம், அவற்றால் மனிதனுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் ஆகியவற்றைப் பொதுமக்கட்கு உணர்த்தி, ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு 'வனவிலங்கு வார விழா'வை ஆண்டுதோறும் அக்டோபர் திங்கள் முதல் வாரத்தில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி கொண்டாடி வருகிறோம். இவ்வாண்டு நாம் கொண்டாடுவது 27-வது வனவிலங்கு வார விழாவாகும்.

தாவரங்களும் உயிரினங்களும் ஒன்றோடொன்று இணைந்து வாழ்ந்து வருபவை. இவ்வுயிர்கட்கு நீரும், நிலமும், காற்றும், ஒளியும் ஆதாரங்களாக அமைந்துள்ளன. இதில் ஏதாவது ஒன்றுக்குக் கேடு விளைந்தால்கூட அது மற்ற அனைத்தையும் பாதிக்கும். இந்தப் பாதிப்புகள் உடனே தெரியாவிட்டாலும் சில வருடங்கள் கழித்து அதனுடைய தீமைகள் மக்களின் வாழ்வைத் தாக்கும்.

மனித இனம் குறைவாகவும், அவர்களின் தேவைக்கு அதிகமாக நிலங்களும் உயிரினங்களும் இருக்கும்வரை, வனவிலங்குகளுக்குப் பெரும் அளவில் மனிதன் தீமை விளைவிக்கவில்லை. ஆனால், மனித இனம் பெருகப் பெருக தங்களது தேவைக்காகப் பிற உயிர்களை, குறிப்பாக விலங்குகளை மனிதர்கள் கொல்லத் துவங்கிவிட்டனர்.

இருபதாம் நூற்றாண்டில், அதாவது நமது காலத்திலேயே, சர்குஜா சிற்றரசன் Maharaja of Sarguja தமது வாழ்நாளில் 1,100 புலிகளைக் கொன்றான் என்றும் நிவா சமஸ்தானத்தின் மன்னர் 616 புலிகளைக் கொன்றார் என்றும் அறிகிறோம். அதே போன்று சிம்பஸன் என்ற ஆங்கிலேயன் சுமார் 600 புலிகளைச் சுட்டுக்கொன்றானாம். ஆக, இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சுமார் 40,000 புலிகளைக் கொண்டிருந்த நம் நாட்டில் சமீபக் கணக்குப்படி புலிகளின் எண்ணிக்கை 1872 ஆகக் குறைந்துவிட்டது. பல கோடிக் கணக்கில் இருந்த அமெரிக்கக் காட்டெருமைகளின் தோலிற்காக அவைகள் கொல்லப்பட்டு, அதனுடைய எண்ணிக்கை 500 ஆகக் குறைந்துவிட்டது. தென்னிந்தியாவிலும் முன்பு இருந்த 1,600 வகை உயிரினங்களில் சுமார் 200 வகை உயிரினங்கள் தற்போது அழிந்துவிட்டன என்று கருதப்படுகிறது.

ஒரு காலத்தில் ஒரு கொம்புள்ள காண்டாமிருகம் மேற்கே பஞ்சாப் முதல் கிழக்கே அஸ்ஸாம் மேற்குவங்கம் வரை வடஇந்தியா நெடுக 2,000 மைல் பரப்பில் ஏராளமாக வாழ்ந்து வந்தன. ஆனால், இன்று அஸ்ஸாமிலும், வங்கத்திலும் சில பகுதிகளில் மட்டுமே அது காணப்படுகிறது. வட இந்திய காடுகளில் எல்லாம் நிறைந்திருந்த சிங்கம் எல்லா இடங்களிலும் மறைந்து, குஜராத்தில் 'கிர்' காடுகளில் Gir Forest மட்டுமே காட்சிப் பொருளாக வாழ்ந்து வருகிறது. குஜராத் மாநில கத்தியவார் என்ற பகுதியில் மட்டும் ஒரு கப்பல் படை அதிகாரி சில காலங்களுக்கு முன்பு 80 சிங்கங்களைக் கொன்று குவித்தானாம். இந்தியாவின் மத்திய பாகம் முழுவதும் நிறைந்திருந்த சிறுத்தைப் புலியினம் இன்று மறைந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக மிருகக் காட்சி சாலைகளில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது. இந்தியா முழுதும் இருந்த, வலிமை மிக்க காட்டெருமை இன்று அஸ்ஸாமிலும் மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா தமிழகம் ஆகிய சில வனவிலங்குப் புகலிடங்களில் மட்டுமே உள்ளது. வேகமிக்க வங்கச் சிறுத்தை உலகத்திலிருந்து அடியோடு


மறைந்துபோய்விட்டது.


1964-69 க்கிடையில் கட்டம் கட்டமாக வங்க தேசத்துப் புலிகள் விஷம் வைத்து கொல்லப்பட்டன என்றும், 1969-ல் மட்டும் 5,000 புலித்தோல்கள் வெளி நாட்டிற்கு ஏற்று மதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது என் றும் அறிகிறோம். அண்மையில் கிடைத்த புள்ளி விவரங்களின்படி ஆண்டுதோறும் 3 இலட்சம் வனவிலங்குகள், அவைகளின் தோலுக்காகக் கொல்லப்படுகின்றன.

காடுகள் இல்லாத நாடு வளமில்லாத வறிய நாடாகும். காடுகளும் வன உயிர்களும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. காடுகள் இல்லையேல் வன உயிர்கள் இல்லை. இதே போல் வன உயிர்கள் இல்லையேல் காடுகள் சிறிது சிறிதாக அருகி மறையும். பழங்கள், புற்கள், செடி, கொடிகளை உணவாக நல்கி உறைவிடமும் அளித்து, காடுகள் வன உயிர் கட்கு உதவுகின்றன. வன உயிர்கள் தாவர இனப் பெருக்கத்திற்குப் பெரிதும் உதவு கின்றன. தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிகள், பறவைகள் பல்வேறு மலர்களில் அயல் மக ரந்தச் சேர்க்கைக்கு உதவுகின்றன. வன உயிர் களின் கழிவுப் பொருட்கள் காட்டு நிலத்திற்கு நல்லுரமாய் அமைகின்றன. மரங்கள், செடி களைத் தாக்கி அழிக்கும் புழு, பூச்சிகள் கூட பறவைகட்கு உணவாய் அமைகின்றன. பல வேறு கனிகளை உண்டிடும் பறவைகளும் மற்ற விலங்குகளும் விதை பரவுவதற்கும் அதன் மூலம் மரங்கள் வளர்வதற்கும் பெரி தும் உதவுகின்றன. பறவைகள் ,விலங்குகள் மட்டுமின்றி புழு, பூச்சிகளும்கூட, மண்ணை வளமாக்கவும் தாவரங்களின் பெருக்கத்திற்குக் காரணமாய் அமைகின்றன. இவ்வாறாக ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து ஏற் படும் 'இயற்கைச் சுழற்சி' மனிதனால் ஏற் படும் இடையூறு காரணமாக அழியும் அபா யம் உள்ளது.

இன்று பரந்துவிரிந்து'மணல் வெளியாய்க் காட்சிதரும் ''சஹாரா பாலைவனம்'' அன்று ரோமானியப் பேரரசுக்கு போர் யானைகளை வழங்கிய அடர்ந்த காடாக விளங்கியது என் பதை இன்று யாராவது நம்ப முடியுமா? 'நாக ரீகத்தின் தொட்டில்' எனப்புகழப்பட்ட மத் தியக் கிழக்கு நாடுகளான ''வட ஆப்பிரிக்கா'' மற்றும் ''அரபு நாடுகள்'' ஒரு காலத்தில் அடர்ந்த காடுகளும், எண்ணற்ற வன உயிர் களையும் கொண்டு வளமிக்க பூமியாகத் திகழ்ந்திருந்தன. காடுகளை அழித்ததாலும், ஆடு, மாடுகளை அளவின்றி மேயவிட்ட தாலும் வன உயிர்களைக் கணக்கின்றி கொன் றதாலும் எழில் கொஞ்சும் சோலைகள் அழிந்து அப்பகுதி இன்று வெறும் பாலைவன மாய் மாறிவிட்டன. நம் நாட்டில் சுமார் 5000 ஆண்டுகட்கு முன் மொகஞ்சதாரோ நாகரிகப் பொலிவுடன் மிளிர்ந்த சோலைப் பகுதி, இன்று பாலைவனமாய்க் காட்சி தந்து தன் சோகக் கதையைச் சொல்லி நிற்கிறது! ஆகவே, வனமும் உயிரினங்களும் காப்பாற்றப் பட்டே ஆக வேண்டும் என்பது உலகின் நன் மைக்காக இயற்கை ஏற்படுத்திய நியதியாகும்.

தொன்று தொட்டு உயிரினங்களைக் காக்க வேண்டும் என்ற கருத்து கூறப்பட்டே வந்திருக்கிறது. ஆயிரத்து அறுநூறு ஆண்டு கட்கு முன்னர் இந்நாட்டில்தான் மாமன்னர்





''அசோகன்'' தனது ஐந்தாவது கட்டளையில் 'பிராணிகளின் வதை செய்யப்படுவதை தடைசெய்து அரசாணை பிறப்பித்தும் அதைக் கல்லில் பொறித்தும், அக்காலத்திலேயே மிருகங்களுக்கெனத் தனி மருத்துவமனை நிறுவி மனித உயிரைப் போலவே பிராணிகள் உயிரும் முக்கியம் என்பதை அருள் உள்ளத்தோடு போற்றியிருக்கின்றான். உயிரினங்களை அன்புடனும் பரிவுடனும் நடத்த வேண்டும்-பாதுகாக்க வேண்டும் என தனது பேரரசுக்குட்பட்ட மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். வட அமெரிக்காவில் பழங்குடி மக்கள் கூட 1855-ல் அதாவது 125 ஆண்டுகளுக்குமுன் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி எழுதிய கடிதத்தில் காட்டு நிலங்களை வெள்ளையர்கள் எடுத்துக் கொள்ள ஒரு நிபந்தனை விதித்தனர். அதன்படி வெள்ளையர்கள் அந்நாட்டிலுள்ள மிருகங்களைத் தங்களுடைய உடன்பிறந்தாராகக் கருதவேண்டும் என்று நிபந்தனை விதித்து, 'மிருகங்களின்றி மனிதர்கள் இல்லை' என்ற கருத்தை வலியுறுத்தி உள்ளனர்.

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு புது மீன் வகைகளுக்கும் அழிவு ஏற்படும் என்ற நிலை தோன்றியபோது, வட அமெரிக்காவில் பொது மக்கள் ஒரு அணைக்கட்டு கட்டுவதையே எதிர்த்து நிறுத்திவிட்டனர். இதன் மூலம் மக்கள், வனவிலங்கு பாதுகாப்பினை எவ்வளவு முக்கியமாகக் கருத முற்பட்டுள்ளனர் என்பது புலனாகும்.

இந்திய வனவிலங்குகள் பல்வேறு வகையானவை. அவை அழகின் இலக்கியங்கள்! புலியின் கம்பீரமும், யானையின் பெருமிதமும், புள்ளிமானின் கவர்ச்சியும், வண்ண மயிலின் வனப்பும், உலகோர் உள்ளத்தை எல்லாம் கவரும் வல்லமை வாய்ந்ததாகும். உலகின் வேறெந்தப் பகுதியிலும் காண இயலாத வகைவகையான விலங்கினங்களும், பறவை இனங்களும் நம் நாட்டில் ஏராளமாக உள்ளன. ஐநூறுக்கும் மேற்பட்ட விலங்கினங்களும் 1200-க்கும் மேற்பட்ட பறவையினங்களும் இயற்கையன்னை நம் நாட்டிற்கு வழங்கியுள்ள செல்வங்களாகும். இவற்றை நல்ல முறையில் பாதுகாக்க வெளிநாடுகளில் நன்கு விளம்பரப்படுத்தி வனவிலங்கு சுற்றுலாவை Wild life Tourism மேம்படுத்தி அயல்நாட்டுப் பயணிகள் வருகையின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினால் நம் நாட்டில் வருமானம் பெருகவும், அந்நியச் செலாவணி அதிகம் பெறவும் வாய்ப்புள்ளது. மிகச்சிறிய நாடான கென்யா என்ற ஆப்பிரிக்க நாட்டில் 'வனவிலங்குச் சுற்றுலா' மூலம் கிடைக்கும் வருமானம் அந்நாட்டின் வருமானத்தின் 3-வது இடம் வகிக்கின்றது.

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் காடுகளில் சுற்றித் திரிந்த பறவைகளைக் கண்டு மகிழ்ந்து, அரசுக்கு வருவாய்தரும் மக்கள்தொகை 70 இலட்சம். வன விலங்குகளைப் புகைப்படமெடுத்து பிழைப்பவர்களின் தொகை 45 இலட்சம். ஆப்பிரிக்கா, கானா, ஜாய்ரே மற்றும் மேற்குமத்தியதரைக் கடல் நாடுகளிலுள்ள மக்களின் வாழ்க்கை பெரும்பாலும் வனச்செல்வங்களையொட்டியே உள்ளது.

எனவே, குறைந்த பட்சம், தற்போது இருக்கும் மிருக வர்க்கங்களையாவது எதிர்காலத்திற்கு இருக்கும்படி, சில உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு நாம் ஆட்பட்டிருக்கின்றோம்.

மிருகங்கள் தங்களுடைய இருப்பிடத்தை விட்டு வெளியே வராவிடினும், மனிதன் அதைத்தேடிக் கொல்லும் நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒரு கொடுமையான செயலாகும். அவை தங்கள் இருப்பிடத்திலுள்ள உணவையே இயற்கை படைத்திருக்கிற புற்களையும், தாவரங்களையும் மட்டுமே உண்டு ஜீவிக்கின்றன. ஆனால், அந்த இயற்கைச் சூழ்நிலையை மனிதன் சிறுகச்சிறுக அழித்து மிருகங்களைக் கொன்று மிக விரைவில் மிருகங்களைக் காணுவதே அபூர்வம் என்றநிலை உருவாக்கப்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. ஆனால், மிருகங்களைப்பற்றி, அவைகள் அபாயகரமானவை; ஆகையால் கொல்லப்பட வேண்டியவை என்ற சமாதானமும் கூறுகின்றனர். ஆனால் உண்மையில், மனிதர்கள்தான் மிருகங்களுக்கு அபாயகரமானவர்கள் - இரக்கமின்றி ஆபத்தை விளைவிப்பவர்களே தவிர விலங்குகள் எப்பொழுதுமே தானாக மனிதர்களுக்கு ஆபத்தை விளைவிப்பதில்லை.

ஆகவே, மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழா நடத்தவிருக்கும் இந்நாளில் நாம் மகாகவி பாரதியின் ''காக்கை குருவி எங்கள் சாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்'' என்ற வரிகளை நினைவு கூர்ந்து வனங்களையும், வன உயிர்களையும் பாதுகாத்து அதன் மூலம் நம் வாழ்வையும், நமது சந்ததியினர் வாழ்வையும், சிறக்கச் செய்வோம் என்ற உறுதி ஏற்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**(வன விலங்கு வார விழாவினையொட்டி மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 1.10.1981 அன்று ஆற்றிய வானொலி உரை)**



# இனியது இனியது குடும்பநலம்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை அமைச்சர்

## டாக்டர் எச். வி. ஹண்டே

தேசிய குடும்ப நலத் திட்ட இருவார விழாவினை முன்னிட்டு, உங்கள் அனைவரையும் தொலைக் காட்சி மூலம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை நாட்டு மக்கள் அறியும் வகையில் விளக்கங்கள் அளிக்கவே இது போன்ற விழாக்கள் கொண் டாடப்படுகின்றன.

மக்கள் தொகைப் பெருக்கத் தினால், நாட்டிற்கும், வீட்டிற்கும் ஏற்படும் தீமைகளை நகர்ப்புறங் களில் வாழும் நடுத்தர மக்கள் ஓர் அளவுக்கு அறிந்துள்ளார்கள். என்றாலும் ஏழை எளிய மக்கள், குறிப்பாகக் கிராமப்புறங்களில் உள்ளவர்கள் இதனை முழுமை யாக உணரவில்லை என்றே சொல்ல வேண்டும். சமீபத்தில் அறிவிக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தொடர்பான புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது, இத்திட்டத்தில் நாம் எந்த அளவு வெற்றி பெற்றுள் ளோம் என்பது தெளிவாகின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் அகில இந்தியாவில், மக்கள் தொகை வளர்ச்சி 24 சதவிகிதம் ஏற் பட்டுள்ளது. ஆனால் அதே 10 ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற் பட்டுள்ள மக்கள் தொகை வளர்ச்சி 17 சதவிகிதம் தான். அகில இந்தியாவிலேயே, இது ஒரு மிகப் பெரிய சாதனையாகும்.


சமீபத்தில் தமிழகம் வந்த பாரதப் பிரதமர் அவர்கள்— இதற்காகத் தனது பாராட்டு தலைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் தலைமையில், இந்தத் திட்டத்தை தனிக் கவனத் துடன் நாம் செயல்படுத்தி வரு கிறோம். இதனால் தமிழகத்தில் சிறு குடும்ப நெறியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு, படிப்படியாக வளர்ந்து வருகின்றது.

குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில், தமிழ் நாடு இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கின்றது என்று—நாம் அலட்சியமாக இருந்து விடக் கூடாது. இதை மேலும் தீவிரப்படுத்துவது மிகவும் அவசியம். ''இரண்டே பெறுக—இனிதே வாழ்க'' என்ற சொல்படி ஒரு குடும்பத்திற்கு இரண்டே குழந்தைகள் என்ற கோட்பாட்டை ஒவ்வொருவரும் கடைப் பிடிக்க வேண்டும். இதில் தாய்மார்களின் ஒத்துழைப்பை

நான் மிகவும் வேண்டுகிறேன். ஏனெனில், அவர்கள்தான் பிறந்த குழந்தைகளை, நோய் நொடியின்றி, சிறந்த முறையில் வளர்த்து, வருங்காலத்தில் நல்ல ஒரு குடிமகனாக ஆக்கும் பொறுப் பில் உள்ளவர்கள். குழந்தை களின் எண்ணிக்கை குறைந்து இருந்தால்தான் அரசும், அவர் களுக்கு கல்வி வசதி, பிற்காலத் தில் வேலை வாய்ப்பு வசதி ஆகியவைகளை அமைத்துக் கொடுக்க இயலும். குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளா மல், பல குழந்தைகளைப்பெற்ற குடும்பம், செல்வச் செழிப்புடன் இருக்க முடியாது.

நோய் நொடி இல்லாமல் குழந்தைகளை வளர்க்க முடி யாது. பிற்காலத்தில் அக்குழந் தைகளுக்கு ஒரு வளமான வாழ் வை—பெற்றவர்களோ, அரசோ அமைத்துக் கொடுக்கவும் இய லாது. ஒரு தாய் தனது 30 அல்லது 35 வயதிற்குள் பல குழந்தைகளைப் பெற்றால், தனது ஆரோக்கியம், இளமை ஆகிய இரண்டையும் இழக்கக் கூடும். அதே நேரத்தில் இரண்டு குழந்தைகளைப் பெற்ற ஒரு தாய், ஆரோக்கியமான முறை யில் தன்னை வைத்துக் கொள்வ துடன், தனது குழந்தைகளை சிறந்த முறையில் கவனித்துக் கொள்ளவும் வாய்ப்புக்கள் உள் ளன. ஒரு குடும்பத்தின் வரு மானம் மாதம் ஆயிரம் ரூபாய் உள்ளவர்களாக இருந்தாலும், ஐந்து அல்லது ஆறு குழந்தைகள் இருந்தால், அவர்கள் கடனாளி யாகத்தான் தங்களது வாழ்க் கையை நடத்தக் கூடியநிலைமை ஏற்படும். ஆனால் அதே நேரத் தில் இரண்டு குழந்தைகளுடன், வருமானம் குறைவாக இருப்பி னும், மகிழ்ச்சியான, கடனாளி யாக இல்லாத ஒரு குடும்பத்தை நாம் பார்க்க முடியும்.

உழவையும் தொழிலையும் ஓங்கச் செய்து, பொருளாதாரத் தில் கீழ் நிலையில் உள்ள மக் களை மேம்படுத்த அரசு எவ் வளவு நல்ல திட்டங்களைத்



## 11.10.'81ல் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தேசிய குடும்பநல இருவாரத் தொடக்கவிழா

திட்டிச் செயல்படுத்தினாலும், அவற்றின் பயன் முழு அளவு சமுதாயத்திற்கு கிடைக்காமல் போவதற்கு, மக்கள் தொகைப் பெருக்கம்தான் முதல் காரணம். பள்ளிக்குச் சென்றால் இடமில்லை-மருத்துவ மனையில் வசதிகள் குறைவு - போக்குவரத்தில் நெரிசல் - வேலை வாய்ப்புகள் கிடைக்காத ஒரு நிலை - அத்தியாவசிய உணவுப் பொருள்களின் பற்றாக்குறை படிப்படியாக வளர்வது, இவை அனைத்திற்கும் முதற்காரணம், மக்கள் தொகைப் பெருக்கம் தான். எனவே, நாடும் வீடும் மேன்மை பெற, ஏழ்மை நீங்க, நோய் நொடிகள் இல்லாமல் இருக்க, சிறு குடும்ப நெறியினை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.


இத்திட்டத்தை மேற்கொள்ள அரசு பல மருத்துவ வசதிகளை இலவசமாக ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது. இதில் தற்காலிக, மற்றும் நிரந்தரமான முறைகள் உள்ளன. இத்திட்டத்தை மேற்கொண்ட நபர்களுக்கு, அரசும், தனியார் நிறுவனங்களும் ஊக்கத் தொகை அளித்து வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையம் முதல், மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை வரை, அனைத்து இடங்களிலும் இதற்கான வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குடும்பநலத் திட்டத்தை வலியுறுத்தும் அதே நேரத்தில், கருவுற்றிருக்கும் தாய்மார்களின் உடல் நலனைப் பாதுகாக்கவும்- பிறந்த குழந்தைகள் நோய் நொடி இன்றி வாழவும், பல திட்டங்களைத் தீட்டிச் செயல் படுத்தி வருகின்றோம். சிறு குழந்தைகள் எதிர்பாராத நோய்களால் தாக்கப்பட்டு இறந்து போகும் நிலை தற்போது மாறி வருகின்றது. பிறந்த குழந்தை நிச்சயம் உயிர் வாழும் என்ற நம்பிக்கையைப் பெற்றோர்கள் உள்ளத்தில் உருவாக்கவே, குடும்ப நலத் திட்டத்துடன், தாய்-சேய் நலப் பணிகளும் ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல் படுத்தப் படுகிறது. The Government is assiduously integrating Family Welfare Schemes with Maternity and Child Welfare Programmes.

இத்திட்டங்களை அனைவரும், குறிப்பாகக் கிராமப்புறங்களில் உள்ளவர்கள் எல்லோரும் முழு அளவில் பயன்படுத்திக் கொண்டால், எதிர்காலத்தில், மற்றமுன்னேற்றமடைந்த நாடுகளைப் போல் நமது நாடும் தலை நிமிர்ந்து வாழ முடியும் என உறுதியாக நம்புகிறேன்.

வணக்கம்.

*[1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11-ஆம் நாள் முதல் நடத்தப்படும் தேசிய குடும்பநலத் திட்ட இருவார விழாவையொட்டி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் சென்னை தொலைக்காட்சியில் 12-10-81-ஆம் நாள் ஆற்றிய உரை]*



# தமிழ்நாட்டில் புதிய தொழில் துவங்க சலுகைகள்

**தட்டுப்பாடு இன்றி மின்சாரம் வழங்கல், கடன் வசதி**

## மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு

தமிழ்நாட்டில் மேலும் புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்காக மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல் கவர்ச்சியாகப் புதிய பல சலுகைகளை அரசு வழங்கவேண்டும் என்று பல காலமாகச் சட்டசபையிலும், வர்த்தக சபைகளிலும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, பல புதிய சலுகைகளைத் தமிழகஅரசு அறிவித்துள்ளது.

மற்ற மாநிலங்களில் புதிய தொழில்கள் துவங்குவோருக்கு என்னென்ன சலுகைகளை அந்த அரசுகள் வழங்குகின்றன என்பதை ஆராய்ந்து பின்னர், தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் இந்தக் கவர்ச்சியான சலுகைகளையும், திட்டங்களையும் தமிழகஅரசு தயாரித்துள்ளது.

### ஐந்து புதிய தொழில் மையங்கள்

மாநிலத்தில் புதிதாக ஐந்து தொழில் மையங்கள் உருவாக்கப்படும். இங்கு துவங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு எந்தவிதத் தட்டுப்பாடும், வெட்டும் இல்லாமல் மின்சாரம் வழங்கப்படும். தூத்துக்குடி, மானாமதுரை, புதுக்கோட்டை, கடலூர், கும்மிடிப்பூண்டி ஆகியவையே அந்த ஐந்து மையங்களாகும்.

புதிய திட்டப்படி, தொழிற்சாலைகள் வைத்திருக்க அனுமதிக்கப்படும் வட்டியில்லாத வருமானவரி பாக்கி உச்சவரம்பு தற்போதுள்ள ரூ. 48 இலட்சத்தில் இருந்து ரூ. 1 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.


இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளின் கடன் வரம்பும் ரூ. 50 இலட்சத்துக்கு அதிகரிக்கப்படும். புதிதாக துவங்கப்படும் நிறுவனங்கள் தங்கள் நிரந்தர சொத்துக்களின் மதிப்பில் 20 சதவிகிதம் அல்லது ரூ. 20 இலட்சம் இரண்டில் எது அதிகமோ அந்த அளவுக்குக் கடன் பெற்றுக்கொள்ளலாம். எனினும், 6 ஆண்டுக் காலத்தில், இந்தத் தொகை ரூ. 1 கோடியைத் தாண்ட அனுமதிக்கப்படமாட்டாது.

### மேலும் தாலுக்காக்களுக்குப் பல சலுகைகள்

தமிழ்நாட்டில் 33 பின்தங்கிய தாலுகாக்களை மத்திய அரசு தேர்ந்தெடுத்து அந்த தாலுக்காக்களில் துவங்கப்படும் தொழில்களுக்கு முதலீட்டில் மானியம் வழங்குகிறது. மாநில அரசும் பின்தங்கிய 24 தாலுக்காக்களில் இதே சலுகையை வழங்க முடிவு செய்துள்ளது. மத்திய அரசு இந்தச் சலுகையின் கீழ் ரூ. 15 இலட்சம் அல்லது குறிப்பிட்ட தொழிலுக்கான சொத்து முதலீட்டில் 15 சதவிகிதத்தைத் தருகிறது. மாநில அரசும் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 24 தாலுக்காக்களில் இதே அடிப்படையில் உதவி வழங்கும்.

இந்த 57 தாலுக்காக்களையும் தவிர, தொழில் நுட்ப ரீதியில் பின்தங்கிய பகுதியாக இருந்து, ஆனால் தொழில் துவங்குவதற்கான இதர அடிப்படை வசதிகள் அமைந்திருக்கின்ற மேலும் 6 தாலுக்காக்களில் உடனடியாகப் புதிய தொழில்கள் துவங்க ஊக்குவிக்கும் பொருட்டு முதலீட்டுக் கடன் சலுகை தரப்படும்.

மாநில மற்றும் மத்திய அரசின் இந்தச் சலுகைகளைப் பெற தகுதி இல்லாத இடங்களிலும் மின் அணுக் கருவிகள், மருந்துகள், மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்று அரசு விரும்புகிறது. எனவே, அந்தப் பகுதிகளில் இத்தகைய தொழில்களைத் துவங்க முன் வந்தால், தொழிற்சாலைக்குத் திரட்டப்படும் சொத்துக்களின் மதிப்பில் 10 சதவிகித்தையோ அல்லது அந்த தொழிற்சாலையில் முறையாகப் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 20 ஆயிரம் என்ற கணக்கின் அடிப்படையிலோ (இரண்டில் எது குறைவோ அது) கடனுதவி அளிக்கப்படும்.



## விற்பனை வரி விகித முரண்பாடுகளை நீக்க நடவடிக்கை

புதிதாக அமையும் ஐந்து தொழில் மையங்களில் கடலூரையும், தூத்துக்குடியையும் ரசாயனத் தொழில்கள் நிறைந்த பகுதிகளாகவும், சென்னைக்கு அருகே இருக்கும் கும்மிடிப்பூண்டியை ஏற்றுமதிக்கான பொருட்களைத் தயாரிக்கும் தொழில் மையமாகவும் உருவாக்க அரசு விரும்புகிறது. புதுக்கோட்டையில் முக்கியமாக, மத்திய அரசின் தொழில்களுக்குத் தேவையான பொருட்களைத் தயாரிக்கும் இடமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய தொழில்களுக்கு விற்பனை பாக்கி அதிக அளவில் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதால் என்னென்ன நன்மைகள் என்பதையும், தொழிற்சாலைகளே விற்பனைவரி பாக்கிகளை நேரடியாக வர்த்தக வரித் துறைக்குச் செலுத்துவதற்குப் பதில், தொழில்துறையே தன் பொறுப்பில் அந்த பாக்கிகளை செலுத்துவதால் ஏற்படக் கூடிய நன்மைகள் பற்றியும் தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்றக் கழகம் (சிப்காட்) வர்த்தக வரித்துறையுடன் சேர்ந்து ஆராயும்.

சில குறிப்பிட்ட இனங்களைப் பொறுத்தவரை மத்திய விற்பனை வரி விகிதங்கள் அதிகமாக இருக்கின்றன. இதனால் பல தொழிற்சாலைகள் தங்களுக்கும் தேவையான மூலப் பொருட்களையும், இதர தேவைகளையும் தமிழ் நாட்டுக்கு வெளியே இருந்து வாங்குகின்றன. இந்தப் பிரச்னையை அரசு உரிய அளவில் பரிசீலித்து தீர்வு காணும். இந்த முரண்பாடு நீக்கப்படும்.

## தமிழ்நாடு அரசு டி. வி. தயாரிக்கிறது

தமிழ்நாட்டில் மேலும் மேலும் அதிக அளவில் பலர் தொழில்களில் முதலீடு செய்ய வேண்டும்; புதிய தொழில்களைத் துவங்க வேண்டும் என்ற நோக்கம் தான் இந்தச் சலுகைகள் அறிவிக்கக் காரணம்.


மாநில மின் அணுக் கழகத்தில் (எஸ். இ. சி.) தொலைக்காட்சிச் செட்டுகளைத் தயாரித்து பிலிப்ஸ் நிறுவனம் மூலம் அவற்றை விற்பனை செய்யவும் தமிழகஅரசு தீர்மானித்துள்ளது. இந்தத் திட்டத்துக்கு மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

## புகளூர் நியூஸ் பிரிண்ட் ஆலை வேலை தீவிரம்

திருச்சி மாவட்டம் புகளூரில் ரூ. 180 கோடியில் அமைக்கப்பட இருக்கும் பத்திரிகை காகித ஆலை 1984-ஆம் ஆண்டு செப்டம்பரில் செயல்படத் துவங்கும். இதற்கான வேலைகள் துவக்கப்பட்டு விட்டன.

இந்த ஆலைக்கு உலக பாங்க் ரூ. 100 கோடி கடன் தர சம்மதித்துள்ளது. ஆலையில், தமிழக அரசும், தமிழக அரசின் நிதிக் கழகங்களும் 51 சதவிகிதம் பங்குகளைப் பெற்றிருக்கும். அரசும் இந்தக் கழகங்களும் ரூ. 34 கோடியும், இந்திய தொழில் வளர்ச்சி பாங்க் (ஐ. டி. பி. ஐ.) ரூ. 61 கோடியும் வழங்கும்.

இந்த ஆலையில் ஆண்டுக்கு 50,000 டன் பத்திரிகை காகிதமும் (நியூஸ் பிரிண்ட்), 40,000 டன் எழுதுவதற்கான காகிதமும் தயாரிக்கப்படும். இதற்குத் தேவையான கரும்புச் சக்கையை தமிழகத்தில் உள்ள ஐந்து சர்க்கரை ஆலைகள் சப்ளை செய்யும். இந்த ஆலைக்கான அடிக்கல்லை நாட்ட வருமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



# கதர் விற்பனையில் திருப்புமுனை

## மாண்புமிகு கதர்-கைத்தறித் துறை அமைச்சர் திரு. எஸ். என். இராஜேந்திரன்

மாண்புமிகு கைத்தறி கதர்-மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ்.என் ராஜேந்திரன் சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது:

தீபாவளியை யொட்டி கதர்த் துணி விற்பனையில் விசேஷ தள்ளுபடி காந்தி பிறந்த தினத்தில் இருந்து கொடுக்கப்படுகிறது. பருத்தியினால் செய்த கதர்த் துணிக்கு 25 சதவீதம் தள்ளுபடி, பட்டுக்கும், கம்பளித் துணிகளுக்கும் 10 சதவீதம் தள்ளுபடி கொடுக்கப்படும்.

மொத்தம் ரூ. 5 கோடிக்கு கதர்த் துணிகள் தீபாவளி-காந்தி பிறந்தநாளை யொட்டி விற்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

கதர்ப் பட்டு பழைய விலைக்கே குறைந்த விலையில் விற்கப்படும். இம்மாதம் 1ந் தேதிக்கு முன் உற்பத்தியான கதர் பட்டுகளுக்கு இந்த பழைய விலை நிர்ணயிக்கப்படுகிறது.

**ஏற்றுமதி:**

கதர்த் துணி மற்றும் கிராமத் தொழிலில்களில் பனை ஓலையினால் செய்த பொருள்கள், கயிற்றினால் செய்யப்பட்ட பொருள்கள், கோபுரம் மார்க் சலவைசோப்பு, பாம்டா, பாம்கோலா குளிர் பானம், தரமான நல்ல எண்ணெய் போன்றவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு வசதிகளைக் கண்டறிய இந்த ஆண்டு இறுதிக்குள் உயர்மட்ட தூதுக்குழு ஒன்று வெளிநாடுகளுக்குப் போக இருக்கிறது.

**பனைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு:**

பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு பனை ஏறும் தொழிலாளிக்கும் 100 பனை வீதம் ஒதுக்கப்படுகிறது. இதன் மூலம் வேலை நிரந்தரமும் வருமான உயர்வும் கிடைக்க வழி ஏற்படுகிறது. பொதுப்பணித் துறை நிலம், பஞ்சாயத்து நிலங்கள் இவற்றில் உள்ள பனைகள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் இவ்வாறு ஒதுக்கப்படும்.

**வீடுகள்:**

கதர்த் தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு இந்த ஆண்டு 500 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். அடுத்த ஆண்டும் 500 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ. 1000 இனாம் உதவியாகக் கொடுக்கப்படும். கும்பகோணத்தில் 100 வீடுகள், தூத்துக்குடியில் 44 வீடுகள், ஈரோடு, சேலம்போன்ற இடங்களில் இந்த வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

**ஈரோடு அருகே தொழிற்சாலை:**

கதரின் தரத்தை உயர்த்தவும், வடிவமைப்புகள் தயாரிக்கவும் பவானி சாகரில் ரூ. 5.21 இலட்சம் மதிப்பில் ஓர் ஆராய்ச்சிக் கூடம் நிறுவிட அரசு அனுமதி அளித்துள்ளது. முதன் முதலாக இப்படி ஓர் ஆய்வுக்கூடம் அமைக்கப்படுகிறது. ரூ. 5 இலட்சம் செலவில் 85 பட்டை போடும் கருவிகளும் 2 பஞ்சு உடைக்கும் கருவிகளும் பல்வேறு இடங்களில் நிறுவப்படும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஈரோடு கொங்கம்பாளையம் பகுதியில் 21.12 இலட்சம் செலவில் தோல் உற்பத்தித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் 200 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

**பயிற்சிக்கு உதவி:**

கிராமத் தொழில்கள் எதுவானாலும் அதில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு ரூ. 150வீதம் 3 மாதம் உதவித் தொகையும் கொடுக்கப்படும். தொழில் தொடங்க மூலதனம் கடனாகக் கொடுக்கப்படும்.

**இயந்தரம் மூலம் எண்ணெய்:**

இயந்திரத்தின் மூலம்எண்ணை எடுக்கும் தொழிற்சாலைதொடங்கப்படும். ஏறத்தாழ 10 ஆயிரம் தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் மூலதனம் ரூ. 14 ஆயிரத்து 500. அதில் ரூ. 2500 உதவிப் பணமாக வழங்கப்படும். மீதிப் பணம் 4 சதவீத வட்டியில் சுலபத் தவணையில் வசூலிக்கப்படும்.

**கதர் உற்பத்தி:**

தமிழ்நாட்டில் கதர்த் துணிகள் ரூ. 7.54 கோடிக்கு உற்பத்தி ஆகின்றன. கிராமத் தொழில் பொருள்கள் ரூ. 42 கோடி அளவுக்கு உற்பத்தி ஆகின்றன. இரண்டிலும்சேர்த்து 4 இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்று இருக்கிறார்கள். மேலும் 33,403 பேருக்கு இந்த ஆண்டு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

**பாராட்டு:**

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கதர் கிராமக் கைத் தொழில் வாரியம் சிறப்பாகச் செயல்படுகிறது என்று அகில இந்திய கதர் வாரியத்தலைவரே பாராட்டிப் பேசி இருக்கிறார்..



# பகுத்தறிவுப் பகலவனுக்கு நினைவுத் தூண்

மனித தர்மத்திற்கே மதிப்புக் கொடுத்து, புதிய எண்ணங்கள் பூத்துக் குலுங்கும் புரட்சிப் பூங்காவாக-பார் வியக்கும் பகுத்தறிவுப் பகலவனாக-பல்கலைகளுக்கெல்லாம் பல்கலைக் கழகமாக விளங்கி, இறுதி மூச்சு உள்ள வரை தமிழினத்தின் மேன்மைக்கும் மேம்பாட்டுக்காகவுமே தொண்டு செய்த தந்தை பெரியார் அவர்களுக்கு, 2-10-81 இல் நினைவுத் தூண் எழுப்பித் தமது புதிய வரலாற்றுப் பொன்னேட்டில் ஒரு புதிய அத்தியாயத்தைச் சேர்த்தார், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள்.

இதுபோல, கி. மு. 500-ல், 'மனிதனின் துயரங்களைப் போக்குவேன்' என்ற முழக்கத்தோடு, தனது சுகபோக வாழ்வினைத் துறந்து, வியத்தகு வாதத் திறமையால் வேதாந்திகளின் வறட்டு வாதங்களையும், சாக்குருவி வேதாந்தங்களையும் மூடக்கொள்கைகளையும் முறியடித்துத் தந்தை பெரியாரைப் போலவே வாழ்நாள் முழுவதும் மனித உய்வுக்காகத் தொண்டு செய்த போதி மாதவனுக்கு, நேபாளத்தில் உள்ள கபிலவஸ்து என்னும் நகருக்கு அருகில் உள்ள லும்பினித் தோட்டத்தில் (புத்தன் பிறந்த இடம்), மௌரியப் பேரரசின் மாமன்னனாக விளங்கிய அசோகன் ஒரு நினைவு கற்றூண் (ஸ்தூபி) எழுப்பினான்.

புத்தன் மறைந்த ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு அசோகன் நினைவுக் கற்றூண் எழுப்பினான். தமிழகத்து புத்தனான தந்தை பெரியாருக்கு தமிழகத்தில் முன்னில்லாப் புதுமுறையில் நூற்றாண்டு விழா எடுத்து, அந் நூற்றாண்டு நினைவாக மாவட்டந்தோறும் பெரியார் நூற்றாண்டு நினைவுத்தூண் நிறுவுவது என்ற நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரையின்படி, திருச்சி சந்திப்புக்கு அருகில் உள்ள ரவுண்டானாவில் முதல் நினைவுத்தூணை தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் நிறுவினார்.

புத்தன் பிறந்த இடமான லும்பினித் தோட்டத்தில் நிறுவப் பெற்ற நினைவுக் கற்றூணில் புத்தனின் போதனைகளோ, இலட்சியங்களோ பொறிக்கப் பெறவில்லை. அந்தத் தூணைச் சுற்றிலும் எழுப்பப் பெற்ற கற்சுவர்களிலேயே புத்தனின் வாழ்க்கையை விளக்கும் நிகழ்ச்சிகள் செதுக்கப்பட்டன.

தந்தை பெரியாரின் சீர்திருத்தப்பணிகளுக்கெல்லாம் பாடிவீடாக—பாசறையாக விளங்கிய திருச்சியில் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களால் நிறுவப்பெற்ற பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் தந்தை பெரியாரின் அறிவியக்கப்பணியை நினைவுவுறுத்தும் பகுத்தறிவுச் சுடர் ஏந்திய வலிய கரத்தைத் தாங்கி நிற்கிறது. அதற்குக் கீழே மலர்ந்த தாமரையின் வடிவில் அமைந்த அழகிய பீடம், புரட்சிச் சிந்தனைகளும் புதுமை எண்ணங்களும் பூத்துக் குலுங்கும் தந்தை பெரியாரின் இதயத்தை நமக்கு உணர்த்துகிறது. அந்த பீடத்தை தாங்கி நிற்கும் சிங்கங்கள் தந்தை பெரியாரின் 'அஞ்சாமை'யை நமக்கு நினைவுறுத்துகின்றன. இவற்றிற்குக் கீழே, தூணின் முன்புறத்தே, அறிவார்ந்த சிந்தனை, ஆழ்ந்த அனுபவம், மேதைத் தன்மை இவற்றைக் காட்டும் தந்தை பெரியாரின் பொலிவுமிக்க முகம். இதற்கு கீழே பளபளக்கும் கருங்கல்லில்

'ஈ. வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தினைத் திருத்தி, உலகில்



நிகழ்ச்சித் தொகுப்பு :

**சாமி. பழனியப்பன்**



உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல், மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு, அதே பணியாய் இருப்பவன்''

என்ற வெண்தாடி வேந்தரின் 'இலட்சிய முழக்கம்'. தூணின் மற்ற முப்புறங்களிலும் பெரியாரின் 20 பொன்மொழிகள், சிறந்த சிற்பக்கலை வல்லுநரும் மாமல்லபுரம் சிற்பக்கலைக் கல்லூரியின் முதல்வருமான திரு கணபதி ஸ்தபதி, இந்த நினைவுத் தூணை மிக நுட்பமான வேலைப்பாட்டுடன் சிறந்த முறையில் உருவாக்கியிருக்கிறார்.


இத்தகு சிறப்பு வாய்ந்த நினைவுத் தூணின் திறப்பு விழாவையொட்டி 2-10-81ஆம் நாள் திருச்சி நகரமே எழிலும் எழுச்சியும் கொண்டு விழாக் கோலம் பெற்று விளங்கியது. மின்சார வண்ண விளக்குகளும், அழகிய அலங்கார வளைவுகளும் வரவேற்புத் தோரணங்களும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமைந்திருந்தன. காவிரியின் கரைபுரண்ட வெள்ளமோ, திரண்ட கடலலையோ என்று வியக்கத் தக்க வகையில் மக்கள் கூட்டம்!

மாலை 5-30 மணி அளவில், கிளாரினட் இசைச் சக்கரவர்த்தி திரு. ஏ. கே. சி. நடராசனின் கிளாரினட் இசை தொடங்கியது.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. கே. ஏ. சுந்தரம் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார். தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவரும், நிதியமைச்சருமான டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் ராஜா சர் எம்.ஏ. முத்தையாச் செட்டியார், எம். எல். சி. திரு. ஏ. பி. ஜனார்த்தனம் எம்.பி. பெரியார் வரலாற்று வல்லுநர் குழுத் துணைத் தலைவர் திரு நெ. து. சுந்தரவடிவேலு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு ஆகியோர் தந்தை பெரியாரின் தனிப் பெருஞ் சிறப்புக்களையும், இந்தச் சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய அரும் பெருந்தொண்டுகளையும், அவரிடம் மிக்கோங்கி நின்ற பண்புநலன்களையும் குறித்துப் பேசினார்கள்.

மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், மேடையை வந்தடைந்ததும், தலைவர் டாக்டர் நாவலர் அவர்கள் 'புரட்சித் தலைவர் அவர்கள் நினைவுத் தூணைத் திறந்து வைத்து உரையாற்றுவார்கள்' என்று குறிப்பிட்டார். முதல்வர் அவர்கள் ஒரு பொத்தானை அழுத்தியதும், நினைவுத் தூணைச் சுற்றித் தொங்கவிடப் பட்டிருந்த பளபளக்கும் பொன்னிறப் பட்டுத் திரை மெதுவாகக் கீழே இறங்கியது. கூடியிருந்த மக்களின் வாழ்த்தொலியோடு, வானமும் வாழ்த்துவதுபோல பலத்த மழை பெய்தது. கொட்டும் மழைக்கிடையே மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தைப் பார்த்து, 'இந்த மழையில் நான் நனையத் தயார்; நீங்களும் நனையத் தயாராக இருந்தாலும் அது நல்லதல்ல; எனவே மீண்டும் இதே இடத்தில் உங்களிடம் வந்து பேசுவேன். பெரியார் சேவை வாழ்க! அண்ணா நாமம் வாழ்க! என்று பேசி விழாவை நிறைவுறச் செய்தார்கள்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம், திருவாரூர், திரு. கே. தங்கராசு, திருமதி ஈ. வே. கி. சுலோசனா சம்பத் ஆகியோரும் விழாவிற் கலந்து கொண்டனர். முதல் நினைவுத் தூண் திறப்பு விழா இனிது நிறைவெய்தியது!



# ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார்

## நூற்றாண்டு நிறைவு விழா....

**இரா. வீராசாமி**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம் மாவட்டம்

தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி - மக்கள் தொடர்புத் துறையால் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் நூற்றாண்டு நிறைவு விழா செப்டம்பர் திங்கள் 30ஆம் நாள் காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் கண்காட்சியைத் துவக்கி வைத்தார். இந்தக் கண்காட்சியில் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பிறந்ததிலிருந்து, வாழ்ந்த காலங்களில் அவர் ஆற்றிய சேவைகளைப் பற்றிய புகைப்படங்களும், அவர் உபயோகித்த பொருட்களும் இடம் பெற்றன.

நூற்றாண்டு நிறைவு விழா மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவை ாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் துவக்கி வைத்துப் பேசுகையில்

''எங்களைப் போன்றவர்கள் இன்று பொது வாழ்வில் ஈடுபட்டு இந்த நிலைமைக்கு வந்திருப்பதற்கு காரணம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தான். அதனை நிறுவிய அண்ணாமலைச் செட்டியார் பெருமைக்குரியவர். அவருடைய விழாவை தமிழக அரசு கொண்டாடுவதன் நோக்கம் தமிழக மக்கள் அண்ணாமலைச் செட்டியார் போன்று சிறந்து விளங்க வேண்டும் என்பதால்தான்.

''தமிழிசைச் சங்கங்களை நிறுவி நாட்டில் தமிழிசையின் பெருமைகளை உலகிற்கு விளக்கியவர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்.''

''ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஐந்தாம் சார்லஸின் பட்டமளிப்பு விழாவிற்கு லண்டன் சென்றபொழுது தான், அங்குள்ள பல்கலைக் கழகத்தைப் பார்த்து நாமும் தமிழ்நாட்டில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்தின் எதிரொலி தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில்—

''பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்த பெருமை பலருக்கு இருக்கலாம். ஆனால் அந்தப்பல்கலைக் கழகத்தை வைத்தே தமிழ் இசைக்காக கிளர்ச்சி நடத்திய பெருமை அண்ணாமலைச் செட்டியாருக்கு உண்டு, மேலும் இவர் தமிழ் இசைப் பாடகர்கள் பரம்பரையை உருவாக்கிய வரலாறு படைத்தவர்" என்று குறிப்பிட்டார்.

செட்டி நாட்டரசர் அண்ணா

மலையார், என்ற தலைப்பில், கவியரங்கம் திருமதி சௌந்தரா கைலாசம் தலைமையில் நடைபெற்றது. திரு சொ. மீ. சுந்தரம், திரு மரியதாஸ், திரு பெரி. சிவனடியான், திரு அரு நாகப்பன், திருமதி தங்கஅன்புவல்லி ஆகியோர் கவிபாடினர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு சை.வே.சிட்டிபாபு அவர்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துணை வேந்தர் டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள், டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் திரு கம்பன் அடிப்பொடி அவர்கள், திரு பிவி.ஆர்எம். குழந்தையன் செட்டியார் அவர்கள், திருமதி உமையாள் இராமநாதன் அவர்கள் ஆகியோர் நூற்றாண்டு நிறைவு விழா வாழ்த்துரையாற்றினர்.

''இன்று தமிழக அரசு தமிழ்ப் பெரியார்களுக்கும், அறிஞர்களுக்கும், விடுதலை வீரர்களுக்கும், பண்பாளர்களுக்கும் அவர்களுடைய பிறந்த நாட்களையும், நினைவு நாட்களையும் நூற்றாண்டு விழாக்களாக சீரும் சிறப்புமாக பாராட்டி அவர்கள் இன்றைய தலைமுறைக்குவிட்டுச் சென்றுள்ள பணிகளை நினைவு கூர்ந்து, அம்மாதிரியான ஒப்பிலாப் பணிகள் மேலும் தொடர முறைகள் அமையும், இந்தச் சிறந்த கொள்கையின் அடிப்படையில் இன்று காரைக்குடி பெருநகர் கம்பன் மணி மண்டபத்தில் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் பிறந்த நாள் விழா நூற்றாண்டு விழாவாக தமிழ் அறிஞர்கள் பங்கு பெற்று மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளது. கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்தில் இரண்டு புண்ணுடையர் கல்லாதவர் என்று திருவள்ளுவர் சொன்னதை மெய்ப் பொருளாக்க 50 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளல் வாண்மையாளர் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சிதம்பரத்திற்கு அருகில் பல்கலைக்கழகம் நிறுவினார். இது செயற்கரிய செயலாகும்'' என்று செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கே. ஏ. சுந்தரம் இ.ஆ.ப. அவர்கள் தம் வரவேற்புரையில் குறிப்பிட்டார்.''

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கா.காளிமுத்து அவர்கள் விழா நிறைவுப் பேருரையாற்றினார். அவர் குறிப்பிட்டார்;

''நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்பதற்கு ஏற்ப ராஜா சர் அண்ணாமலையார் குடும்பம் முன்னுதாரணமாக விளங்கி வருகிறது.

''தமிழ் இலக்கியத்தில் எத்தனையோ மன்னர்களைப்பற்றிப் படித்திருக்கிறோம். அவர்களில் தமிழை வளர்த்தவர்களை தமிழகம் மறக்காது. மக்களின் இதயத்தை ஆண்ட மன்னர் ராஜா சர் அண்ணாமலைஆவார். ஏழைகளைப் பற்றி அவர் கவலைப் பட்டார், ஏதும் அறியாத அவர்கள் கல்விக் கனிபெற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை உருவாக்கினார். திராவிடர் இயக்கத்தினரின் மெக்காவாக, ஜெருசலமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் விளங்குகிறது. அங்கிருந்து தான் பல தலைவர்கள் உருவாகி வந்து இருக்கிறார்கள். சரித்திரத்தை மாற்றும் தலைவர்களை சாதாரண மக்களிடமிருந்து உருவாக்கிக் காட்டியது இந்தப் பல்கலைக் கழகம்''.

விழாவில் காரைக்குடி நகர மக்களின் சார்பில் கம்பன் அடிப்பொடி அவர்கள் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எச்.எம். பாண்டே இ.ஆ.ப. நன்றி கூறினார்.

விழா முடிவில் அரசு நர்த்தகி செல்வி சுவர்ணமுகியின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.





# கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

**கே. எஸ். லோகவிநாயகம்,**
தலைமைப் பொறியாளர்,
நெடுஞ்சாலை—கிராமப் பணித்துறை.

இந்திய துணைக் கண்டத்தில் தமிழ்நாடு முக்கியமானதொரு மாநிலமாகும். இது 1,30,069 சதுர கிலோ மீட்டர் பரந்து விரிந்துள்ளது. 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கீட்டின்படி 4,12,00,000 மக்கள் இம்மாநிலத்தில் வாழ்கிறார்கள். தற்சமயம் எடுத்த கணக்கீட்டின்படி மாநில மக்கட் தொகை 4,80,00,000 ஆக அதிகரித்துள்ளது. நான்கில் மூன்றிற்கு மேற்பட்ட மக்கள் கிராமப் புறங்களில் வசிக்கிறார்கள்.

### போக்குவரத்து வசதிகள் துறை

தமிழக அரசு மாநில முன்னேற்றத்திற்காக விவசாயம், தொழில், சக்தி, போக்குவரத்து ஆகிய துறைகளில் கவனம் செலுத்தி வருகிறது. போக்குவரத்துத் துறையில் ஏற்படும் முன்னேற்றம் மற்றத் துறைகளை மேலும் முன்னேற்றமடையச் செய்ய உதவுகிறது.

### ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள்

1961-ஆம் ஆண்டில் ஊராட்சி ஆட்சி திருத்தி அமைக்கப்பட்ட பிறகு, சுமார் 40,000 கி.மீ. நீள மாவட்ட வாரிய சாலைகள் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் சட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. அவற்றில் 17,000 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ஊராட்சி ஒன்றியங்களிடமும், 23,000 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ஊராட்சிகளிடமும் ஒப்படைக்கப்பட்டன.

தற்சமயம் தமிழகத்தில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியச்சாலைகள் ஊராட்சி ஒன்றியங்களால் உள்ளூர் சாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் பராமரிக்கப்படுகின்றன. இந்த நிதி ஒதுக்கீடு நில அமைப்பையும் மக்கள்தொகையையும்பொறுத்து செய்யப்படுகிறது.

### கிராமப் பணிகள் திட்டம்

நிதி பற்றாக்குறையால் ஊராட்சிகளால் சாலைகளை நன்கு பராமரிக்க முடியவில்லை. 'கிராமப் பணிகள் திட்டத்தின்' கீழ் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் புதிய சாலைகள் அமைப்பதுடன் தற்போதுள்ள சாலைகளை மேம்பாடு செய்கின்றன. இதற்கு நிதி உதவி அரசிடமிருந்தும் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்தும், மற்றும் பொது மக்களிடமிருந்தும் பெறப்படுகிறது.

### பிற சாலைகள் திட்டம்

பிற சாலைகள் திட்டத்தின் கீழ் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாடு செய்யப்படுகின்றன. பாலங்கள் கட்டப்படுகின்றன. பிறசாலைகள் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட சாலைகளைத் தொடர்ந்து உள்ளாட்சி மன்றங்கள் பராமரிக்கின்றன.

### பேருந்து தடச் சாலைகள் திட்டம்

பேருந்துகள் செல்லும் சாலைகளை மேம்பாடு செய்து படிப்படியாக அரசு சாலைகளாக மாற்றுவதற்கு மாநில அரசின் முழுநிதி உதவியுடன் 'பேருந்து தடச் சாலைகள் திட்டம்' செயலாக்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள சாலை வசதிகள் அனைத்திந்திய ரீதியில் ஒப்பிடப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பரப்பையும் மக்கட்தொகையும் பொறுத்த சாலைகளின் சுருக்கம்

| | 100 சதுர கி.மீ. பரப்பில் | ஒரு லட்சம் மக்கட் தொகைக்கு |
|---|---|---|
| தமிழகம் | 84.69 | 264.64 |
| அனைத்திந்தியா | 41.83 | 250.88 |

தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பலதரப்பட்ட சாலைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | கி.மீ. |
|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் | 1865 |
| மாநில நெடுஞ்சாலைகள் | 1814 |
| மாவட்டப் பெருஞ்சாலைகள் | 14,028 |
| மாவட்டப் பிற சாலைகள் | 17,714 |
| ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் | 57,920 |

இவற்றில் அரசு சாலைகள் மட்டுமே சமச்சீர் பருவச் சாலைகளாக உள்ளன. பெருவாரியான ஊராட்சிமற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் கல்தட சாலைகளாகக் கூட இல்லை.

**கிராமச் சாலைகள் திட்டம்**

1972-ஆம் ஆண்டில் முதலில் 1500-ம் அதற்கு மேற்பட்ட மக்கட் தொகையுள்ள கிராமங் களுக்கு சாலை வசதிகள் அமைப் பதற்காக 'கிராமச் சாலைகள் திட்டம்' தொடங்கப்பட்டது.

மக்கள் தொகை 1,500-ம் மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் 1,000 முதல் 1,500 வரை மக்கட் தொகையுள்ள கிராமங்களின் பாதி எண்ணிக்கைக்கும் சாலைகள் அமைக்க ஆறாவது மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-90) வழி வகுக் கப்பட்டுள்ளது. இதற்கு 140 கோடி ரூபாய் தேவைப்படும். ஆறாவது திட்டக்காலத்தில் (1980-85) சாலைகள் அமைக்க ரூ. 70 கோடி தேவை.

கிராமச் சாலைகள் திட்டத் தில் 1,500-க்கு மேற்பட்ட மக்கட் தொகையுள்ள கிராமங் களுக்கும் முதன்மையிடம் அளித் தாலும், பின்தங்கிய மாவட்டங் களை கருத்திற்கொண்டு கூட்டுக் கிராமங்களின் மக்கட் தொகை அடிப்படையிலும்சாலைவசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பின்தங்கிய மாவட்டங்களாக தருமபுரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகியவற்றிற் கும், பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிக்கும், மீனவர் பகுதிக்கும் இது பொருந்தும்.

கிராமச் சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டம்.

தமிழகத்தில் மொத்தம் 23,047-கிராமங்கள் உள்ளன. அனைத்து கிராமங்களுக்கும் மேம்பாடு செய்த சாலைகள் 35,366 கி. மீ. நீளத்திற்கு ரூ. 670 கோடி செலவில் அமைக்க வேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு :

| மக்கட்தொகை | மொத்த கிராம எண்ணிக்கை | சாலைகள் இதுவரை இணைக்கப் பட்ட கிராமங்கள் | சாலைகள் அமைக்க வேண்டிய கிராமங்களின் எண்ணிக்கை | அமைக்க வேண்டிய சாலைகளின் நீளம் (கி.மீ.) | மதிப்பு கோடி ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| 1500 மற்றும் அதற்கு மேல் | 3762 | 1234 | 2528 | 5733 | 103 |
| 1000—1500 | 2568 | 539 | 2029 | 5890 | 106 |
| 1000-க்கு குறைவாக | 16,717 | 9234 | 7483 | 25,611 | 461 |
| மொத்தம் | 23,047 | 11,007 | 12,040 | 35,366 | 670 |





**கிராமச் சாலைகள் திட்டத்தின் பயன்**

நடப்பு நிதி ஆண்டில் (1981-82), ரூ. 10.50 கோடி இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமப் புற மக்களின் பயனுக்காக கிராமச் சாலைகள் திட்டம் படிப்படியாக அனைத்துக் கிராமங்களும் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்படும்.

இதுவரை கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் அமைத்த சாலைகள் நீளமும், செலவினமும், பயன்பெற்ற கிராமங்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு:

| ஆண்டு | பயன் பெற்ற கிராம எண்ணிக்கை | | | சாலையின் நீளம் (கி.மீ.) | மதிப்பு லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| | முக்கியக் கிராமங்கள் | இதர கிராமங்கள் | மொத்த கிராமங்கள் | | |
| 1972—73 | 58 | 116 | 174 | 113 | 228 |
| 1973—74 | 303 | 368 | 671 | 701 | 327 |
| 1974—75 | 315 | 342 | 657 | 1002 | 313 |
| 1975—76 | 217 | 311 | 528 | 714 | 247 |
| 1976—77 | 134 | 149 | 283 | 350 | 241 |
| 1977—78 | 88 | 113 | 201 | 281 | 149 |
| 1978—79 | 67 | 100 | 167 | 228 | 167 |
| 1979—80 | 59 | 49 | 108 | 126 | 181 |
| 1980—81 | 261 | 262 | 523 | 510 | 600 |
| மொத்தம் | 1502 | 1810 | 3312 | 4025 | 2453 |

# வெள்ளி விழா காணும் எல்.ஐ.சி

"பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லை
அருள் இல்லார்க்கு
அவ்வுலகம் இல்லாகியாங்கு'' என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

ஆம்! இது நூற்றுக்கு நூறு உண்மைதான். ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கருப்பொருள் முறையாகப் பொருளைச் சேமிப்பதுதான். இருந்தால் முதுமைக் காலத்தில் அனுபவிக்கவும், இறந்தால் மனைவி மக்கள் வடிக்கின்ற கண்ணீரைத் துடைத்து வாழ்நாள் முழுவதும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதுதான் ஆயுள் காப்பீட்டுக் கழகம்.

ஆயுள் காப்பீட்டுக் கழகம் என்பது நாட்டுடைமை ஆக்கப்படுவதற்கு முன்னால் அதாவது 1.9.1956க்கு முன்னால் 245 தனியார் நிறுவனங்களாகச் செயல்பட்டது.

ஆயுள் காப்பீட்டுக் கழகம் இந்தியாவிலுள்ள 68 கோடி மக்களுக்கு அதன் பயன் எட்டவேண்டும் என்பதற்காகவே அது நாட்டின் பட்டி தொட்டிகள் எல்லாம் மூலை முடுக்குகள் எல்லாம் பரவ வேண்டும் என்பதற்காகவே நாட்டுடைமையாக்கப்பட்டது.

ஆயுள் காப்பீடு என்றாலே முன்பு ''மரண பண்டு'' என்று இருந்த நினைப்பை மாற்றி அது குழந்தைகள் கல்விக்கும், திருமணத்திற்கும் ஒய்வுகால உதவிக்கும் என்று மாற்றி பல்வேறு திட்டங்களை நடை முறைப்படுத்தி வருகிறது.

''யானை இருந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம் பொன்.''

ஆயுள் காப்பீட்டுத் தொகைக்கும் மற்ற சேமிப்புகளுக்கும் அடிப்படையில் நிறைய வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக வங்கியில் மாதாமாதம் குறிப்பிட்ட தொகை போட்டால் எதிர்பாராதவாறு திடீரென்று மரணம் ஏற்பட்டால் எதிர்பாராதவாறு அவர்போட்ட தொகையும் அதற்கான வட்டியும் தான் அவருக்குக் கிடைக்கும்.

ஆனால் ஒருவர் ஆயுள் காப்பீட்டுப் பாலிசி பெறுவாரேயானால் அவர் பெற்ற அந்த நாள் முதற்கொண்டு எந்தத் தொகைக்கு தமது ஆயுளை காப்பீடு செய்தாரோ அந்தத் தொகைக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்.ஐ.சி) பொறுப்பேற்கிறது. யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்களே அது போல ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆள் இருந்தாலும் இறந்தாலும் அவரது குடும்பத்திற்குப் பாதுகாப்பளிக்க வழிவகை செய்கிறது.

குழந்தைகளின் பிற்கால படிப்பிற்குப் பொருளுதவி செய்யும் பத்திரங்கள் இருக்கின்றன. குழந்தைகள் பெரியவர்களானால் திருமணம் செய்ய பொருளுதவி செய்யும் பத்திரங்களும் உண்டு.

**ஜி. ஆனந்தன்**

வேலைக்கு முதன் முறையாகச் சென்ற தொழிலாளி ஒருவர் தனது பிற்கால திட்டம் பற்றி தெளிவு பெறாத தொழிலாளி தனது முடிவை 5 ஆண்டுகளுக்குப் பிறகு தெளிவாக்கும் வண்ணம் உடனடியாகப்பத்திரம் வாங்கும் வகையில் எடுக்கும் திட்டங்களும் உண்டு. அவர் 5 ஆண்டுகளுக்குப் பிறகு தனது முடிவை முறைப்படுத்த திட்டமிட - வழிவகுக்க தக்க பத்திரங்கள் உண்டு.

## மக்கள் பணிக்கு அர்ப்பணிக்கிறது

இது தவிர ஒருவர் தான் காப்பீடு செய்த 10,15,20 ஆண்டுகள் வரை காத்திராமல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தவணையாக தனது காப்பீட்டுத் தொகையைப் பெற்று அவ்வப்போது குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில்'' ஆண்டிசிபேடட் என்டோன்மென்ட் பாலிசி'' என்ற திட்டங்களும் உண்டு.

ஆயுள் காப்பீட்டுக் கழகம் உரிமை பெற்ற இந்திய துணைக் கண்டத்தில் உருவாக்கப்பட்டு அதாவது 1.9.1956ல் உருவாக்கப்பட்டு இன்றோடு 25 ஆண்டுகள் (1.9.1981) ஆகின்றன. எனவேதான் வீறு நடைபோட்டு வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது.

அன்றாடம் கோடிக் கணக்கில் வந்து குவியும் பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பது கவனத்திற்குரியதாகும்.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு வந்து சேரும் கோடிக் கணக்கான பணம் மக்கள்பணிக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. ஆம்! மக்களின் அத்தியாவசியத்தேவைகளான உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படைத் தேவைகள் நிறைவு பெற ஆயுள் காப்பீட்டுக் கழகம் தனது பொருளை செலவழிக்கிறது. செலவழிக்கிறது என்பதைவிட முதலீடு செய்கிறது என்பதே சரியானது.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'' என்றார் திருவள்ளுவர். உழவுத் தொழில் தான் இந்தியாவின் தலையாய தொழிலாக இருந்து வருகிறது. மேழிச் செல்வம் தழைக்க ஆயுள் காப்பீட்டுக் கழகம் 1970ல் 9 கோடியே 70 லட்சம் கொடுத்தது. அதுவே 1980ல் 39 கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்நாட்டின் விவசாயம் விரிவுபட - பயிர்த் தொழில் பரவ -பஞ்சம் தவிர்க்க உழவர்கள் வாழ்வு பெற உதவித் தொகை கடந்த 10 ஆண்டுகளில் ஏறத்தாழ 4 மடங்கு அதிகமாகியிருக்கிறது. ''நீரின்றி அமையாது உலகு'' என்றார் தமிழ் மறை கண்ட திருவள்ளுவர். இந்திய துணைக் கண்டத்தில் நீரையே பார்க்காத பாலைவனங்களும் உண்டு. ஆண்டாண்டு நீரால் மிதக்கும் வெள்ளப் பகுதிகளும் உண்டு. எது எவ்வாறானாலும் குடிநீர் என்பது அன்றாடப் பிரச்சினை. குடிநீருக்காகக் குடம்ஏந்தி கால்கடுக்க மைல் கணக்கில் நடக்கின்ற தாய்மார்கள் இந்தியாவில் ஏராளம் உண்டு. குடிநீர்ப் பிரச்சினை தீர்வதற்காக 1970-71ல் ஆயுள்காப்பீட்டுக் கழகம் அளித்த உதவி 11 கோடியே 21 இலட்சம். இதுவே 1979-80ல் 49 கோடியே 95இலட்சமாக உயர்ந்திருக்கிறது. அதனால்தான் மக்கள் பணியில் மகத்தான 25 ஆண்டுகள் இன்று கடந்து விட்டது எல்.ஐ.சி என்று நாம் பெருமைப்படுகிறோம்!

### கோடிக் கணக்கில்

உணவுக்குப் பிறகு உறையுள் அடுத்த இடம் வகிக்கிறது. குடிசையின்றி வானமே கூரையாக வாழ்கின்ற மக்கள் கோடான கோடி. எனவே குடியிருப்புப் பிரச்சினை தீர்வு பெற-மாநிலங்களின் குடிசை மாற்று வாரியங்களுக்கும், கூட்டுறவு வீடு கட்டும் கழகங்களுக்கும் பொருளுதவி அளிக்கின்ற வகையில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் 1970ல் 37 கோடியே 55 இலட்சம் அளித்ததென்றால் அது 1979-80ல் 122 கோடியே 75 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. ஏறத்தாழ மும்மடங்குக்கும் அதிகமாக உதவி பெருகியிருக்கிறது.

சிப்பமாகக் கட்டி வைத்த சித்திரப் பூம் பட்டாடை போல, அணியாத முத்து மணிமாலை போல தடவிச் சுகங்காணாத சந்தனக் கட்டை போல வருகின்ற பணத்தை முடக்காமல் வளருகின்ற இந்தியாவின் அடிப்படை தேவைகளை நிறைவு செய்யவே மக்கள் அளிக்கின்ற சேமிப்புத் தொகை பயன்படுத்தப்படுகிறது. அகல் விளக்கில் அன்றாடம் பணி செய்த மனித இனம் இன்று மின்சாரத்தை எல்லாவற்றிற்கும் பயன்படுத்தும் அளவு அறிவை விரிவாக்கி யிருக்கிறது என்று சொல்லும் அளவுக்கு மின்சாரத்தேவை மனிதன்வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமாகிறது.

மின்சாரம் ஈடுபடாத எந்தத் துறையுமே இல்லை. மின்சாரம் இல்லாமல் எப்படி மக்கள் வாழ்ந்தார்கள் என்று பாமரத்தனமாக நாம் நினைக்குமளவுக்கு இன்று மின்சாரம் மக்களின்வாழ்க்கைக்கு மிகமிகத் தேவையான அடிப்படை அவசியமாக ஆகிவிட்டது. அந்த மின்சார சக்தி நீர் மின்சக்தியால்தான் இதுநாள் வரை பெறப்பட்டுவந்தது. நீர் மின்சக்தி என்றால் கண்டபடி ஓடும் ஆறுகளை முறைப்படுத்தி அணைகட்டி அதனால் நீர் மின்சக்தியை உற்பத்தி செய்கிறோம். அந்தத் துறைக்கான 1970-71ல் 70கோடியே 14 லட்சம் ஆயுள் காப்பீட்டுக் கழகம் உதவியிருக்கிறது. அதுவே 1979-80ல் 175 கோடியே 36 லட்சமாக உயர்ந்திருக்கிறது. மின்சார உற்பத்தியும் பயன்படும் தொழில் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்து கிடப்பதைக் காணலாம்.

அதனால் தான் முழுக்க முழுக்க விவசாய நாடாக இருந்த இந்தியாவைத் தொழில்மயமாக்க முனைந்தார். மனிதகுல மாணிக்கம் பண்டித நேரு அவர்கள். அணைக்கட்டுகளும், நிலக்கரிச் சுரங்கங்களும், தொழிற்பேட்டைகளுமே நான் வணங்கும் கோயில்கள் என்று அழகாகச் சொன்னார் அவர். அதற்கிணங்க உரிமை பெற்ற இந்தியா தொழில்துறையில் வாயு வேகத்தில் முன்னேறி வருகிறது. தொழில் வளர்ச்சிக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகம் 1970-71ல் 6 கோடியே 7இலட்சம் மட்டுமே தர முடிந்தது. ஆனால் 1979-80ல் ரூ. 53 கோடியே 97 இலட்சம் தந்திருக்கிறது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பது பழமொழி. எனவேதான் மக்கள் சேமிக்கும் பணத்தை மக்கள் நலனுக்கே உதவி வருகிறது ஆயுள் காப்பீட்டுக் கழகம்.

### மருத்துவப் பரிசோதனை இல்லாத புதிய திட்டம்

இன்சூரன்ஸ் அல்லது காப்பீடு என்றால் ஏதோ மாதச் சம்பளம் வாங்கும் குமாஸ்தா தான் செய்ய முடியும் என்கிற நிலை மாறி-அன்றாடம் கூலி பெறும் தொழிலாளிகளும் பயனடையும் வண்ணம் ஆயுள் காப்பீட்டுக் கழகம் இந்த வெள்ளிவிழா ஆண்டில் கிராமியத் தொழிலாளர்களுக்காகவே புதிய பாலிசியை அறிமுகம் செய்து வைத்திருக்கிறது. அதுதான் ''ஜனரட்ச பாலிசி'' இது மருத்துவப் பரிசோதனையே இல்லாமல் யாவரும் எடுக்கும் வண்ணம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது கிராமப்புற மக்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் வழங்கிய வரப்பிரசாதம் என்றே சொல்லலாம்.

குடும்பத்திற்கு ஒரு பாலிசி என்றாலும் இந்திய மக்கள் கணக்குப்படி 17 கோடி பாலிசிகள்





தேவை. ஆனால் 19 இலட்சத்து 55 ஆயிரம் பாலிசிகள் வழங்கப் பட்டுள்ளன.

இந்தக் குறையைப் போக்க நகரப்புறங்களில் மட்டுமல்லாது பரந்து கிடக்கும் கிராமங்களை யும் கவனிக்க வேண்டும் என்ப தற்காகவே - படித்த இளைஞர் கள் - வேலையின்மையால் தொல் லைப்படுவதைத் தீர்ப்பதற்கா கவே - வேலையில்லாத் திண் டாட்டத்தைப் போக்குவதற் காகவே கிராமிய தொழில்முறை முகவர் திட்டத்தை இந்தவெள்ளி விழா ஆண்டில் அறிவித்திருக் கிறது. வாழு - வாழவிடு என்ற சாதாரணப் பழமொழிக்கேற்ப- இளைஞர்கள் வாழவும், தொழில் புரிந்து ஊழியம் பெறவும்-அதே சமயத்தில் கோடானுகோடிமக்க ளின் இல்லத்தில் ஒளிவிளக்கு ஏற்றி வைக்கவும் அவர்கள்ஆயுள் காப்பீட்டுக் கழக முகவர்களாக- (ஏஜெண்டுகளாக) விதிமுறை களைத் தளர்த்தி கிராமிய தொழில் முறை முகவர் திட் டத்தை அறிவிக்கப்பட்டுள்ளது.

**உங்கள் நலனுக்கு நாங்கள் பொறுப்பு**

நாடு வாழ - நாமும் வாழ- சமுதாயம் தழைக்க - தனி மனி தன் அவன் குடும்பம் பிழைக்க புதிய முகவர் திட்டம் அமுல் படுத்தப்படுகிறது.

காப்பீடு செய்தவர் அவர் குறிப்பிட்ட காலம் முடிந்தாலோ அல்லது அவர் மறைந்தாலும் அவர் குடும்பம் துயரத்தின் கோரப் பிடியிலிருந்து விடுபட காப்பீட்டுத் தொகை- பாதுகாப் பளிக்கிறது.

இந்த வகையில் 1970ல் 3 இலட்சத்து 21 ஆயிரம் பேருக்கு பாலிசிகளின் உரிமைத் தொகை வழங்கப்பட்டது என்றால் 1980-81ல் 7 இலட்சத்து 4 ஆயிரம் பேருக்கு உரிமைத் தொகை வழங் கப்பட்டுள்ளது. எனவேதான் கீதையில் கண்ணன் சொன்ன சொல் எல்.ஐ.சி., சின்னத்தில் பொறிக்கப்பட்டுள்ளது ''யோஹ மம் வஹாம் யஹம்'' அதா வது''உங்கள் நலனுக்கு நாங்கள் பொறுப்பேற்கிறோம்''


ஆம்! இந்தியத் துணைக் கண் டத்தின் 68கோடி மக்களுக்கும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் பொறுப்பேற்கிறது என்றால் அது மிகையாகாது.



## கொள்கையைப் பரப்பும் வழி

ஒரு கொள்கையைப் பரப்புவதென்றால் 'அதற்கு நான் ஒரு வழியையே கடைப்பிடிப்பது வழக்கம். என்னுடைய சொந்த நடத்தையில் அக்கொள்கையைக் கடைப்பிடித்துக்காட்டுவதன் மூலமாகவும் அறிவு வளர்ச்சியில் பற்றுள்ளவர் களுடன் விவாதிப்பதன் மூலமாகவுமே எந்தக் கொள்கையையும் நான் பரப்பி வருவேன்.

# கலப்புத் திருமணம் வரலாற்றுப் பார்வை



—டாக்டர் ஆறு. இராமநாதன்,

இரண்டு வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் மணந்து கொள்வதையே கலப்புத்திருமணம் என்று குறிப்பிடுகின்றோம். கலப்புத் திருமணம் எப்போது தோற்றம் பெற்றது? தமிழ்ச் சமுதாயம் கலப்புத் திருமணம் செய்து கொண்டோரை எவ்வாறு நடத்தியது? கலப்புத் திருமணம் செய்து கொள்வோரின் இன்றையநிலை என்ன? இவற்றைப் பற்றியெல்லாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால் நாம் கடந்துவந்த பாதையைப் பற்றிய அறிவு நாம் செல்ல வேண்டிய பாதையைத் தேர்ந்தெடுக்கத் துணை புரியுமல்லவா?

## கலப்புத் திருமணம் தோற்றம்

சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தில் தொழில் பிரிவுகளே காணப்பட்டன. வெவ்வேறு தொழில் பிரிவைச் சேர்ந்தவர்களிடையே மண உறவு கொள்வதில் தடை எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் ஆரியர்களின் வரவுக்குப் பின் அவர்களின் செல்வாக்கு ஓங்கத் தொடங்கிய பின் இந்நிலை மெல்ல மாறத்தொடங்கியது. பல்வேறு சாதிகளும் அச்சாதிகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளும் தீண்டாமையும் தோன்றி வளர்ந்தன. ஒவ்வொரு சாதிக்கும் கடமைகளும் உரிமைகளும் நிர்ணயம் செய்யப்பட்டு சாதிக் கட்டுப்பாடுகள் மிகுந்தன. சாதிக் கட்டுப்பாடுகளை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பல்லவர் காலத்திலேயே இந்நிலை உச்ச கட்டத்தை அடைந்தது. ஆங்கிலேயர் காலம்வரை இந்நிலை நீடித்தாலும் அவர்கள் காலத்தில்தான் இந்நிலை மெல்ல மாற்றம் பெறத் தொடங்கியது.

சமுதாயத்தில் சாதிக் கட்டுப்பாடுகள் மிகுந்த காலகட்டத்தில்தான் இருவேறு சாதியினர்க்கிடையே மண உறவுகள் தடை செய்யப் பட்டிருக்க வேண்டும். இத்தடையை மீறி நடைபெறும் திருமணங்கள் கலப்புத் திருமணங்கள் எனப்பட்டன. எனவே சாதிக் கட்டுப்பாடுகள் மிகுந்த காலகட்டமே கலப்புத் திருமணங்கள் தோன்றிய கால கட்டம் எனலாம்.

## நாட்டுப்புற இலக்கியச் சான்றுகள்

காதல் உணர்வு, சாதி, மதம் மொழி, இனம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்தது. காதலர்கள் இந்த வேறுபாடுகளைக் கடந்து ஒன்றாக இணைந்து வாழ்க்கை நடத்த விழைவது இயல்பு. தடைகளை உடைத்தெறிந்து விட்டு இணைந்து வாழ்ந்த காதலர்களின் வாழ்க்கை இலக்கிய வடிவம் பெறுவது இயற்கையே. ஆனால் இத்தகைய காதலர்களைப் பற்றிய ஏட்டிலக்கியச் சான்றுகள் நமக்கு மிகுதியாகக் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் நாட்டுப்புற இலக்கியச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. பண்டைய சமுதாயத்தில் - அதாவது சாதிக் கட்டுப்பாடுகள் தோன்றியதற்குப் பிற்பட்ட சமுதாயத்தில் - கலப்புத் திருமணம் புரிந்து கொண்டுவாழ முயன்றவர்களின் நிலை என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு அவை பெருந்துணை புரிகின்றன. இங்கு நாட்டுப்புறக் கதைப் பாடல்களின் கதைகள் சிலவற்றைச் சான்றாகக் காணலாம்.

## முத்துப்பட்டன் கதை

முத்துப்பட்டன் ஒரு பிராமணன். வாலப் பகடை என்ற சக்கிலியனின் மகளிரான பொம்மக்கா, திம்மக்கா ஆகியோரைக் காதலித்து அவர்களை மணக்க விரும்பினான். இதனை அறிந்த அவன் சகோதரர்கள் அவனைக் கொலை செய்ய முயன்றனர். முத்துப்பட்டன் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டான். வாலப்பகடை விதித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு அவன் மகளிரை மணந்தான். நிபந்தனைகளின் படி அவர்களின் சேரியிலேயே வசித்தான். அவர்களின் தொழிலான செருப்புத் தைக்கும் தொழிலைச் செய்தான். இப்படியிருக்கும்போது ஒரு நாள் சக்கிலியர்களின் மாடுகள் களவாடப்பட்டன. அதனை மீட்கும் போராட்டத்தில் அவன் உயிரிழந்தான். அவன் மனைவியர் அவனோடு உடன்கட்டை ஏறி உயிர் விட்டனர். இவர்கள் மூவரும் மக்கள் வணங்கும் தெய்வமாயினர்.

சுமார் 350 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இக்கதை சமுதாயத்தில் மிக உயர்ந்த சாதியாகக் கருதப்படும் பார்ப்பன சாதி ஆணுக்கும், மிகத் தாழ்ந்த சாதியாகக் கருதப்படும் சக்கிலியச் சாதிப் பெண்களுக்கும் இடையே ஏற்படும் காதல் பிணைப்பைக் காட்டுகிறது. அது மட்டுமில்லாமல் கலப்பு மணத்தில் ஓரளவு வெற்றிபெற்றமணமாகக் கருதப்படும் சான்று இது ஒன்றேயாகும். இவ்வெற்றிக்கான காரணம் என்ன என்று காணலாம்.

உயர்ந்த சாதி ஆண் தாழ்ந்த சாதிப் பெண்ணை மணந்து கொள்வதை மனுதர்மம் அனுமதிக்கின்றது. அப்படியிருந்துங் கூட முத்துப்பட்டனின் காதலை அவன் சகோதரர்கள் விரும்பவில்லை. அவனைக் கொன்றுவிடவே முயன்றனர். சாதிவெறியானது அவர்களுக்குச் சாதகமான மனுதர்மத்தைக் கூட புறக்கணிப்பதைக் காணமுடிகிறது- இதனாலேயே முத்துப்பட்டனால் சக்கிலியப் பெண்களை மணந்து கொண்டு தன்னுடைய இருப்பிடம் சென்று வாழ இயலாமல் போய்விட்டது. அதற்கான முயற்சியைக்கூட அவன்செய்யவில்லை. தன் காதல் நிறைவேற வேண்டுமானால் வாலப் பகடையின நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. நிபந்தனையின்படி முத்துப்பட்டன் சக்கிலியனாக மாறி அவர்



களின் சேரியிலேயே தங்க முன் வந்த போது சக்கிலியர் சமுதாயம் அவனை ஏற்றுக் கொண்டது. அவர்கள் ஏற்றுக் கொண்டதாலேயே முத்துப்பட்டனின் காதலும் வெற்றி பெற்றது.

### சின்னநாடான் கதை

சித்தன்விளை என்ற கிராமத்தில் சின்னநாடான் என்றொரு கிராமத் தலைவன் இருந்தான். அவனுக்குக் குமாரசாமி என்ற ஒரே மகன் இருந்தான். குமாரசாமிக்கு நான்கு சிற்றப்பமார்கள். அவர்களுக்குப் பிள்ளையில்லையாதலால் ஐந்து குடும்பங்களுக்கும் குமாரசாமியே வாரிசு. அவர்களுடையே ஒரே சகோதரியின் மூன்று வயது மகளான பூவணைஞ்சு என்பவளைக்குமாரசாமிக்கு மணமுடித்தனர். அப்போது குமாரசாமி பதினெட்டு வயது இளைஞன். அவன் நாவித இனத்து மங்கை ஒருத்தியைக் காதலித்து அவளுடன வாழ்ந்து வந்தான். பூவணைஞ்சு அவள் பெற்றோர் வீட்டில் இருந்தாள்.

பூவணைஞ்சு பருவமெய்தும் வரை குமாரசாமியை அவன் தந்தையும் சிற்றப்பமாரும் கண்டிக்கவில்லை. பூவணைஞ்சு பருவமெய்தியபோது அவளோடு சேர்ந்து வாழ அவர்கள் அவனை அழைத்தார். அவன் மறுத்தான். நாவிதப் பெண்ணுக்குப் பணம் கொடுத்து விரட்டப் பார்த்தனர். அவள் ஒப்பவில்லை. இருவரையும் பயமுறுத்திப் பார்த்தனர். குமாரசாமி காதலில் உறுதியாக இருந்தான். காதலர்களைப் பிரிக்கத் தாங்கள் செய்த முயற்சிகள் தொடர்ந்து தோல்வியுறவே அவர்கள் அவனை ஈவிரக்கமின்றி வெட்டிக் கொன்றனர். செய்தி அறிந்த அவன் மனைவியும் காதலியும் தற்கொலை செய்துகொண்டனர்.

இக்கதை குழந்தை மணத்தின் தீமையைச் சுட்டுகிறது. பூவணைஞ்சு சிறுமியாக இருந்த வரை குமாரசாமி நாவிதப் பெண்ணோடு தொடர்பு கொள்வதை யாரும் எதிர்க்கவில்லை. திருமணம் என்ற பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளாமல் ஒருவன் தன்னைவிடத் தாழ்ந்த சாதிப் பெண்ணோடு தொடர்பு கொள்வதைச் சமுதாயம் எதிர்க்கவில்லை என்பதையே இது காட்டுகிறது. ஆனால் அதையே நிரந்தர உறவாக மாற்றிக்கொள்ள முயலும்போது பிரச்சினை எழுகிறது. அம்முயற்சியை முறியடிக்கப் பலர் ஒன்று சேர்கின்ற நிலையையும் காணமுடிகிறது. காதலர்களைப் பிரிக்கும் முயற்சி தோல்வியுறும்போது தன் ஒரே மகன் என்பதைக் கூட எண்ணாமல் தந்தையே மகனைக் கொல்ல முன்வருவதை இக்கதை தெளிவுபடுத்துகிறது. இதற்குச் சாதி வெறியும் ஒரு காரணமாக அமைவதை உணரலாம்.

### மாரிமுத்து காதல் கதை

வாக்கம்பட்டி என்ற கிராமத்தில் மாரிமுத்து என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் பள்ளி (Pelli) சாதியைச் சேர்ந்தவன். சக்கிலி சாதியைச் சேர்ந்த வீரன் என்பவனின் மகள் வீராயி மீது அவன் காதல் கொண்டான். காதல் கூட்டத்தின் விளைவாக வீராயி கருவுற்றாள். உண்மையை அறிந்த வீரன் அவளைத் தன் சாதியைச் சேர்ந்த ஒருவனுக்கு மணமுடித்து வைக்க முனைந்தான். சாதிப் பிரச்சினை காரணமாக அவன் தன் மகளை மாரிமுத்துவுக்கு மணமுடித்துக் கொடுக்க விரும்பவில்லை.

உண்மையை உணர்ந்த காதலர்கள் தாங்களே மணந்து கொண்டு வாழ்க்கையைத் தொடங்கினர். வீரன் நாட்டாமைக்காரரிடம் சென்று முறையிட்டான். அவர் காதலர்களை ஊரைவிட்டு வெளியேற்றினார். காதலர்கள் காட்டில் குடிசையிட்டு அங்கே வாழ்ந்த பழங்குடிகளின் உதவியோடு இன்பமாக வாழ்ந்தனர். அவர்களுக்குக் காத்தான் என்ற மகன் பிறந்தான்.

ஒரு முறை காத்தானுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. மருத்துவம் பார்க்க மகனைத் தூக்கிக் கொண்டு சொந்த ஊர் சென்றாள் வீராயி. மருத்துவம் முடிந்து ஊர் திரும்பும்போது அவளைப் பின் தொடர்ந்து சென்று அவள் இருப்பிடத்தை அறிந்தான் நாட்டாமை.

காதலர்கள் இன்பமாக வாழ்வது நாட்டாமைக்குப் பிடிக்கவில்லை. ஆட்களை ஏவி அவர்கள் குடிசைக்குத் தீயிடச் செய்தான். தீயில் சிக்கிக் காதலர்கள் இறந்தனர். இறக்குமுன் குழந்தையை மட்டும் தீயிலிருந்து தப்ப வைத்தனர்.

பழங்குடிகளின் அரசன் குழந்தையை வளர்த்தான். குழந்தை வளர்ந்து பழங்குடிகளின் அரசனாகியது.

சுமார் முந்நூற்றைம்பது ஆண்கட்கு முற்பட்டதாகக் கருதப்படும் இக்கதை சாதிக் கட்டுப்பாட்டை மீறித் திருமணம் செய்து கொண்ட காதலர்கள் ஊரைவிட்டுத் துரத்தப் படுவதை தெளிவுபடுத்துகிறது. கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு ஊரார் வழங்கிய தண்டனை இது. இவ்வாறு செய்தால் காதலர்கள் அல்லற்பட்டு அழிந்து விடுவர் என்று ஊரார் நம்பினர் போலும். ஆனால் ஊர் கடத்தப்பட்ட இந்தக் காதலர்கள் தங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொண்டதை அறிந்த ஊர்த் தலைவனால் அதனைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. காதலர்களைக் கொன்றுவிட ஏற்பாடு செய்தான். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் நன்றாக வாழ்வதைப் பிறர் அறிந்தால் அவர்களும் சாதிக் கட்டுப்பாட்டை மீறி அது போன்ற காரியங்களைச் செய்யத் துணிவர் அல்லவா? அதனைத் தடுக்கவே கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு சமுதாயம் இது போன்ற கடுமையான தண்டனையை வழங்கியது எனலாம்.

**காத்தவராயன் கதை**

பரிமணம் என்ற காத்தவராயன் பறையர் சாதியைச் சேர்ந்தவன். சேப்பிளையான் என்ற காடு காவல் அதிகாரியின மகன். அவன் ஆரியமாலை என்ற பிராமணப் பெண்ணைக் காதலித்தான். அவளை மணந்துகொண்டு நாட்டைவிட்டு ஓடி விட்டான். பிராமணர்கள் அரசனிடம் முறையிட்டனர். அரசன் காத்தவராயனின் தந்தையைக் கொண்டே அவனைப் பிடித்து வரச் செய்தான். காத்தவராயன் அரசன் முன் நிறுத்தப்பட்டான்.

அரசன் காத்தவராயனை நோக்கி ''இப்படி ஒரு பாவச் செயலை ஏன் செய்தாய்?' என்று கேட்டான். அதற்குக் காத்தவராயன் 'தான் செய்தது நியாயமே' என்று வாதாடினான். மேலும், தான் முற்பிறப்பில் கைலாசத்திலிருந்து சிவபெருமானின் சாபத்தால் பூவுலகில் பிறந்தவன் என்றும் பிராமணக் குடும்பத்தில் பிறந்து பறையரால் வளர்க்கப் பட்டவன் என்றும் கூறினான். அனைத்தையும் கேட்ட அரசன் அவனைக் கழுவிலேற்றாமல் விடுவித்தான். ஆனால் காத்தவராயனோ சிவபெருமான் சாபத்தின்படி தான் கழுவிலேறியே உயிர்விட வேண்டும் என்று கூறினான். அவ்வாறே கழுவிலேறி உயிர்விட்டான். இன்று தமிழகத்தின் பல பகுதிகளிலும் மக்களால் வணங்கப்படும் தெய்வமாக உள்ளான்.

தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஆண் உயர்ந்த சாதியைச்சேர்ந்த பெண்ணோடு உறவு கொள்ளுதல் என்ற அடிப்படையில் மேற்காட்டப்பட்ட நான்கு கதைகளிலிருந்து இக்கதை மாறுபடுகிறது.

காத்தவ ராயன் ஆர்ய மாலையை மணந்து வாழமுயன்றான்.



மனுதர்மப்படி தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவன் உயர்ந்த சாதியைச் சேர்ந்த பெண்ணை மணப்பது குற்றம். இக் கருத்து மக்களிடமும் படப்பப்பட்டிருந்தது. இதற்கு ஒரு சான்று காணலாம்.

வண்ணான் சாதியைச் சேர்ந்த ஒரு இளைஞன் ஒரு பார்ப்பனப் பெண்ணைக் காதலித்தான். தன் காதலைப் பற்றித் தன் தாயிடம் அவன் கூறினான். அதற்கு அவன்,

'பாப்பாரப் பெண்ணடாது
மகனே பெண்ணடாது
பாவம் வரும் தோஷம் வரும்
மகனே தோஷம்வரும்

என்று கூறினாள். உயர் குலத்துப் பெண்ணைத் தாழ்ந்த குலத்தவன் மணந்தால் 'பாவம்', தோஷம்' எல்லாம் ஏற்படும் என்று மக்களிடையே பரப்பப் பட்டிருந்த கருத்தினை இப் பாடல் தொடர்கள் தெளிவு படுத்துவதைக் காணலாம்.

காதலுணர்வு சாதி மத பேதங்களைக் கடந்ததல்லவா? காத்தவராயன் பின் விளைவுகள் குறித்துச் சிந்திக்கவில்லை என்று கூற இயலாது. பின் விளைவுகள் குறிததுச் சிந்தித்த காரணத்தால்தான் தண்டனையிலிருந்து தப்பி அவன் ஆர்யமாலையுடன் வேறு நாட்டிற்கு ஓடிவிட்டான். ஆனாலும் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டான். அவன செயலுக்காக அரசனால் தண்டிக்கப்பட்டுக் கழுவிலேற்றிக் கொல்லப்பட்டான். அவனுடைய துயர முடிவு மக்களின் மனதில் ஆழப் பதிந்தது. நாளடைவில் அவன் மக்களால் வணங்கப்படும் தெய்வமானான். இதுவே, நடந்த வரலாறு. காத்தவராயன் கதையில் காணப்படும் ஏனையகதை நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் புனையப்பட்டவை. இதனைப் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார். கதையில் மாற்றங்கள் செய்தவர்கள் யார் என்பது பற்றியும் எதற்காக அம் மாற்றங்கள் செய்யப்பட்டன என்பது பற்றியும் அவர் பின் வருமாறு கூறுகிறார்:

''பறையன் பிராமணப் பெண்ணை மணந்து நாடுவிட்டு நாடுபோய் வாழ்ந்து விட்ட உதாரணம் பரவி விட்டால், சாதி முறை குலைந்து போகும். சாதி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட நிலவுடமை முறையும் சீர்குலைந்து போகும். இதனைத் தடுக்கவே பிற்கால மேல்சாதியினர் கதையின் ஆற்றலைப் போக்கச் சில மாறுதல்கள் செய்தனர்.

கதையை மாற்றியதன் வாயிலாகக் காத்தவராயன் பறையர்களால் வளர்க்கப்பட்டாலும் அவன் பிறப்பால் பிராமணனே என்றும், எனவே அவன் ஆரிய மாலையை மணந்து கொண்டது சரியானதுதான் என்றும் கூறப் பட்டிருப்பதைக் காணலாம். அவன் கழுவிலேற்றிக் கொல்லப் பட்டதற்கு அவன் முற்பிறப்புக் கதை மாதானமாக அமைந்து விடுவதையும் காணமுடிகிறது. இவ்வாறு ஒரு உண்மைக் கதை முற்றிலும் திரிக்கப்பட்ட நிலையில் உள்ளதை அறியலாம்.

**சாதிக்கட்டுப்பாடு என்னும் மாயை**

மேற்காட்டப்பட்ட சான்றுகள் அனைத்தும் பண்டைய நாளில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட அல்லது செய்து

கொள்ள முனைந்த காதலர்களின் நிலையைத் தெளிவு படுத்துகின்றன.

கலப்புத் திருமணத்தை மக்கள் ஆதரிக்கவில்லை. காதலர்களின் ஆசைகளைப் புறக்கணித்தனர். ஆனால் அதே காதலர்களின் உயிர் பறிக்கப்பட்டபோது அவர்களுக்காக வருந்தினர். அவர்களின் கதைகளைப் போற்றினர். அவர்களைத் தெய்வமாகக் கொண்டாடினர். அவர்களுக்குக் கோயிலெடுத்து வழிபடவும் செய்தனர். இச்செய்கைகள் காதலர்களின் நியாயமான ஆசைகளையும் அந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் நடத்தும் துணிவான போராட்டங்களையும் மக்கள் உணர்ந்திருந்தனர் என்பதையே காட்டுகின்றன. ஆயினும் அவர்கள் மனதில் ஊறிவிட்ட சாதிக்கட்டுப்பாடு என்னும் மாயை கலப்பு மணத் தம்பதிகளை ஆதரிக்க இயலாமல் செய்து விட்டது எனக் கருதலாம். இந்த மாயை மக்களிடம் இன்றும் காணப்படுவதாலேயே கலப்பு மணங்கள் எதிர்க்கப்படுகின்றன. குறிப்பாக எழுத்தறிவற்ற கிராமப்புற மக்களிடையே இந்நிலையை மிகுதியாகக் காணமுடிகிறது.

### எழுத்தாளர்களின் பணி

மகாகவி பாரதியார் மக்களின் சாதி மாயையைத் தகர்த்தெறியும் நோக்குடன் கலப்புமணத்தை மையமாகக் கொண்டு கதைகள் புனைந்தார். அவரைத் தொடர்ந்து எழுத்தாளர்கள் பலரும் கலப்பு மணத்தின் அவசியம் குறித்து வலியுறுத்தி எழுதி வருகின்றனர். இன்றைய நாடகங்களும் திரைப்படங்களும் 'கலப்பு மணம் தவறானது அல்ல; வரவேற்கக் கூடியதே என்ற கருத்தை வலியுறுத்தி வருவதைக் காண முடிகிறது. இடைவிடாத பிரச்சாரங்களாலும் கல்விப்பெருக்கத்தாலும் பலநாட்டு - பலஇன- மக்களின் தொடர்புகளாலும் மக்கள் மனம் மெல்ல மெல்ல மாற்றம் பெற்று வருவதைக் காண முடிகிறது. மக்களின் மனமாற்றத்தை மேன்மேலும் வளர்க்க வேண்டும் என்பதை அரசு உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுவதைக் காணலாம்.

### மகத்தான மாற்றம்

கலப்பு மணம் புரிந்துகொண்டமைக்காக காத்தவராயனைக் கழுவிலேற்றிக் கொன்றது அன்றைய அரசு. கலப்புமணம் புரிந்து கொண்ட தம்பதிகளை மனமார வாழ்த்தித் தங்கப் பதக்கம் அளிக்கிறது இன்றைய அரசு. இதனை தமிழ்ச் சமுதாய வரலாற்றில் ஏற்பட்ட புரட்சிகரமான -மகத்தான - மாற்றம் என்று கூறலாம். கலப்பு மணத் தம்பதிகளுக்குத் தங்கப்பதக்கம் அளிக்கும் திட்டத்தினைக் கொண்டு வந்ததன் வாயிலாகப் பேரறிஞர் அண்ணாவின் தலைமையிலான அரசு இச்சாதனையைப் புரிந்தது. அதன் தொடர்ச்சியாக இன்றையஅரசு கலப்பு மணம் புரிந்து கொள்ளும் தம்பதிகளின் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்கொண்டு சில சலுகைகளை அறிவித்துள்ளது. கலப்புமணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு அரசு அளித்து வரும் ஆதரவும் சலுகைகளும் அத் தம்பதிகளைச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளவும் மதித்துப் போற்றவும் துணை புரிகின்றன. அத்துடன் கலப்பு மணத்திற்குசமுதாயத்தில்காணப்படும் எதிர்ப்புக்களைத் தகர்த்தெறியும் துணிவையும் உற்சாகத்தையும் அவை ஊட்டுகின்றன.

குறிப்புகள்

1,2. நா. வானமாமலை (பதிப்பாசிரியர்), முத்துப்பட்டன் கதை, மதுரைப் பல்கலைக் கழக வெளியீடு, 1971.

3. ஆர். குப்புசாமி, Mani Muthu's Kathal Kathai, Folklore (English Monthly) Nov. 1979 Vol. 21, No. 11.

4 நா. வானமாமலை (பதிப்பாசிரியர்), காத்தவராயன் கதைப்பாடல், மதுரைப் பல்கலைக்கழக வெளியீடு, 1971.

5. எனது டாக்டர் பட்ட ஆய்வுரைக்காக என்னுடைய தாய் திருமதி சீதா லெட்சுமி அவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பாடலின் தொடர்கள்.

6. குறிப்பு எண் 4-ல் உள்ள நூல். பக்கம். 4.


## தமிழ்நாடு வேளாண் கணக்கெடுப்பு 1979-80 (பசலி 1389)

தமிழ்நாட்டில் வேளாண் கணக்கெடுப்புப் பணிகள் செப்டம்பர் 1981 முதல் டிசம்பர் வரையுள்ள காலத்தில் வருவாய் மற்றும் நில அளவைத்துறைகளின் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இப்பணியில் புள்ளியியல் துறை அலுவலர்களும் முக்கிய பங்கேற்பர். 1979-80-ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு இக்கணக்கெடுப்பு நடத்தப்படும். இதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களிலுமுள்ள கைப்பற்றுகள் (Operational Holdings) பற்றிய எண்ணிக்கை மற்றும் பரப்பளவு, கைப்பற்று உரிமையின் தன்மை மற்றும் குத்தகையின் தன்மை, நிலம் பயன்படுத்தப்படும் வகை, பயிர் வாரியாகவும், ஆதாரம் வாரியாகவும் நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு, பயிர் வகைப் பரப்பு, போன்ற விவரங்கள் சேகரிக்கப்படும். வேளாண் கணக்கெடுப்பு, மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்தால் நடத்தப்படும், மத்திய அரசின் ஒரு திட்டமாகும். இக்கணக்கெடுப்பு, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மேற்கொள்ளும் 1980-ஆம் ஆண்டு உலக வேளாண் கணக்கெடுப்புடன் தொடர்புடையது. இக்கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்களைப் பயன்படுத்தி ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை முன்னேற்ற ஏற்பாடுகளை வகுக்க மத்திய அரசு கருதியுள்ளது.

வருவாய்த்துறை நில அளவைப் பிரிவு

# நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

தமிழ் நாட்டில் மறு நிலவரித்திட்டம் (Resettlement) 1880-1920ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தான் கடைசியாக மேற்கொள்ளப்பட்டது. நீண்ட காலமாக, இத்திட்டம் மேற்கொள்ளப் படாத காரணத்தால், ரயத்துவாரி கிராமங்களிலுள்ள நிலப் பதிவேடுகள் பழமையானவையாகவும், தற்போதுள்ள நிலையைப் பிரதிபலிக்காமலும் உள்ளன.



* இதனால் விவசாயிகள் அரசாங்கத் திடமோ, கூட்டுறவு வங்கிகளிலோ கடன் பெறுவது, நிலங்களுக்கு மின் இணைப்புப் பெறுவது போன்றவற்றில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன.

* எனவே, விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய இத்தகைய எல்லாவகையான இன்னல்களையும் நீக்கிடும் வகையில், சுமார் 78,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள நிலங்களை, ஐந்தாண்டுகளில் ரூ. 1.50 கோடி செலவில் அளவை செய்திட மாநிலந் தழுவிய வகையில் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

* இது, நில உரிமையாளர்களுக்கு ஓர் ஒப்பற்ற திட்டமாகும். இத்திட்டத்தினால் நிலப் பதிவேடுகளில் நெடுங்காலமாக இருந்துவந்த பல குறைகள் களையப்படும்.

* விவசாயப் பெருமக்கள் பொருளாதாரத் துறையில் மேம்படவும் இத்திட்டம் வழி வகுக்கிறது.

* கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்கும் இத்திட்டம் வழி வகுக்கிறது

இந்தத் திட்டத்தின் மூலம் ஏற்படும் நன்மைகளில் சில:

* கூட்டுப்பட்டாக்கள், தனிப்பட்டாக்களாக மாற்றப்படும்.

* விவசாயிகள், தங்கள் நிலங்களின் உரிமையினை எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

* 'சிட்டா' போன்ற கிராமக் கணக்குகளில் நில உரிமையாளர்களின் பெயர்கள் சரியாக குறிக்கப்படும்.

* விற்பனை, பாகப்பிரிவினை, நிலங்களை மாற்றிக் கொள்ளுதல் போன்ற மாறுதல்கள், சரியான முறையில் கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்படும்.

* ஒவ்வொரு புலத்தினையும் மீண்டும் அளந்து வருவாய்த்துறைப் பதிவேடுகளில் பதியப்படும்.

* பூமியில் உட்பிரிவுகள் செயல்படுத்தப்படும்.

* அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களின் எல்லைகள் நிர்ணயிக்கப்படும்; அவற்றில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அவசியமேற்பட்டால் அகற்றவும் இத்திட்டம் உதவும்.

* கூட்டுப்பட்டா நிலங்களின் ஈட்டின் பேரில் வாங்கப்பட்ட கடனை உரியவர்களிடத்தே வசூலிக்க வகை செய்யப்படும்.

* மனு இல்லாமலேயே, பிரிவினைப் பத்திரங்களின் அடிப்படையில் நிலங்கள் அளக்கப்பட்டு பிரித்துத் தரப் படும்.

**1.8.81 வரை செய்யப்பட்ட பணிகள்:**

- அளக்கப்பட்ட உட்பிரிவுகள் 10,69,081
- புதுப்பிக்கப்பட்ட சர்வேகற்கள் 6,77,743
- வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 2,64,686
- பயனடைந்தோர் எண்ணிக்கை 4,05,059






விவசாயிகளுக்கு மேலும் உதவும் வகையிலும் அவர்களுடைய நில உரிமைகளை தெளிவாக்கும் வகையிலும் புதிய பட்டா பாஸ் புத்தகங்கள் வழங்கப்படவும், இந்தப் புத்தகங்களின் அடிப்படையில், அவர்களுக்கு விவசாய வளர்ச்சிக்காக கடன் வசதிகளை எளிதில் வழங்குவதற்கும், பட்டா/பாஸ் புத்தகங்கள் சட்டரீதியாக்கப்படவேண்டும் என்கிற கருத்துடன் தமிழக அரசு ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்துள்ளது.

இது சட்டமன்றங்களின் ஆய்வில் உள்ளது.

ELEGANT DIPR 50071/81

# இசைத் தூண்கள்


**— இராஜ். பவுன்துரை**

தமிழக கட்டடக் கலை அமைப்பில் போற்றக் கூடிய ஒன்று தூண் நிருமாணக் கலையாகும். தூண்களின் அமைப்பும் கலை நுட்பமும் நாயக்கர்களுடைய காலத்தில் சிறப்புப் பெற்றன. அத்தகைய கலைத்திறனுடைய படைப்பில் ஒன்று இசைத் தூண்களாகும். இசைத் தூண்கள் இன்றும் நமக்கு வியப்பிற்குரியனவாகக் காட்சியளிக்கின்றன. இசைத் தூண்களைத் தமிழகத்திலும் அதன் அண்டை மாநிலங்களிலும் சில கோயில்களில் இன்றும் காணலாம். தமிழகத்தில்தான் அதிகமாக இசைத் தூண்கள் காணப்படுகின்றன. இத்தகைய இசைத் தூண்கள் பல வடிவங்களில் பலவகை ஒலியை எழுப்பும் கற்கருவிகளாகக் காணக் கிடக்கின்றன. அத்தகைய தூண்களைப் பற்றிய சில அரிய உண்மைகளை ஆராயலாம்.

**இசைத் தூண்கள் காணப்படும் இடங்கள்**

இசைத் தூண்கள் தமிழகத்தின் பல இடங்களில் உள்ளன. அவை பொதுவாக பாண்டிய நாட்டுப் பகுதியில் அதிகமாய்க் காணப்படுகின்றன. மற்றும் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய இசைத் தூண்கள் கீழ்க் குறிக்கப் பெற்றுள்ள இடங்களில் காணப்படுகின்றன.

(1) அழகர் கோயில்
(2) ஆழ்வார் திருநகரி
(3) களக்காடு
(4) குற்றாலம்
(5) சுசீந்திரம்
(6) செண்பகநல்லூர்
(7) தட்பத்ரி
(8) தாடிக் கொம்பு
(9) திருப்பதி
(10) திருவனந்தபுரம்
(11) திருநெல்வேலி
(12) தென்காசி
(13) பெங்களூர் ராமராசன் பேட்டை
(14) மதுரை
(15) லெப்பாச்சி
(16) ஹம்பி



**இசைத் தூண்களின் வகை:**

இசை ஒலி எழுப்பக் கூடிய தூண்களை அவற்றின் அமைப்பைக் கொண்டு இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

(அ) இசைத் தூண்கள் (தட்டினால் இசை எழும் தூண்கள்)

(ஆ) துளை இசைத் தூண்கள் (துளை வழி ஊதினால் இசை எழும் தூண்கள்).

**இசைத் தூண்கள்:**

சிற்பங்களை ஆண்சிலை, பெண் சிலை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை என வகைப்படுத்தினர். இவ்வாறு சிற்பங்களை அமைக்க உதவியாக இருந்தது கற்களின் ஒலியே. ஒலியின் தன்மையைக் கொண்டு சிலைகளை வகை பிரித்தனர். வெண்கலத்தின் ஒலிபோன்று இருப்பின் அது பெண் சிலை என்றும், ரத்தின மயமான அணிகளின் ஒலியைப் போன்று இருப்பின் அதற்கு ஆண் சிலை என்றும் ஒலியற்ற சிலைகளை அலிகள் என்றும் கூறப்பட்டுள்ளன.

பனையின் ஒலியைப் போன்று ஒலி எழுப்பும் சிலைக்கு 'கொடி' என்று பெயர்(2) எருமை எழுப்பும் ஒலியைப் போன்ற சிலையை 'மரம்' என்றும் ஒலி சற்று மாறுபட்டு இருப்பின் அதற்கு 'யாவனா' என்றும் பெயர்(3). இத்தகைய சிலைகளைக் கற்களாலும் உலோகத்தாலும் செய்தனர். இசையுடன் கூடிய சிற்பங்களை அமைத்தனர். கல்லையும் கவிபாட வைத்தனர். இத்தகைய சிறப்புடைய சிற்பங்கள் தமிழகத்தில் பல கோயில்களில் காணப்படுகின்றன.

(அ) கிருஷ்ணபுரம் வைகுந்தப் பெருமாள் கோவில்.
(ஆ) பெருந்தோட்டம் ஆதி கேசவப் பெருமாள் கோவில் (காவேரிப்பட்டினம் அருகில்)
(இ) தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில்.
ஆகியவற்றிலுள்ள சிற்பங்கள் மிகச் சிறப்புடையன.

சிற்பங்களைப் போன்றே ஒலியெழுங் கற்களால் நடைபாதை

யும் அமைத்துள்ளனர். தாராசுரத்தில் இத்தகைய இசை நடை பாதை உள்ளது. இக்கோயிலில் அமைந்துள்ள பலிபீடத்திற்குச் செல்லும் பாதையில் இது அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும். அத்தகைய சிறப்புமிக்க ஒலி எழுப்பும் கற்களைத் தேர்வு செய்தே இசைத் தூண்களையும் செய்துள்ளனர் எனலாம்.

தட்டினால் பல்வேறு வகையான இசை ஒலிகளை எழுப்பும் தூண்களை அமைக்க சாதாரணமான கற்களைத் தேர்வு செய்யவில்லை. எதிரொலி எழுப்பும் கருங்கல் வகை அறிந்து இசைத் தூண்களைப் படைத்துள்ளனர். இத்தகைய தூண்களைத் தட்டினால் ஓசை எழுகின்றது. சில தூண்களில் எழுகின்ற ஒலியின் அதிர்வானது எதிரே அமைக்கப்பட்டிருக்கும் தூண்களையும் தாக்கி அவைகளையும் அதிர வைத்து அதன்மூலமாக ஓர் இன்னிசைக் கூட்டொலியை ஏற்படுத்துகின்றன. ஆனால் இத் தூண்கள் எல்லாம் ஒன்றுபோல ஒலிக்கும் தன்மை உடையனவாக அமையவில்லை எனலாம். ஒவ்வொரு தூணிலிருந்தும் மாறுபாடுடைய ஒலியே எழுகிறது. ஒரு சில தூண்கள் மூன்று அல்லது நான்கு சுரங்களை மட்டும் கொடுக்கக்கூடியனவாக உள்ளன.

இசைத் தூண்கள் நான்கு வகைப்படும்(4). அவை :

1) சுருதி ஸ்தம்பம் (Sruti Sthambha)
2) கான ஸ்தம்பம் (Gana Sthamha)
3) லய ஸ்தம்பம் (Laya Sthambha)
4) பிரதார்ட்சன ஸ்தம்பம் (Pradharasana Sthambha)

எனப்படும்.

சுருதி ஸ்தம்பம் எனப்படுவது பூசையின்போது பயன்படும் ஸ்தம்பமாகும். சங்கு, எக்காளம் போன்ற இசைக் கருவிகளைப் பூசையின்போது இசைப்பர். அப்பொழுது சுருதி ஸ்தம்பத்தையும் பயன்படுத்துவர் எனலாம்.

பிரதார்ட்சன ஸ்தம்பம் எனப்படுவது ராகங்கள் அறிய உதவும் தூண் எனலாம். ஒவ்வொரு தூணும் ஒருவகை ஒலியை எழுப்பும். அவ்வாறு எழுகின்ற இசையை அறியவும், மொத்தமாக எழும் இசையை எடுத்துக்காட்ட உதவியாகவும், கருவியாகவும் பயன்படுகின்றது எனலாம். இத்தகைய தூண்களுக்கு எடுத்துக் காட்டாக தட்பத்ரியில் (Tadpatri) உள்ள தூணைக் கூறலாம்(5).

## பேரறிஞர் அண்ணா கிளை நூலகம்



செங்கல்பட்டு மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் இயங்கி வரும் சின்ன காஞ்சிபுரத்திலுள்ள கிளை நூலகத்திற்கு "பேரறிஞர் அண்ணா கிளை நூலகம்" எனப் பெயரிட்டு தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**துளை இசைத் தூண்கள்:**

அடிக்குறிப்பு:

இசைத் தூண்களின் அமைப்பில், கலை நுணுக்கத்தில் மிகவும் சிறப்பான முறையில் அமைந்துள்ளவை துளை இசைத் தூண்களாகும். துளை இசைக் கருவிகளின் ( Wind Instruments ) தன்மையை ஒத்துக் காணப்படுவதால் இவற்றைத் துளை இசைத் தூண்கள் என்று கூறலாம்.

துளை இசைத் தூண்கள் எனப்படுபவை துளைகள் அமைக்கப்பட்ட தூண்கள். இத்தூண் அமைப்பிலுள்ள துவாரங்களின் வழியே ஊதுவதால் ஒலி எழுகின்றது. இத்தகைய தூண்களின் வழியே எழுகின்ற ஒலியானது சங்கின் ஒலியைப் போன்றும் எக்காளத்தின் இசையைப் போன்றும் ஒலிக்கின்றன. பொதுவாகத் துளை இசைத் தூண்களில் இவ்விரண்டு இசையே கேட்க முடிகின்றது.

**இசைத் தூண்களின் வடிவம், நிறம்:**

**(அ) வடிவம்**

எல்லா இசைத் தூண்களும் ஒரே வடிவமாக அமைக்கப்படவில்லை. அவை பல வடிவங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவை :

(1) வட்டம்
(2) நெல்லிக்கனி
(3) சதுரம்
(4) புரிகள் (Spiral)
(5) செவ்வகம்
(6) எண்கோணம்
(7) பலகோணம்

என எழுவகை வடிவில் இசைத் தூண்கள் காணப்படுகின்றன. இசைத் தூண்களின் நடுவிட்டம் எல்லாத் தூண்களிலும் ஏறக்குறைய ஒரே அளவுடையன.

**(ஆ) நிறம்:**

இசைத் தூண்கள் பொதுவாக மூன்று நிறமுடையனவாக உள்ளன. அவை :

(1) கறுப்பு,
(2) சாம்பல்,
(3) வெள்ளையும் குன்றந்தளவு மஞ்சளும் கலந்த நிறம்.

**திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில்:**

நெல்லையப்பர் கோயில் கருவறையின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள மணி மண்டபத்தில் இரண்டு அழகிய இசைத்தூண்கள் உள்ளன. இவ்விசைத் தூண்கள் ஒரே கல்லால் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் நடுப் பகுதியில் ஒரு பெரிய தூணும் அதனைச் சுற்றிப் பல சிறிய தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன. சிறிய தூண்களின் எண்ணிக்கை 48 ஆக உள்ளன. இச்சிறிய தூண்கள் வடிவ அமைப்பிலும், உயரத்திலும் மாறுபாடான அமைப்பைக் கொண்டுள்ளன. ஒவ்வொன்றும் வெவ்வேறு இனிய ஒலியை எழுப்புகின்றன. இவ்வாறு எழுகின்ற ஒலி,

s, r, r, d, s, s, n, s, s, s, s, s, s, n, n, d, s, n, s


n, d, r, s, d, ni, m, n, p, n, s, d, s, d, m

g, s, n, n, s, g, s, n, s, n, s

என்று குறிக்கப்பட்டுள்ளது(6)

மணிமண்டபத்தில் உள்ள தூண்களைப் போன்று அம்பாள்சந்நிதியிலும் இரண்டு இசைத் தூண்கள் உள்ளன. இவை மணி மண்டபத்தின் தூண்களின் அமைப்பையே உடையன. ஆனால் இங்கு அமைந்துள்ள தூண்களின் மேல் ஒரு சிறிய அணில் எட்டிப் பிடிப்பதுபோன்ற வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இது இசையின் ஒலி அதிர்வை சுட்டுவனவாகவும் இருக்கலாம். இத்தூண்களின் அமைப்பு பொதுவாக எல்லாத் தூண்களின் அமைப்பைப் போன்றதே. பதும

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR

பந்தம், கலசம், குடம், இதழ் முனை, பலகை, கண்டம், போதிகை அதில் அமைக்கப்பட்டுள்ள மதளை, நாணுதல், பூமுனை, யாளி, மலர் அலங்காலம் போன்ற கலை வேலைப்பாடுகளும் நிறைந்துள்ளன.

சதுரத் தூண் ( Square Pillar ) பஞ்சமா (Panchama) போன்ற ராகத்தையும் எண் கோணத் தூண் ( Octagonsl Pillar ) மத்தியமா என்ற ராகத்தையும் கொடுக்கின்றது என்பர்

### ஆழ்வார் திருநகரி:

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆழ்வார் திருநகரி ஒரு புகழ்மிகுந்த வைணவத் திருத்தலமாகும். இக்கோயிலில் அமைந்துள்ள வசந்த மண்டபத்தில் இரண்டு தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று இசைத் தூண் வகையைச் சார்ந்தது. மற்றொன்று துளை இசைத் தூண் வகையைச் சார்ந்தது. இங்குள்ள இசைத் தூண்களைத் தட்டினால் ஏழு சுரங்களின் ஒலியைக் கேட்க முடிகின்றது. மற்றொன்று இரண்டு துவாரங்களைக்கொண்ட தூணாய் அமைக்கப்பட்டுள்ளது. துளையின் வழியே ஊதினால் ஒவ்வொன்றும் வெவ்வேறு இனிய நாதத்தை எழுப்புகின்றது. இரண்டு துவாரங்களின் வழியே ஒரே நேரத்தில் இருவர் மாறி மாறி ஊதினால் சங்கின் ஒலியும், மற்றொரு பக்கத்தில் எக்காளத்தின் ஒலியையும் கேட்க முடிகின்றது. இவ்வகையின் ஒலியானது தெளிவாகக் கேட்கக் கூடியமுறையில் இத்தூண் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பாகும்.

இசைத் தூண்களும், துளை இசைத் தூண்களும் கொண்ட இத் திருத்தலத்தில் மற்றொரு சிறப்பு கல்லால் ஆன ஒரு நாதசுரமாகும்.

### செண்பகநல்லூர் பெருமாள் கோயில்:

துளை இசைத் தூண் வடிவில் அமைக்கப்பட்டுள்ள தூண்களில் மிகுந்த சிறப்புடையவை இங்கு அமைந்துள்ள தூண்களே கருவறையின் தென்மேற்குப் பகுதியில் இத்தூண் அமைக்கப்பட்டுள்ளது. இத்தூண் குழல் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நுனி இரண்டும் வட்ட வடிவமாக உள்ளன. இதன் அளவு ஒரு அங்குலம் எனலாம். மற்றொரு புறத்திலுள்ள வட்டத்தின் அளவு சற்றுச் சிறிய தாகவே உள்ளது. இத்தூணின் துவாரம் சற்றுச் சாய்வாகக் கீழிருந்து மேல்நோக்கிய நிலையில் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளது. இதன் அமைப்பானது அடி பெருத்தும், நுனி சிறுத்தும், நடுப்பாகத்தில் குவிந்த வண்ணமாகக் காணப்படுகிறது. இத்தூணிலுள்ள குழலின் நீளம் ஓரடியாகும். இதன் உட்பகுதியானது பல மடிப்புக்களை உடையதாக அமைக்கப்பட்டுள்ளது. ஒரு துவாரத்தின் வழியே ஊதினால் பல்வகை இசைகளைக் கேட்க முடிகின்றது. ஆனால் இரண்டு பகுதியிலும் மாறி மாறி ஊதினால் சங்கு, எக்காளத்தின் ஒலியைக் கேட்க முடிகின்றது. இதற்கு அருகே குழல் ஊதியவாறு ஒரு சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. அது இத் துளை இசைக் கருவியைச் சுட்டுவனபோல் உள்ளது.

### சுசீந்திரம்:

சுசீந்திரம் தாணுமாலயன் கோயிலில் அமைந்துள்ள இசைத் தூண்கள் சிறப்புடையன. இக் கோயிலில் அமைக்கப்பட்டுள்ள கால பைரவர் மண்டபத்திற்கு எதிரே நான்கு இசைத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. குலசேகர மண்டபத்திலும் இசைத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்குப் பக்கத்தில் உள்ள இசைத் தூணில் 24 உருண்டை வடிவத் தூண்களாகவும் தென் பகுதியில் அமைந்துள்ள தூணின் எண்ணிக்கை 35 ஆகவும் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக இங்குள்ள இசைத் தூண்களின் அடிப்பகுதி சதுரமாகவும், மேலே எட்டுப்பட்டை உடையனவாகவும் உள்ளன. இத்தூண்களின் ஒலியானது திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் தூண்களின் இசையைப் போன்று உள்ளது.

### மதுரை மீனாட்சியம்மன் கோயில்:

மதுரை மீனாட்சி சுந்தரேச்வரர் கோயில் மொட்டைக் கோபுரத்திற்கு அருகே இசைத்தூண்கள் அமைந்துள்ளன. இங்கு 5 (ஐந்து) இசைத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தூணும் தனிக் கல்லினால் வடிக்கப்பட்டுள்ளது. நடுப்பகுதியில் ஒரு பெரிய தூண் உள்ளது. அத் தூணைச் சுற்றி பல சிறிய தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்ட சிறிய தூண்களின் எண்ணிக்கை 22 ஆகவும், அதனுடைய வடிவம் வட்டம், சதுரம், எட்டுப்பட்டை, வளைவு என்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளன. மதுரைக் கோயிலின் இசை ஒலியின் அமைப்பும் நவ்ரோஜ் ( Navaroj ) குறிஞ்சி, ( Kurinji ) ராகங்களைக் கொடுக்கின்றன(8).

### தாடிக்கொம்பு:

மதுரை மாவட்டம் தாடிக் கொம்பு எனும் இடத்திலமைந்துள்ள சுந்தர ராசப் பெருமாள் கோயிலில் இசைத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை இக்கோயிலின் கருவறைக்குச் செல்லும் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் உள்ளன. இது நடன நிகழ்ச்சிகள் போன்ற விழாக்கால நிகழ்ச்சி நடைபெறுகின்ற மண்டபமாகும். இத் தூணின் ஒலியானது வேதத்தை ஓதுவது போன்று ஒலிக்கின்றது என்பர்(9). இத்தூண்களின் அமைப்பு ஹம்பியில் உள்ள வைத்தியராயர் கோயில் இசைத் தூணின் அமைப்பைப் போன்று உள்ளது என்பர்(10). ஹம்பியிலுள்ள இசைத் தூணின் மேற்புறம் ஒருவகை இசையும், அதனுடைய கீழ்ப்பகுதியானது வேறு வகை இசையையும் எழுப்புகின்றன. இதன் நடுப்பகுதியில் மணி ஒலி போன்று ஓசை எழும்பக் காணலாம். கூட்டுத் தூண்களாக அமைக்கப்பட்டுள்ளதால் எல்லாத் தூண்களிலும் ஒரே நேரத்தில் ஒலி எழுப்பினால் பல இனிய இசைகளைக் கேட்க முடிகின்றது. தாடிக்கொம்பிலுள்ளது போன்று இங்கு நடன மண்டபத்தில் இத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### அழகர் கோயில்:

மதுரை அருகே உள்ள அழகர் கோயிலின் கருவறைக்கு முன்பாக அமைந்துள்ள மணிமண்டபத்தில் இரண்டு கூட்டுத்தூண்கள் மேற்குப் பக்கத்திலும் மற்றொன்று கிழக்குப் புறத்திலும் உள்ளன. தூண்களின் நடுப்பகுதி

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழாக்குழு-தனி அலுவலர் நியமனம்.**

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழாக் குழுவின் தனி அலுவலர் பதவிக்கு செய்தி, சுற்றுலா மற்றும் (தமிழ்ப்) பண்பாட்டுத் துறையில், துணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) பொறுப்பிலிருக்கும் திரு சி. என். கிருஷ்ணபாரதி அவர்களை நியமித்து தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

யில் ஒரு பெரிய தூண் அமைக்கப் பட்டுள்ளது. அதனைச் சுற்றி மூன்று அடி, உயரமுண்டைய சிறிய தூண்கள் உள்ளன. அத்தூண்கள் வட்டம், சதுரம், எட்டுப்பட்டை என வடிக்கப்பட்டுள்ளன. இத் தூண்களைத் தட்டினால் அவ் வதிர்வானது ஒன்றிணைந்து பல இனிய இசையை எழுப்புகின்றன மதுரை மீனாட்சியம்மன் கோயி லில் காணப்படும் இசைத்தூணின். வடிவைப் போன்று காணப்படு கின்றது. ஆனால் சற்றுச் சிறியன வாக காணப்படுகின்றன.

தென்காசி, குற்றாலம் களக் காடு, திருப்பதி, திருவனந்த புரம் போன்ற இடங்களில் காணப் படும் இசைத் தூண்களும் பிற இடங்களில் காணப்படும் சாதா ரண இசைத் தூண்களைப் போன்றே உள்ளன.

பொதுவாக இசைத் தூண்கள் மூன்று அடி முதல் ஏழு அடி வரை உயரமுள்ளவை. அழகிய வேலைப்பாட்டிலும், நுணுக்க மான அமைப்பிலும் போற்றும் படியான கலையம்சத்துடன் இருப்பது செண்பக நல்லூர் துளை இசைத் தூண் என்று கூற லாம். அங்கு சங்கு, எக்காளம் போன்ற இசை கேட்கின்றது- சங்கு, எக்காளம் போன்ற இசை ஒலியை வைஷ்ணவ கோயில் களில் இசைப்பது வழக்கம். இவ் விசையையும் வைஷ்ணவக் கோயில் தூண்களில் படைத்தி ருப்பது சிறப்பே. பொதுவாக நடன மண்டபம் அல்லது அர்த்த மண்டபம் போன்ற இடங்களில் தான் இசைத் தூண்கள் அமைக் கப்பட்டிருக்கும். பூசையின் போது எழும் பாடல், இசை ஆகியவற்றின் இடையே இத் தூணினையும் பயன்படுத்தினர் எனலாம். ஓதுவார், ஸ்தானிகர் அல்லது கட்டளையார் ஆகி யோர் பூசை நடைபெறும் பொழுது இவற்றைப் பயன்படுத் தினர் எனலாம். இத்தகைய சிறப்புடைய இசைத் தூண் களைப்பற்றிய ஆய்வு தொடர்ந்து செய்யப்பட்டால் இன்னும் பல அரிய செய்திகள் நமக்குக் கிடைக்கும் என்பது திண்ணம்.

அடிக் குறிப்பு

1. Manasaram, Devanathachariar. N. S., Saraswathi Mahal Library, Thanjavur, 1961, p. 93.
2. Ibid. 94.
3. Ibid. 96.
4. A Miscellany in Indian Music, Alamelu Govindarajan. Dr. S. Premalatha, p. 78.
5. Ibid. p. 76.
6. The History of Indian Musical Instruments (Paper), 5th World Tamil Conference, Madurai, 1981.
7. Ibid.
8. Ibid.
9. A Dictionary of South Indian Music and Musicians Sambhamoorthy, Vol. III, p. 77.
10. A Miscellany in Indian Music, Alamelu Govindarajan, p. 79.

## உடல் ஊனமுற்றோர்க்கான பள்ளிகளில சிறப்பாகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்குச் சிறப்பு விருதுகள்


**1981**-ஆம் ஆண்டு உலக உடல் ஊன முற்றோர் ஆண்டு என ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்து அதை உலகெங்கும் கொண்டாட வேண்டுமென அறிவித்தது. அதில் நமது நாடும் ஒன்றாகும்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த உடல் ஊன முற்றோர் மாநில வாரியக் கூட்டத்தில், தமிழ் நாட்டில் உள்ள சிறப்புப் பள்ளிகளில் பணி யாற்றும் மிகச் சிறந்த ஆசிரியர்களுக்குச் சிறப்பு விருது வழங்க வேண்டும் என ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இப்பள்ளிகளில் பணி யாற்றும் ஆசிரியர்கள், மிகுந்த சிரமப்பட்டு உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு எச்சரிக்கை யாகவும், அனுதாபத்துடனும் அவர்களைப் புரிந்து கொண்டும் கல்வி புகட்டுகிறார்கள்.

இவர்களின் சேவையை கௌரவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஐந்து சிறப்பு விருது களைச் சிறப்பாகப் பணியாற்றும் ஆசிரியர் களுக்கு வழங்குவதென முடிவெடுத்துள்ளது. இவ் விருது கீழ்க்கண்ட பள்ளிகளில் சிறப்புப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும்.

| | |
|---|---|
| விழியிழந்தோர் / வாய் பேசாதோர் | 1 |
| காது கேளாதோர் | 1 |
| உடல் ஊனமுற்றோர் | 1 |
| மூளை வளர்ச்சி குன்றியவர் | 1 |
| சிறந்த பணியாற்றுவோர் (பொதுவாக) | 1 |

இவ்விருது ரொக்கப் பரிசாக ரூ. 500/-ம் நற்சான்றிதழும் கொண்டிருக்கும். இவ்விருது உடல் ஊனமுற்றோர் ஆண்டு இறுதியில் நடக்கும் விழாவில் அளிக்கப்படும்.



# அரிய பணிபுரியும் அச்சகத் துறை

ஒவ்வொரு குடும்பத்திலும் உணவுப் பங்கீடு அட்டைகளை வைத்திருக்கிறோம். மாணவர்கள் பேருந்து சீட்டுகள் அச்சிட்டு பெறுவதைக் காணுகிறோம். தேர்தலின்போது பல கோடி வாக்குச் சீட்டுகள் தயாரிக்கப்பட்டு உபயோகிக்கப்படுவதைப் பார்க்கிறோம். அழகான அரசுப் பரிசு சீட்டுக்களை வாங்கிப் பார்த்து மகிழ்கிறோம். பல காரியங்களுக்கு படிவங்களைப்பெற்று உபயோகிக்கிறோம். இவைகளெல்லாம் தயாரிக்கும் நிறுவனம் எது தெரியுமா? தமிழ்நாடு அரசின் அரசு அச்சகத்துறை தான் இத்துணைப் பணிகளையும்ஆற்றி வருகிறது.


ஆசியாவிலேயே மிகப் பெரிய அச்சக நிறுவனமாக விளங்கும் தமிழக அரசு அச்சுக்கூடம், 150 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது, கெஜட் எனப்படும் அரசிதழ்களை அச்சடிக்க 1831 டிசம்பர் மாதத்தில் தலைமைச் செயலகத்தில் ஒரு சின்னஞ்சிறு அச்சுக்கூடமாகஆரம்பிக்கப்பட்டு முதல் கெஜட்டு 1832 ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்டது. அப்பொழுது 10 நபர்கள் தான் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். பழைய டைப்புகளையும் மூன்று கையச்சடிக்கும் இயந்திரங்களையுமே கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அச்சகம், 1931க்குள் அதாவது 100 ஆண்டுகளில் வெகுவாக முன்னேறி கிளை அச்சகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, 1906 பணியாளர்கள் வேலை செய்யும் அளவுக்கு மேம்பாடு அடைந்தது. இப்பொழுது மேலும் 50 ஆண்டுகள் ஆகியுள்ளன. பிரமிக்கத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளதைக் காண்கிறோம்.

தங்கசாலையிலுள்ள மைய அச்சகத்தைத் தவிர சென்னையிலேயே சூளையில் ஒரு அச்சகமும், உயர்நீதி மன்றக் கட்டிடத்தில் ஒரு அச்சகமும், மாவட்டங்களில் விருத்தாசலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் கிளை அச்சகங்களும் தற்போது செயலாற்றுகின்றன. 10 நபர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்துறை 6300 பணியாளர்கள் கொண்ட பேரளவிற்கு வளர்ந்துள்ளது கவனத்திற்குரியது. இந்த 6300 பணியாளர்களில் சுமார் 439 மாதர்களும் உள்ளனர்.

ஏதோ சில பழைய இயந்திரங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த அரசு அச்சுக்கூடத்தில் இப்போது பலவகைப்பட்ட, பல்வேறு நாடுகளில் தயார் செய்யப்பட்ட இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு ஆண்டுதோறும் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்துறையின்கீழ் இயங்கும் அச்சகங்களில் உள்ள இயந்திரங்களின் உத்தேசமதிப்பு ரூபாய் இரண்டு கோடி ஆகும்.

அண்மையில் சுமார் ரூ. 17.95 இலட்சத்தில் பெரிய கட்டிடம் கட்டப்பட்டு 29.5.1981 அன்று முதல் இயங்கி வருகிறது. இதே போன்று சேலத்தில் தற்போது தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் அரசு அச்சகத்தைச் சொந்தக் கட்டிடத்தில் அமைக்க ரூ. 3.03இலட்சம் விலையில் சிட்கோ ஸ்தாபனத்திடமிருந்து 2.86 ஏக்கர் பரப்புள்ள ஒரு இடத்தை வாங்கி 25.6.81 அன்று முதல் இயங்கி வருகிறது. அதில் சுமார் ரூ.60 இலட்சத்தில் ஒரு கட்டிடத்தை கட்ட மதிப்பீடு தயார் செய்யப்படுகிறது. அரசு அங்கீகாரம் பெற்று கட்டிடம் ஆரம்பிக்கப்படும். திருச்சியில் கட்டிடம் கட்டுவதும் நடவடிக்கையில் உள்ளது. புதுக்கோட்டையில் இப்போது இருக்கும் கட்டிடத்தின் பக்கத்திலேயே மேற்கொண்டு கொஞ்சம் இடத்தை பெற்று விஸ்தரிக்க உத்தேசமுள்ளது. மதுரையில் அண்மையில் கட்டப்பட்டுள்ள நல்ல விஸ்தாரமான கட்டிடத்தில் மேற்கொண்டு சில இயந்திரங்களைப் பொருத்தி அதிக வேலைகளை எடுத்துக்கொள்ளத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. சென்னையில் ஒரு தனியார் கட்டிடத்தில் இயங்கும் கிளை அச்சகத்தை சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றியமைப்பதும் கவனத்திலுள்ளது. அரசு அச்சகங்கள் நிரந்தரமாக அவ்வப்போது தேவைப்படும் சகல வேலைகளையும் சீக்கிரத்தில் செய்து முடிக்க 1981-1983ல் கணிசமான விரிவாக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அலுவலக நடவடிக்கை என்றாலே, பலவிதமான படிவங்கள் தேவை என்பது தெரிந்ததே. எல்லாத்துறைகளுக்கும் தேவைப்படும் சுமார் 4921 விதமான படிவங்களில் 4 கோடி நகல்கள்அரசு அச்சகங்களில் தயாரிக்கப்படுகின்றன. இந்தப்படிவங்கள் மட்டுமின்றி பட்ஜெட், சட்டமன்ற நடவடிக்கைகள், பல்வேறு துறைகளின் அறிக்கைகள், புத்தகங்கள், கெஜட் என்ற வாராந்தர அரசிதழ், அரசுப் பரிசு சீட்டுகள், பஸ் டிக்கட்டுகள், ரேஷன் கார்டுகள், இப்படி பல பலஇனங்கள் அச்சிடப்படுகின்றன. ஓர் ஆண்டுக்கு புத்தக வடிவிலுள்ள பக்க அளவில் சுமார் 240 கோடி பக்கங்கள் அச்சடிக்கப்படுகின்றன. வேலைப்பளுவின் காரணமாக சென்னையிலுள்ள மூன்று அச்சகங்கள் மூன்று ஷிப்டுகளிலும், மாவட்டங்களிலுள்ள ஐந்து அச்சகங்கள் இரண்டு ஷிப்டுகளிலும் வேலை செய்கின்றன. இந்த அச்சு வேலைக்கு சுமார் 2.67 கோடி ரூபாய் மதிப்புள்ள காகிதமும் மற்ற பொருள்களும் உபயோகப் படுத்தப்படுகின்றன. அச்சுத் துறையின் அச்சகங்கள் தவிர, தமிழரசு அச்சகம், குடும்பக் கட்டுப்பாடு அச்சகம், புள்ளி விவரத் துறை அச்சகம் முதலியவை அவ்வப்போது ஏற்படும் அவசரப்பணிகளைநிறைவேற்றிக் கொள்வதற்காக இயங்குகின்றன. மத்திய சிறைச்சாலையில் போதுமான இடம் இல்லாமையால், இட நெருக்கடியைச் சமாளிக்க சிறைத் துறைக்கு இடம்தேவைப்பட்டதால் வெகுகாலமாக மத்



திய சிறைச்சாலையில் இயங்கி வந்த கிளை அச்சக வேலைகளை 31.3.1981 தேதி முதல் நிறுத்தி அந்தஇடத்தைச் சிறைத் துறை யினருக்கு ஒப்புவிக்கப்பட்டது.

கல்வி முன்னேற்றத்தில் அரசு அதிக அக்கறை, ஆர்வம்கொண் டுள்ளது. பள்ளிப்பாட நூல்கள் தேசிய மயமாக்கப்பட்டதனால் அத்தனை புத்தகங்களும் தமிழ் நாட்டுப்பாடநூல் நிறுவனத் தால் பல பல தனியார் அச்சகங் களில் அச்சடிக்கப்பட்டு வழங்கப் படுகின்றன.

அச்சு துறையில் ஆண்டு தோறும் தயாரிக்கப்படும் படிவங் கள், புத்தகங்கள் முதலியவற்றின் சராசரி மதிப்பு ரூ. 6.5 கோடி. அச்சகங்களுக்குத் தேவைப்படும் காகிதம், இங்க் முதலியவைகளை சேகரித்து அளிக்கும் பணியை தவிர, அரசு அலுவலகங்களுக்குத் தேவைப்படும் காகிதம் முதலிய பண்டங்களையும் சுமார் ரூ. 4.5 கோடி செலவில் ஆண்டுதோறும் பெற்று இத்துறைதான் பங்கீடு செய்கிறது. 1980-81 ஆண்டில் மட்டும் 5445 டன் பேப்பர், 1240 தட்டச்சுப் பொறிகள், 338 நகல் பெருக்கிகள் போன்ற சாதனங்களைப்பெற்றது. 1980-81 ஆண்டில் சுமார் ரூ. 6.32 கோடி கொள்முதலும், 1981-82 ஆண்டில் ரூ. 5 கோடி கொள் முதலும் செய்யப்படுகிறது.

அச்சகத் தொழிற்பயிற்சி.301 பேர்களுக்கு ஓராண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு அளிக்கப் படுகிறது. இது தவிர அடையாறி லுள்ள அச்சுத்தொழில் நுட்ப நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 90 மாணவர்களுக்கு அச்சுத் தொழிலில் 3 -4 ஆண்டு டிப்ளமா பயிற்சியளிக்கப்படு கிறது. பூவிருந்தவல்லியில் பார்வை இழந்த மாணவ மாணவி களுக்கு ப்ரெயில் முறையில் புத்த கங்களை அச்சிட ஒரு சிறு அச்சக மும் உள்ளது. அப்புத்தகங்களைக் கொண்டு சுமார் 300 பார்வை யிழந்த மாணவ மாணவிகளுக்கு அங்கே எல்லா வகுப்புக் கல்வியும் போதிக்கப்படுகின்றன. கேரளா, கர்நாடகம், ஆந்திர பிரதேசங் களுக்கும் ப்ரெயில் புத்தகங்கள் தயாரித்து அனுப்பப்படுகின்றன.

இத்துறையின் விற்பனை நிலை யங்கள் மூலமாக 1980-81ம் ஆண்டில் அரசு புத்தக வெளியீடு கள் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு விற்பனை ஆகியுள்ளன.




உடல் ஊனமுற்றோர்களின் நலனைப் பேணிக் காப்பதில் அச் சகத்துறை கவனம் செலுத்து கிறது. சென்ற ஆண்டிலும் நடை முறை ஆண்டிலும் 136 பேர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு அவர்களின் வாழ்க்கை சீரமைக்கப்பட்டுள்ளது குறிப் பிடத்தக்கது. உடல் ஊனமுற் றோரை அதிக அளவில் பணியில் அமர்த்தியமைக்காக 1980ம் ஆண்டிற்கான ஏ.எம்.எம். முரு கப்பச்செட்டியார் சுழற்கோப்பை இத்துறைக்கு வழங்கப்பட்டது. இதே காரணத்திற்காக 1980-ம் ஆண்டு சிறந்த வேலைவாய்ப்பு நிறுவனம் என இத்துறை தேர்ந் தெடுக்கப்பட்டு இந்திய குடிய ரசுத் தலைவரால் தேசிய விருதும் அளிக்கப்பட்டது.

பணியாளர்கள் அத்தனைபேர் களும் அரசு ஊழியர்களாக உள்ள னர். ஈட்டு விடுப்பு, மருத்துவ விடுப்பு, சிறு விடுப்பு முதலிய சலுகைகள் உண்டு. பணியாளர் களுக்கு மருத்துவ உதவி முதலிய வசதிகளும் அளிக்கப்படுகிறது. குழந்தை காப்பகங்களும் இயங்கி வருகின்றன. அச்சகப் பணியா ளர்கள் குடியிருப்பு வசதியாக சென்னை, தண்டையார்பேட் டையில் 300 அங்கணங்கள் உள் ளன. அங்கு தெரு விளக்கு, குடி நீர் வசதி, மின் விசிறி முதலிய வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன. அரசு அச்சகங் களில் பணிபுரியும் எல்லாப் பணி யாளர்களுக்கும், பன், தேநீர் இவற்றிற்குப் பதிலாக ஒவ்வொரு மாதமும் ரூ. 7.50 வீதம்தொகை வழங்கப்படுகிறது. ஈயம் உருக் கும் பணியில் வேலை செய்பவர் களுக்குப் பாதுகாப்பு அளிக்க, பால் வழங்குவதற்குப் பதிலாக அதன் கிரயமும், ஊட்டச்சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின் றன.

மைய அச்சகத்தில் செயல் படும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பணியாளர்களுக்கு தேவை யான கடன் வசதிகள் அளிக் கிறது.

உறுப்பினர்களின் எண்ணிக்கை 2673. பங்கு மூலதனம் ரூ.21.60 இலட்சம். 79-80ல் வழங்கிய கடன் ரூ. 2.76 கோடி. 1979-80 ஈட்டிய லாபம் ரூ. 3.76 இலட் சம். இங்கு தொழிலாளர் கூட் டுறவு பண்டகசாலையும் நடந்து வருகிறது. அதன் உறுப்பினர் எண்ணிக்கை 1443.

குடும்பங்களுக்கு துணை வரு வாய் கிடைக்க மகளிர்க்கு உதவி புரியும் நலத் திட்டமாக, புத்தகம் கட்டுதல், மேலுறைகள் தயா ரித்தல்போன்ற பணிகள் சமூக நல நிறுவனங்களிடம் ஒப்படைக் கப்படுகின்றன. கதர், கிராமத் தொழில்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் கதர் கிராமத் தொழில் வாரியத்திலிருந்து ஈச் சம்பாய்கள், சோப்புகள், கதர்த் துணிகள் முதலியவை கொள் முதல் செய்யப்படுகின்றன.





# "கோ ஆப்டெக்ஸ்" நிறுவனத்தின் சாதனை

பண்டிகைகளும் புத்தாடைகளும் ஊடும் பாவும் போன்றவையாகும்.

தீப ஒளிச் சிறப்பும், புத்தாடையின் தனிச் சிறப்பும் ஒருங்கிணைந்த தீபாவளிக்குக் கோ-ஆப்டெக்ஸின் பங்கு மகத்தானதாகும்.

நாட்டின் துணித் தேவையில் மூன்றிலொரு பங்கை ஈடு கட்டும் கைத்தறி, இந்தத் தீபாவளிக்கு மக்களின் ரசனைகளைக் கருத்தில் கவனத்துடன் கொண்டு அழகின் குவியலாக, வண்ணத்தின் கலவையாக அழகழகான ஆடைகளை விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்தியாவில் முதன் முதலில் கைத்தறியில் பாலியஸ்டர் ரகத் துணியை வழங்கிய தனிப் பெருமை நம் தமிழகத்திற்கே உண்டு.

எளிய நெசவாளி வழங்கிய அந்த உயரிய கைத்தறி பாலியஸ்டர் ரகத் துணிக்கு, இந்நாட்டு மக்கள் அளித்த பேராதரவு, நெசவாளியின் உள்ளத்தில் - இல்லத்தில் ஒளி விளக்கை ஏற்றியுள்ளது. அந்த அளவிற்குக் கைத்தறி பாலியஸ்டர் ரகத்துணிகளுக்கு மக்களின் மகத்தான ஆதரவு நாளும் பெருகியுள்ளது.

அந்த மகத்தான ஆதரவின் விளைவில் விளைந்தவையே பாலியஸ்டர் ஸ்பன் சட்டைத் துணிகள், பாலியஸ்டர் சின்ட்ஸ் சின்னஞ் சிறார்களுக்கான சித்திரங்களடங்கிய பாலியஸ்டர் சட்டைத் துணிகள்.

நாகரிக வளர்ச்சியில் தன் பங்கு எந்த அளவிற்கும் குறைவில்லை என்பதற்கோர் எடுத்துக்காட்டு அண்மையில் அறிமுகப் படுத்திய தேசிய வடிவமைப்புச் சேலைகள். கல்லூரிக் கன்னியரின் கனவுச் சேலை அது. இள மங்கைக்கு எழில் சேர்க்கும் கோலச் சித்திரச் சேலை அது. அறிமுகப் படுத்திய விரைவிலேயே அத்தனை சேலையும் விற்றுத் தீர்ந்து விட்டன என்பதே மகளிர் குலம் அளிக்கும் மகத்தான ஆதரவினுக்குத் தக்க சான்று.

பட்டுச் சேலைகளைப் பற்றி ஒரே சொல்லில் சொல்லவேண்டுமானால் அவை பட்டுப்பூச்சிக்கு-வண்ணத்துப் பூச்சிக்கு நிகரானவை. அத்தனை வண்ணம். எண்ணங்களைக் கொள்ளை கொள்ளும் அத்தனை வண்ணங்கள்; வண்ணங்கள்! விலையும் மலிவு.

## முதல் அட்டை சொல்வதென்ன?

உயர் ரகப் பட்டு மட்டுமல்ல, ஏழை எளிய மக்கள் உடுத்தும் ஜனதா இரகங்களையும் இங்கே குறிப்பிட வேண்டும். எளிய மக்களின் எளிய, ஆனால் எழிலான ஆடைகள் அவை.

கோ-ஆப்டெக்ஸ் அமைப்பினைப் பொறுத்தவரை, தீபாவளி விற்பனை ஒரு மைல் கல்லாகும்.

ஆண்டு தோறும் விற்பனையில் சாதனை புரிவதும், அடுத்த ஆண்டு அந்தச் சாதனையை முறியடிப்பதும் வழக்கமான ஒன்றாகும். 1981-82ஆம் ஆண்டுக்கு விற்பனைக் குறியளவாக ரூ 75 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஒரு மகத்தான அளவாகும். இந்த உயர் இலக்கினை அடைவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் இவ்வாண்டு தீபாவளிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ. 33- கோடியை எட்டிப் பிடிக்க அல்ல, தாண்டியும்செல்ல கோ-ஆப்டெக்ஸ் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புடன் செய்துள்ளது.


நாட்டில் பரவலாகவும், நிலையாகவும் அமைந்துள்ள 513 விற்பனை நிலையங்கள் தவிர, பொது மக்களின் வசதி வாய்ப்பினைக் கருத்தில் கொண்டும், விற்பனை நிலையங்களுக்கு வருகை தரும் ஒவ்வொரு வாடிக்கையாளரும் கைத்தறியாடை வாங்குவதிலிருந்துவிடுபட்டுவிடக் கூடாது என்ற கருத்தில், 273 தற்காலிக விற்பனை நிலையங்களும், அத்துடன் 57 கைத்தறிக் கண்காட்சிகளும் பொது மக்களின் சௌகரியத்திற்காக அமைக்கப்பட்டுள்ளன.

வாடிக்கையாளரின் நோக்கில் இது ஓர் அரிய ஏற்பாடாகும். கோ-ஆப்டெக்ஸ் நோக்கில் இது ஒரு சிறந்த வியாபார அபிவிருத்தி அமைப்பாகும்.

அரசு ஊழியர்கள் நலனில் என்றும் அக்கறை கொண்டுள்ள அரசு இதுவாகும். எனவே அவர்கள் மட்டுமல்ல, மற்ற துறையைச் சார்ந்த ஊழியர்களும் பயன் பெற கடன் வசதித்திட்டம் உள்ளது. இதில் மத்திய அரசு ஊழியர்கள், பொது லிமிடெட் நிறுவனங்களின் ஊழியர்கள், துறைமுகப் பொறுப்புக் கழகம், தமிழ் நாடு மின்வாரிய ஊழியர், மாநகராட்சி ஊழியர், பஞ்சாயத்து ஊழியர் அடங்குவர்.

இவ்வாண்டு எல்லா விற்பனை நிலையங்களிலும் எல்லோருக்கும் எல்லா வகைத் துணிகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பொது மக்கள் என்றும்போல் கைத்தறிக்கு நல்லாதரவு தர வேண்டும். தங்கள் இல்லங்களில் மட்டுமல்ல, நெசவாளர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் தீப ஒளியை வாழ்வின் ஒளியாக ஏற்ற வேண்டும்; நெசவாளர்களுக்கு என்றும் உறுதுணையாக தமிழ்ப் பெருங்குடி மக்கள் நிற்பார்கள் என்பது உறுதி!




# சியா எக்ஸ்போ 81

''நான் பி.ஏ. பட்டதாரி. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் எனக்கு எதாவது வேலை கிடைக்குமா?''

''புதிதாகச் சிறுதொழில் தொடங்குவதற்கு என்ன செய்ய வேண்டும் ?''

இப்படித் தகவல்கள் கேட்க இளைஞர்கள், தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்கள் அங்கே குழுமியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தக்கவாறு பதில் சொல்கிறார் ஒரு இளைஞர்.

சென்னைத் தேனாம்பேட்டையில் சியா எக்ஸ்போ'81' தொழில் பொருட்காட்சியில் உள்ள 'சிட்கோ' அரங்கிலுள்ள தகவல் நிலையத்தில்தான் மேற்கண்ட காட்சியை நாம் பார்க்கிறோம்.

**தமிழகம் முன்னேறுகிறது!**

தமிழ்நாடு சிறுதொழில் சங்க வெள்ளி விழாவையொட்டி நடந்த இந்தக் சண்காட்சியை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவுக்கு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், ''தமிழ்நாடு தொழில் துறையில் பின்தங்கி உள்ளது என்று கூறுவது தவறு. தேசிய சராசரியில் 2.5 மடங்கு தொழிற்துறையில் தமிழ்நாடு முன்னேற்றம் கண்டிருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளில் 12,800 சிறுதொழில் நிறுவனங்கள் புதிதாகத் தோன்றி இருக்கின்றன'' என்றார்.

**-பி. வி. கிரி**

விழா சிறப்பு மலரை வெளியிட்டு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில், 'தமிழ்நாட்டில் 6 வட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த வட்டங்களிலுள்ள சிறு தொழிற்சாலைகளுக்குச் சலுகைகள் வழங்க முடிவு செய்திருக்கிறோம்'' என்றார்.

**கிராமங்கள் முன்னேற...**

'தொழில் முனைவோர் குறிப்பேட்டை' வெளியிட்டு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசுகையில், 'நகரங்களைச் சுற்றி தொழிற்சாலைகளை அமைத்துக் கொண்டே போனால், கிராமப்புறங்கள் முன்னேறாமல் போய்விடும். கிராமப்புறங்களில் தொழில் வளராமல்

இருப்பதனால்தான், நாம் இன்னும் கிராமத்திலிருந்து நகரத்துக்கு வருபவர்களைத் தடுக்க முடியவில்லை'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு ஊரகத் தொழிலமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில், 'கிராமத்தில் சமூக, பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த தீவிரமாகச் செயல்பட்டு வருகிறோம் என்றார்.

**எத்தனை எத்தனை அரங்குகள்!**

சிம்சன், இந்துஸ்தான் மோட்டார்ஸ், பாரி கம்பெனி, பின்னி, அசோக் லேலண்டு, ஸ்பென்சர் போன்ற பிரபலமான கம்பெனிகளும் இங்கு இடம் பெற்றுள்ளன. மற்றும் பாரத ஸ்டேட் பாங்க், பாங்க ஆப் மதுரை, பாங்க் ஆப் இந்தியா, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ஆகிய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அரங்குகளைஅமைத்துள்ளன. அவை ஏழை எளியவர்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம், சிறு தொழில் வளரவும், சுய வேலை வாய்ப்புப் பெறவும் வழி வகுக்கின்ற பாங்கினை நாம் பார்க்கிறோம்.

இங்கே ஒரு மாதிரி கிராமத்தைப் ( Model Village ) பார்க்கிறோம். தங்கள் தேவையைத் தாமே சமாளித்துக் கொள்ளும் வகையில் அதாவது தங்கள் தேவைகளைத் தாமே நிவர்த்தி செய்து கொள்வதைப் படம் பிடித்துக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளன. மின் விளக்கு எரிவதற்கான மின்சாரம், நீர் இறைப்பதற்கான காற்று இயந்திரம் போன்றவற்றைத் தாங்களே அமைத்துக் கொள்ளலாம் என்பதனை இது விளக்குகிறது.

எழுபதாயிரம் சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள இந்த அழகிய கண்காட்சியில் 130 அரங்குகள் இடம் பெற்றுள்ளன. அரசு, தனியார் துறை நிறுவனங்கள் பல, சிறு தொழிலின் சிறப்பினை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளன.

செப்டம்பர் திங்கள் 27-ந் தேதி தொடங்கி, அக்டோபர் 11-ந் தேதி முடிய நடந்த இந்தக் கண்காட்சி ஆயிரக்கணக்கான மக்களுக்கு அறிவியல் விருந்து படைத்திருக்கிறது.

கண்காட்சியில் நாள்தோறும் கருத்தரங்குகள், திரைப்படக் காட்சி போன்றவை தொழில் ஆர்வலர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தன.


**பொது அறிவை வளர்த்திட....**


தமிழ்நாடு அரசுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், டான்சி, சிட்கோ, டாப்கோ, பால்வள நிறுவனம், மீனளத்துறை, பட்டு வளர்ப்புத் துறை, தொழில் வணிகத் துறை, தமிழ்நாட்டு பீங்கான் பொருள்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆகிய அரங்குகளில் அவற்றின் சீரியப் பணிகள் விளக்கப்பட்டுள்ளன.

இவையன்றி, பெல், இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், எச். எம். டி., பாரத் எலக்ட்ரானிக்ஸ், சென்னைத் துறைமுகம், இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ், நெய்வேலி நிலக்கரிக் கழகம் போன்ற அரங்குகள் நம் பொது அறிவை வளர்க்கின்றன.

**சுய வேலைவாய்ப்பு பெற்றிட**

தமிழ்நாடு தவிர, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய மாநில சிறு தொழில் சங்கங்களும் கண்காட்சியில் பங்கு கொண்டு பாங்கான பணியினைத் தெரிவிக்கின்றன.






**வீணே காலம் கழிக்காமல்...**

கிராம வளர்ச்சித் துறையில் (Rural Development) நாம் பார்ப்பதென்ன?

கையால் காகிதம் (Hand Made Paper) தயாரித்தல், வீட்டு மின்சாரத்தால் இயங்கும் சிறு நூற்பு இயந்திரம், தீப்பெட்டி செய்தல், மாதிரி பட்டுப் புழு வளர்ப்பு மனை போன்ற கிராமத் தொழில்கள் — சிறு தொழிலால் சீரான வளர்ச்சி பெறலாம் என்பதையும், வேலை தேடிக் காலத்தை வீணே கழிக்காமல், சுயவேலை வாய்ப்புப் பெறலாம் என்பதையும், இதன் மூலம் வருவாயைப் பெருக்கி வளமாக வாழலாம் என்பதையும்—நாம் நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதுடன் மன நிறைவும் பெறுகிறோம்.

மின் சக்தியைக்கொண்டுதான் மாவரைக்கலாம் என்பது மலையேறி, மனித சக்தியினாலும் மாவரைக்க முடியும் என்பதை கிராமவளர்ச்சி அரங்கு எடுத்துக்காட்டுகிறது.

சைக்கிள் போன்ற அமைப்புடன் உள்ள ஒரு இயந்திரம் உள்ளது. அதில் உட்கார்ந்து 'பெடல்' செய்யும்போது மாவரைக்கலாம். இதேபோல வேர்க்கடலை தோல் உரிக்கலாம். நெல் அடிக்கலாம்.

இதே அரங்கில் காய்கறிவகைகளை உலர வைப்பதற்கான சாதனமும் உள்ளது.

இந்தக் கண்காட்சியைப் பார்த்து, வெளி நாட்டினர் பலர் பாராட்டியுள்ளனர்.

ருவாண்டா என்ற ஆப்பிரிக்க நாட்டுத் தொழில்துறை இயக்குநரான திரு அயிர்வாண்டாமார்ட்டின் இந்தக் கண்காட்சியைப் பற்றிக் கருத்து கூறுகையில், இந்தக் கண்காட்சியில் உள்ள பொருள்களின் விலைகள் மலிவாக உள்ளன என்றும், பொருட்காட்சி சிறந்த முறையில் அமைந்துள்ளன என்றும் பாராட்டியுள்ளார்.

ஆஸ்திரேலிய நிபுணர் திருமதி ஜோலிண்ட்சே அம்மையார், ''இந்தக் கண்காட்சி வெகு நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டுள்ளது'' என்று பாராட்டு தெரிவித்துள்ளார்.

SIA 81 EXPO

**கிராமங்களில் கண்காட்சி**

கண்காட்சி நிறைவு நாள்விழா அக்டோபர் 11ந் தேதி நடந்தது.

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''சிறுதொழில்களை பொறுத்தவரை தமிழக அரசு அதற்காக இரண்டு கோடி ரூபாய்களை ஒதுக்க வேண்டும் என்றால், அதற்காக ஒதுக்கி சிறுதொழில் வளர்ச்சிக்குத் தீவிரமாக உதவுவோம்.

''சென்னையில் நடந்த இந்தத் தொழில் கண்காட்சி தொடர வேண்டும். இந்தக் கண்காட்சியைக் கிராமப் புறங்களில் நடத்தி, அந்த மக்களுக்கு அதில் அக்கறையையும் ஆர்வத்தையும் ஏற்படுத்துவது தொழில் அதிபர்கள் கடமை ஆகும்.''

**பின்தங்கிய பகுதிகளில்...**

விழாவில், மாண்புமிகு மத்திய தொழில் அமைச்சர் திரு என்.டி. திவாரி அவர்கள் பேசுகையில், ''தமிழ்நாட்டில் சிறுதொழில்கள் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. தொழிலதிபர்கள் பின் தங்கிய பகுதிகளில் தொழில்களைத் தொடங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு ஊரகத் தொழிலமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில்,

''மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் 18 ஆயிரம் சிறுதொழில்கள் இருந்தன. இந்த 4 ஆண்டுகளில் 36 ஆயிரம் சிறுதொழில்கள் உருவாகி இருக்கின்றன'' என்றார்.

**பதினைந்து நாட்கள் நடந்த இந்தத் தொழில் கண்காட்சி, பல்துறைத் தொழில் வளர்ச்சியையும், அதன் மூலம் தமிழகம் முன்னேறிவருவதையும் கண்கூடாகக் காண்பதற்கு வழிகோலியது என்றால் அது மிகையல்லவே!**

# சேலம் உருக்காலை ஒரு சாதனை

நாட்டில் எல்லோருடைய கவனமும் இன்று சேலத்தை நோக்கியிருக்கிறது. தமிழ் நாட்டின் பழம்பெரும் நகரமான சேலம் இன்று ஒரு தொழிற் புரட்சியின் மையமாகத் திகழ்கிறது.

ஆம். சேலம் உருக்காலை திட்டமிட்டபடி 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் நாள் தன் உற்பத்தியைத் துவக்கியது.

சேலம் உருக்காலை அரசினர் துறைப் பெரும் நிறுவனமான 'ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட்' டைச் சேர்ந்தது.

ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட்—செயில் (SAIL) அரசினர் துறையில் ரூர்கேலா, பிலாய், துர்காபூர், பொகாரோ என்ற நகரங்களில் இயங்கி வரும் எஃகு ஆலைகளையும், அரசுரிமையாக்கப்பட்ட இந்தியன் அயர்ன் மற்றும் ஸ்டீல் லிமிடெட் என்ற மேற்கு வங்கத்தில் உள்ள எஃகு ஆலையையும் நிர்வகித்து வருகிறது.

இவை தவிர துர்காபூரில் அலாய் ஸ்டீல்ஸ் ஆலை என்ற சிறப்பு எஃகு ஆலை ஒன்றையும் செயில் நடத்தி வருகிறது.

எஃகு உற்பத்தியை இன்னும் பெருக்கி, இந்தியாவின் வருங்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, இந்திய அரசு விசாகப்பட்டினம், விஜயநகரம் மற்றும் சேலம் என்ற மூன்று இடங்களிலும் எஃகு ஆலைகளை நிறுவ தீர்மானித்தது.

அவற்றில் சேலம் உருக்காலை இப்போது உற்பத்தியைத் துவங்குகிறது.

1977 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் தேதியன்று இந்திய அரசு சேலம் உருக்காலையின் முதற்கட்டத்திற்கு அனுமதி வழங்கியது. எஃகு மற்றும் நிர்மாணத் தொழில்களில் சிறந்த நிபுணர்களின் குழு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் திரட்டப்பட்டது.

என்னென்ன கடினங்கள் தோன்றும், எங்கெங்கெல்லாம் இடர்ப்பாடுகள் தென்படும் என்பதை முன்கூட்டியே ஆராய்ந்து அவற்றைத் தவிர்க்க இந்தக்குழு திட்டமிட்டது. கட்டுமானப் பணிக்குத் தேவையான எஃகு, சிமெண்ட் முதலிய பொருட்களும் முன்கூட்டியே தருவிக்கப்பட்டன. நாட்டின் தொழில் துறையில் தலை சிறந்த நிறுவனங்களுடன் ஒருங்கு சேர்ந்து ஒத்துழைத்து எஃகு ஆலைக்குத் தேவையான இயந்திரங்களையும், கருவிகளையும் உற்பத்தி செய்ய வகை செய்தது.

சேலம் உருக்காலை கட்டுமானம் துவங்கிய பொழுது உலகெங்கும் எஃகு ஆலைக்குத் தேவையான இயந்திரச் சந்தையில் ஒரு தேக்க நிலையிருந்தது. அதாவது நிறைய இயந்திரங்கள் இருந்தன. வாங்குவோர் எண்ணிக்கை குறைவு. இந்த நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி உருக்காலைக்குத் தேவையான இயந்திரங்களையும் பொறிகளையும் தருவிக்க வழி செய்தனர்.





அதே சமயத்தில் நாட்டின் பொதுத்துறை, தனியார்துறை இரண்டையும் சேர்ந்த சிறந்த நிறுவனங்களிலிருந்தும் இயந்திரங்கள் தருவிக்க வழி செய்தனர்.

இன்று நாட்டுக்குத் தேவையான எவர்சில்வர், ஆண்டு ஒன்றுக்கு 55,000 டன்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அயல் நாட்டை விட இந்தியாவில் எவர்சில்வர் பொருட்கள் விற்கும் விலை அதிகம். இவ்வாறு இல்லாமலிருந்தால் நாட்டின் எவர்சில்வர் தேவை இன்னும் அதிகமாக இருக்கும்.

சேலம் உருக்காலை ஆண்டு ஒன்றுக்கு 32,000 டன்கள் வெப்பமில்லா முறையில் உருட்டப்பட்ட எவர்சில்வர் சுருள்களையும், தகடுகளையும் உற்பத்தி செய்யும்.

இவை நாட்டின் நவீன நுண்ணமைப்புத் தொழில்களுக்குத் தேவைப்படும். சிறப்பாக இவை பயன்படுவது ரசாயன, பெட்ரோலிய - ரசாயன செயற்கை உரங்கள் செய்யும் தொழில்களிலும், அணுசக்தி, பால் பண்ணை கருவிகள் செய்யவும் பயன்படும்.

சேலம் உருக்காலை உருவாகி வரும்பொழுது தமிழ்நாட்டில் கொடிய மின்சாரத் தடையிருந்தது. இந்நிலைமை கட்டுமான வேலைகளையும் இயந்திரங்கள் நிறுவும் பணிகளையும் பாதித்தது. ஆனால் விரைவிலேயே தமிழ்நாடு அரசு சேலம் உருக்காலை கட்டுமானப்பணிகளுக்குத் தடையான மின்வெட்டுக்களைக் குறைத்தது.

மின்வெட்டு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, மேற்கு வங்கம், பீஹார், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களிலும், நிலவியது. ஆகையால் சேலம் உருக்காலைக்குத் தேவையான இயந்திரங்களும் பொறிகளும் தயாரிப்பதில் சிரமம் ஏற்பட்டது. ஆனால் மின்சார நிலைமை விரைவிலேயே சீரடைந்தபொழுது உருக்காலை கட்டுமானப்பணிகள் வேகமாக நடைபெற்றன.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்கள் சேலம் நகரையும் உருக்காலையையும் இணைக்கும் நான்கு விதிச் சாலையையும் உருக்காலை உற்பத்திக்குத் தேவையான மின்சாரம் தண்ணீர் இவற்றை வழங்கும் திட்டங்களையும் நிறைவேற்றினர்.

கட்டுப்பாடுடன் கூடிய ஒருங்கிணைந்த வேலை செய்யும் திறமை தங்கள் பணியில் ஒவ்வொருவரும் அர்ப்பணித்துக் கொண்ட நேர்மை விஞ்ஞான வழிப்படி கட்டுமானப் பணிகளைக் கண்காணித்த முறை இவைகளே சேலம் உருக்காலைத் திட்டத்தின் வெற்றிக்குக் காரணங்கள்

உருக்காலை எஃகு நகர் மற்றும் தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் சேர்ந்து உருக்காலையில் ஏறத்தாழ ரூபாய் 167 கோடி முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

செனட்சிமிர் வரிசை தான் உருக்காலையின் பிரதான உருட்டாலை. இந்த ஒரு வரிசைமட்டுமே ஆண்டு ஒன்றுக்கு 32000 டன்கள் உற்பத்திக்கு வழி செய்யும். இதே போல் இன்னும் ஒரு வரிசையையும் இன்னும் சில சிறிய அளவில் தேவையான கருவிகளையும் நிர்மாணித்தால் சேலம் உருக்காலையின் உற்பத்தித் திறன் இருமடங்காகப் பெருகும். இந்த விஸ்தரிப்புத் திட்டத்திற்குத் தேவை ரூபாய் 30 கோடிதான். ஆனால் விளையும் பயனோ இருமடங்கு. இந்தத் திட்டம் இந்திய அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

சேலம் உருக்காலைக்குத் தேவையான உற்பத்திப் பொருளான வெப்பமுறையில் உருட்டப்பட்ட எவர்சில்வர் கனச்சுருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும். இந்த இறக்குமதியையும் அந்நிய நாணயச் செலாவணி வெளியே போவதையும் தவிர்க்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு இருக்கிறது. இதை இந்திய அரசாங்கம் அங்கீகரித்து விட்டது.

இதன்படி துர்காபூர் கலவை எஃகு உருக்காலை நவீனமுறைப்படி எவர்சில்வர் தட்டைப்பாளங்களைத் தயாரிக்கும் இப்பாளங்கள் பொகாரோ உருக்காலையில் வெப்ப முறையில் உருட்டப்படும். இவ்வாறு வெப்பமுறையில் உருட்டப்பட்ட எவர்சில்வர் கடினச் சுருள்கள் சேலம் உருக்காலைக்குத் தருவிக்கப்படும் இவை உருக்காலையின் உற்பத்தி மூலப் பொருளாகப் பயன்படும்.

இவ்வாறு செய்தால் ஆண்டுக்கு ரூபாய் 40 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தலாம் என்று எண்ணப்படுகிறது.

சேலம் உருக்காலையில் அநேக பொறியாளர்களும் பொறிவல்லுநர்களும் பணியாற்றுகின்றனர். இவர்களில் பாதிக்கு மேலானவர்கள் ரூர்கேலா, பொக்காரோ எஃகு ஆலைகளில் சிறப்புப் பயிற்சி பெற்றனர். ஏறத்தாழ 350 ஊழியர்கள் அந்நிய நாடுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர். சிலர் பயிற்சி முடிவடைந்து சேலத்திற்குத் திரும்பி ஆலைப் பணியில் அமர்ந்திருக்கின்றனர்.

சேலம் உருக்காலையும், எஃகு நகரமும் ஏறக்குறைய 15 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்திருக்கின்றன.

எல்லா, நவீன வாழ்க்கை வசதிகளுடனும் கூடிய சிறுநகரம் ஆலைக்கு அண்மையிலேயே வளர்ந்து வருகிறது. பல வகைப்பட்ட வீடுகள், விடுதிகள், மருத்துவ மனை, கடைகள் இவையெல்லாம் உருவாகி வருகின்றன. சேலத்துத் தங்கமாகிய எவர்சில்வர், செயில் (SAIL) நிறுவனத்தின் வியாபார அலுவலகங்களின் வழியாக இந்தியா எங்கணும் விற்பனை செய்யப்படும்.

இவ்வாறு செய்யப்படும் பொழுது சேலத்து எவர்சில்வர் நாட்டின் தொழில் வளர்ச்சியில் பங்கு பெறும் பொருட்களில் ஒரு தலையாய இடம் பெறும்!

ஆதாரம்: ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் சேலம் உருக்காலை

# ஊனமுற்ற மேதைகள்

உடல் ஊனமுற்றாலும் மனம் ஊனமின்றித் தம் கடினமான உழைப்பினால் ஊனமுற்றோர் சிலர், தமது குறைகளை வென்று உலகில் தனிச்சிறப்புடன் மேதைகளாகத் திகழ்கின்றனர்.

உடல் ஊனம், முன்னேற்றத்திற்குச் சுமையாகாது என்பதை இவர்கள் வாழ்க்கை மெய்ப்பிக்கிறது. உடல் ஊனமின்றியும் சோம்பலாய் மன ஊனமுற்ற பிறருக்கு இவர்கள் வாழ்க்கைப் பாடமாக அமைகிறது.

**டெமாஸ்தெனிஸ்**

இவர் ஏதென்ஸ் நகரத்தில் கி.மு. 383-ல் பிறந்தார். இவரது வாழ்க்கை வேடிக்கையும் வேதனையும் நிறைந்தது. இவர் பிறவியிலேயே தெற்று வாயராக இருந்தார்.

அன்றாடம் கடற்கரைக்குச் சென்று கூழாங்கற்களை வாயில் அடக்கிக் கொண்டு உரத்த குரலில் பேசிப் பழகினார். தாம் நினைப்பது முழுவதையும் எழுதி மனப்பாடஞ் செய்து தனியான இடத்தையடைந்து உரக்கப் பேசிப் பயிற்சி பெற்றார்.,

**இரட்டைப் புலவர்கள்**

இவர்கள் கவிபாடும் ஆற்றலும் நகைச்சுவை ததும்பப் பேசும் இயல்பும் உடையவர்கள். இரட்டையர் சோழ நாட்டிலுள்ள ஆலந்துறையில் பிறந்தவராவார். இவர்கள் 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். இவர்களுள் ஒருவர் முடவர்; மற்றொருவர் குருடர். முடவரைக் குருடர் சுமந்து செல்வார் என்றும், முடவர் குருடரின் தோள் மேல் இருந்து கொண்டு அவருக்கு வழிகாட்டுவார் என்றும் கூறுவர். இவர்கள் இளஞ்சூரியர் முதுசூரியர் என்றும் வழங்கப்பட்டார்கள்.

**அந்தகக் கவி**

'தன் கையே தனக்குதவி' என்பர். பிறவியிலேயே குருடராக இருந்தும் தம் தளராத முயற்சியால் கல்வியைக் கேள்வி வாயிலாகப் பெற்றுக் கவிஞரானவர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் ஆவார். எனவே தான் 'அந்தகக் கவி' என்று வழங்கப்பட்டார். இவர் காஞ்சிபுரத்திற்கு அண்மையிலுள்ள பூதூரில் வடுகநாத முதலியாருக்கு மைந்தராய்ப் பிறந்தார். இவர் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

**ஜான் மில்டன்**

ஜான் மில்டன் ஒரு ஆங்கிலப் பெரும்புலவர் ஓய்வற்ற படிப்பும், எழுத்தும் அவரது கண்பார்வையை முழுக்கப் பறித்தன. 1652-ஆம் ஆண்டு மில்டன் தனது 44-ஆம் வயதில் இரு கண்களின் பார்வையையும் இழந்தார் பார்வை இழந்த பின்னர் தான், இழப்பிற்குக் காரணமாயிருந்த எழுத்துத் துறையைக் கைவிடுவதற்கு அவரது மனம் இடமளிக்கவில்லை, ஒவ்வோர் இரவும் படுக்கையிற் படுத்தவாறே 200 முதல் 250 வரிகளை மனத்திற்குள்ளேயே அவர் உருவாக்குவார். மறுநாள் பகற்பொழுதில் அவர் அந்த வரிகளைச் சொல்லச் சொல்ல அவரது பெண்மக்கள் அவற்றிற்கு எழுத்து வடிவம் தந்தனர்.

**பைரன**

ஆங்கில நாட்டுப் பெருங்கவிஞர்களுள் ஒருவராய்ப் போற்றப் படுபவர் ஜார்ஸ் கார்டன் நோயல் பைரன் என்பவர். இவர் தம் குழந்தைப்பருவம் முதலே ஒரு காலில் ஊனம் உள்ளவராய் இருந்தார். இதனால் அவர் ஓடியாடி விளையாட முடியாதவராக இருந்தார். எனினும் பள்ளியில் பயிலும் காலத்தில் பைரன் சிறந்த மாணவராக விளங்கினார்

**ஹெலன் கெல்லர்**

உடலுறுப்புக் குறை வாழ்க்கையை எந்த விதத்திலும் கெடுத்து விடாது என்ற நம்பிக்கையை உலகிற்கு உணர்த்தியவர் ஹெலன் கெல்லர் என்னும் அம்மையார் ஆவார். இவர் 1880-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாள் அமெரிக்காவில் டஸ்கம்பியா என்ற சிறிய நகரத்தில் பிறந்தார். ஹெலன் பிறந்து 19 மாதங்களுக்குப் பின்னர் அவருக்குக் கடுமையான மூளைக் காய்ச்சல் ஏற்பட்டது. அந்த விசித்திர நோய் ஹெலனின் பார்வையைப் பறித்து விட்டதோடு செவியின் கேட்கும் சக்தியையும் கெடுத்துவிட்டது. பேசும் சக்தியைக் கூட ஹெலன் இழந்துவிட்டார். ஹெலன் பிரெய்லி முறை நூல்கள் வழியே கல்வி கற்றார். பள்ளிப்படிப்பு முடிந்ததும் ஹார்வார்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராட்கிளிஃப் கல்லூரியிற் பயின்று ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றார். ஆங்கிலக் கல்வி கற்றதோடு, லத்தீன், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். பத்தாவது வயதிலேயே ஹெலன் புகழ்ப்படியை மிதித்துவிட்டார். அவரது அறிவாற்றல் விக்டோரியா மகாராணியாரின் செவிக்கு எட்டியது. ஹெலனின் பெயரை, ஒரு கப்பலுக்குச் சூட்டிப் பெருமைப் படுத்தினார்.

**பண்டிதமணி**


தமிழறிஞர்கள் வியந்து போற்றும் பெருமைக்குரியவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களாவார். மகிபாலன்பட்டி என்னும் சிற்றூரில் 1881-ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் பண்டிதமணி பிறந்தார். சிறு வயதிலேயே இளம்பிள்ளைவாதத்தால் பீடிக்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் துன்புற்றார். எனினும் அந்நோய் அவரது அறிவுத்துறை முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கவில்லை. பதினான்காம் வயதில் அந்நோய் தலைதூக்கி அவரது இடக்கையையும், இடக்காலையும் பயனற்றதாக்கிவிட்டது. இதனால் இருந்த இடத்திலிருந்தே தமிழ் மொழியில் அறிவை வளர்த்துக் கொண்டார்.

**எடிசன்**

நமது வாழ்வில் அன்றாடம் மிகுந்த பயன்தரும் கருவிகள் பலவற்றை உருவாக்கியளித்தவர் தாமஸ் ஆல்வா எடிசன் என்னும் விஞ்ஞானி அவருக்கு ஒரு காது செவிடு குடும்பத்தில் நிலவிய ஏழ்மையால் எடிசன் இளமையிலேயே புகைவண்டிகளில் பத்திரிகை விற்கும் தொழிலில் அமர்ந்தார்.


— ரா. அரிகிருஷ்ணன்

# அமோக விளைச்சலுக்கு





# உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY






## சமச்சீர் உரமிட
## விஜய்

HTM-MFL-2526




கடைசி அட்டை சொல்லும் கட்டுரை

"மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே!''

''பாதி மதிநிதி போது மணிசடை
நாதனருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா !''

—என்றெல்லாம் அருணகிரி நாதர் தமது திருப்புகழிலே குறமகள் வள்ளியை மணந்ததைச் சுட்டிக்காட்டி முருகக்கடவுளை வணங்குகிறார் பல இடங்களில் !

இரா. சண்முகம், எம். எல். ஏ., ஆகியோரும் மணவிழாவிலே பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

மணம் புரிந்து கொண்டோரில் 81 பேர் ஆதிதிராவிடர்கள். 3 பேர் கலப்புத்திருமணம் புரிந்து கொண்ட கதிர்வேலனின் அடியொற்றி மணம் கண்டவர்கள்.

பிராமண வகுப்பைச் சேர்ந்த திரு இராமமூர்த்தி, ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த செல்வி சாலம்மாளை மணந்தார்.

# திருத்தணியில் புதுத் திருவிழா!

கலப்பு மணம் புரிந்த அந்தக் கடவுட் குமரனின் அறுபடை வீடுகளிலே ஒன்றான திருத்தணி சந்நிதானம் அண்மையில் (6-10-81) மகத்தானதோர் மணவிழாக் கண்டது.

திருத்தணி மலை மீதுள்ள தேவர் மண்டபத்தில், 98 ஜோடிகளுக்கு, அருள்மிகு முருகன் கோயில் நிதியிலிருந்து திருமணம் செய்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் இத்திருமணத் திருவிழாவை முன்னின்று நடத்தி வைத்தார். மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள், திரு கிருபானந்தவாரியார், திரு

வன்னியர் வகுப்பைச் சேர்ந்த ஆறுமுகம் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த செல்வி கமலாவை மணந்தார். ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த கிருஷ்ணன், சைவ முதலியார் வகுப்பைச் சேர்ந்த செல்வி லட்சுமியை மணந்து கொண்டார்.

மற்றவர்கள், வசதி ஏதும் அற்றவர்கள்.

கவிஞர் கோவேந்தன் எழுதிய 'முருகன் ஆயிரம்' என்ற நூலை இவ்விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் வெளியிட, அதை மயிலாப்பூர் குருஜி சுந்தரராம்ஜி பெற்றுக் கொண்டார்.

பி. எஸ். ஆர்

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் தலைமையேற்ற இவ்விழாவில், இந்து அறநிலையத்துறை ஆணையாளர் திரு. யூ. சுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரை யாற்றினார்.

'இந்த ஆண்டில், கோயில்களின் சார்பில் இவ்வாறான இலவசத் திருமணங்கள் நடத்தி வைக்க 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டி ருப்பதாகவும், 16 கோயில்களில் இப்படிப் பட்ட திருமணங்கள் நடத்தப்படும் என்றும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

எதிரும்புதிருமாக மணமக்கள் புத்தாடை யோடு மாலையுங் கழுத்துமாய் அமர்ந்திருக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மணமகன் களை நோக்கிச் சென்று மாங்கல்யங்களை வழங்கினார்.

அன்று காலை 10.15 மணியளவில்—திருமணத்தை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் குறிப்பிட்ட தாவது :

''ஒரு லட்சம் ரூபாய் செலவில் இந்த 98 ஜோடிகளுக்கும் இங்கே திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

''இப்படிப்பட்ட திருமணங்களை நடத்து வதற்கு, ஒரு ஜோடிக்கு 750 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

''இங்கே 101 ஜோடிகளுக்கு இன்று திரு மணம் செய்து வைக்க முடிவு செய்யப்பட்டி ருந்தது. ஆனால், தவிர்க்க முடியாத சில சம்பவங்களால் மூன்று ஜோடி மண மக்கள், வர இயலாமல் போயிற்று. அவர் களுக்கு விரைவில் இங்கேயே திருமணம்நடத்தி வைக்கப்படும்.

''கலப்புத் திருமணம் செய்து கொள்ப வர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கப்படு கிறது. இங்கே கலப்புத் திருமணம் செய்து கொண்ட மூன்று ஜோடிகளுக்கும் அந்தத் தொகை கிடைக்கும். கலப்புத் திருமணம் செய்து கொண்டால் ஒரே ஜாதி, ஒரே இனம் என்ற உணர்வு ஏற்படும்.

''இங்கே திருமணம் செய்து கொண்ட மணமக்கள், எல்லா நலனும் பெற்று சமுதா யத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கவேண் டும் என்று வாழ்த்துகிறேன்.''

—இவ்வாறு மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில், திருத்தணி கோயில் அறங் காவலர் குழுத் தலைவர் திரு பி. ஜோதி நன்றி கூறினார்.

மணவிழா முடிவுறுந்தறுவாயில் விரைந் தோடி வந்து சேர்ந்த நரிக்குறவ ஜோடிக்கு திருமுருக கிருபானந்தவாரியார் மணச்சடங்கு களை நடத்தி வைத்தார்.

இந்த மண விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—மலைப் பாதையில், 48 அறைகள் கொண்ட முருகன் விடுதி, தணிகேசன் திருமணக்கூடம் ஆகிய வற்றைத் திறந்து வைத்தார்; பல்பொருள் அங்காடி, பூந்தோட்டம், கார்த்திகேயன் விடுதி, பக்தர்கள் தங்கும் இலவசக் கூடம், உணவுக் கூடம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டினார்.







# 'வாழுங்கள் எங்களை வாழவிடுங்கள்'

நிகழ்ச்சித் தொகுப்பு

**பி. வி. கிரி**

''வன விலங்குகளை இந்த நாட்டின் அழியாச் செல்வங்களாகக் காக்க வேண்டும்'' என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழக அரசும், மைய அரசின் அஞ்சல் துறையும் சேர்ந்து வன விலங்குவார விழாவினையொட்டி நடத்திய 'சிறப்பு அஞ்சல் உறை மற்றும் முத்திரை' வெளியீட்டு விழா அக்டோபர் முதல்நாள், அண்ணாசாலை அஞ்சலகத் தலைமை அலுவலகத்தில் நடந்தது.

நாட்டில் சுபிட்சம் ஏற்பட...

சிறப்பு அஞ்சல் உறை, முத்திரையினை வெளியிட்டு மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், ''வனங்களைத் காத்து, செழிக்கச் செய்வதன் மூலம்தான் தவறாமல் பருவமழை பெய்வதற்கும், அதன் மூலம் நாட்டில் சுபிட்சம் ஏற்படுவதற்கும் வழி பிறக்கும். வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியது அனைவருடைய கடமையும் பொறுப்புமாகும். இதனை உணர்ந்து, வனங்களை அழிவிலிருந்து காப்பாற்ற அனைவரும் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்'' என்று கூறினார்.

ஒத்துழைப்போம்!

விழாவில் தமிழ்நாடு மண்டல அஞ்சல்துறைத் தலைவர் திரு பி.எஸ். இராகவாச்சாரி அவர்கள் ''வனவிலங்குகளைக் காப்பதற்கு, எத்தகைய ஒத்துழைப்பு வேண்டுமானாலும் அஞ்சல் துறை செய்ய முன் வரும்'' என்று கூறினார்.

தமிழக வனவளம் மற்றும் மீன் வளத் துறை தனிச் செயலர் திரு எப்.ஜே. வாஸ் ஐ.ஏ.எஸ். அவர்களும், கூடுதல் வனத்துறை தலைவர் திரு ஏ.எம். முகமது உசைன் அவர்களும் வன விலங்கினைப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள்.

துவக்கவிழா

அக்டோபர் திங்கள் மூன்றாம் நாள், வனத்துறை சார்பில், சென்னைக் கலைவாணர் அரங்கில் வனவிலங்கு வாரத் துவக்க விழா மிகச் சிறப்பாக நடந்தது.



அனைவரையும் வரவேற்றார்.

**மரம் வளர்க்க ஏற்பாடு !**


மாண்புமிகு செய்தி - அற நிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தலைமை வகித்து புகைப்பட— ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சென்னை மாநகரிலும், மாநிலத்தின் பிற பகுதிகளிலும் புதிதாக வீடுகள் கட்டுபவர்கள் அந்த வீட்டின் சுற்றுப் புறத்தில் கண்டிப்பாக மரம் வளர்க்கும் ஒரு ஏற்பாட்டைக் கொண்டு வருவது குறித்து அரசு யோசித்து மரங்களை நட்டு இயற்கைச் செல்வத்தைப் பெருக்குவதிலும் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கும்'' என்று கருத்து தெரிவித்தார்.

**போற்றிக் காப்பாற்றிட.....**

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில், அண்ணல் காந்தியடிகள், பேரறிஞர் அண்ணா ஆகியோர் உயிரினங் களிடத்தில் காட்டிய அன்பை விளக்கிக்கூறி, வனவிலங்குகளைப் போற்றிக் காப்பாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

விழாவில் கலந்து கொண்டு திருமதி செளந்தரா கைலாசம்




**சிறப்பு அஞ்சல் உறை— முத்திரை வெளியீட்டு விழாவில்...**

குழந்தைகள் பூங்கா யானை ஒன்று, அரங்கின் வாயிலில் அனை வரையும் வரவேற்க, பாண்டு இசை முழங்கியது.

ஓவியம் மற்றும் புகைப்படக் கண்காட்சியை, மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத்தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் திறந்து வைத்தார். வனவிலங்கு களை நேரில் காண்பது போன்ற உணர்வை உண்டாக்கும் வண் ணம் எடுக்கப்பெற்ற எழில்மிகு புகைப்படங்களும், மாணவ மணி களின் எண்ணத்தில் மலர்ந்த வண்ணச் சித்திரங்களும் மனத் தைக் கவர்ந்தன.

அரங்கினுள்ளே மக்கள் நிரம்பி வழிந்தனர்.

வனத்துறைத் தலைவர் திரு. த. அச்சய்யா இ. வ. ப. அவர்கள் வருகிறது. இதற்கேற்ற வகையில் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கான விதிமுறையில் தேவையான திருத்தங்கள் செய் வது குறித்தும் யோசிக்கப்பட்டு வருகிறது.

''இது தவிர இனி அரசு சார் பில் நடைபெறும் எந்த விழாவா னாலும் சரி, அந்த விழா துவக் கத்தில் ஒரு செடி நடும் நிகழ்ச்சி கண்டிப்பாக இடம்பெற வேண் டும் என்கிற ஏற்பாட்டையும் செய்ய அரசு உத்தேசித் துள்ளது.''

**முன்னோடியாக....**

மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் பேசுகையில், ''வன வளத்தைப் பெருக்குவதிலும், அவர்கள், மேஜர் ஜெனரல் எஸ். பி. மகாதேவன் அவர்கள் வன விலங்குகளைக் காப்பாற்ற வேண் டியதன் அவசியத்தை உணர்த்தி னர்.

அன்று இரவு கணேஷ்—சேகர் குழுவினரின் 'சுபமுகூர்த்தப் பத்திரிகை' என்னும் நாடகம் நடந்தது.

வாயில்லா ஜீவன்களைக் காப் பாற்றுவதன் அவசியம் என்ன என்பதனை மனத்திலே பதிகின்ற வகையிலே சொல்லப்பட்ட கருத் துக்களை நோக்கும்போது, ''வாழுங்கள் — எங்களை வாழ விடுங்கள்!'' என்று அந்த உயி ரினங்கள் எல்லாம் நமக்கு உணர்த்துவது போன்ற எண்ணம் ஏற்படவில்லையா?




# வனங்களைப் பேணுவோம்! வனவிலங்குகளைக் காப்போம்!

**அ**க்டோபர் 3-ஆம் தேதியன்று சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கப்பட்ட வன விலங்கு வார விழா, அக்டோபர் 8-ஆம் நாளன்று திருச்சி மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலமான முக்கொம்பு என்னும் இடத்தில் நிறைவு பெற்றது.

இவ்விழாவின் காரணமாக முக்கொம்பு எழில் கோலத்துடன் திகழ்ந்தது. அங்கிருக்கும் மேல் அணையில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீர்ப் பரப்பைப்போல், மக்கள் பரப்பும் விழா அரங்கில் நிறைந்திருந்தது.

மாலை 6 மணியளவில் விழா தொடங்கியது. வனத்துறைத் தலைவர் திரு த. அச்சய்யா இ. வ. ப., அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அடுத்து, திருச்சி மாவட்ட ஆட்சியாளர் செல்வி சாந்த ஷீலாநாயர், இ. அ. ப., உரையாற்றியபோது குறிப்பிட்டார் :

''அனைத்து உயிர்களுக்கும்இவ்வுலகில் வாழ்வதற்குச் சமஉரிமை உண்டு. விலங்குகளை நாம் அழிக்கத் தொடங்கினால், விரைவில் மனித இனம் மட்டுமே உலவ வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். பரிணாம வளர்ச்சியில் எல்லா உயிர்களும் ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கின்றன. இந்த உண்மையை நாம் உணர வேண்டும்''

அடுத்து, கொள்ளிடம் காவிரிக் கரையின் மத்தியில் அமைய உள்ள மான் பூங்காவிற்கு மாண்புமிகு செய்தி - சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டிவிட்டு, தலைமையுரை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''ஆண்டுதோறும் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2ஆம் நாளிவிருந்து வனவிலங்கு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 22வது விழா நடைபெறுகிறது.

''மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், தொடக்க விழா தலைநகரிலும், நிறைவு விழா வெளி மாவட்டப் பகுதிகளிலும் நடத்த வேண்டும் என்று முடிவெடுத்து, கடந்த 4 ஆண்டுகளாக நிறைவு விழா கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சியிலும், நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலி நகரிலும், மதுரையிலும் இன்று திருச்சிக்குப் பத்தாவது மைலில் காவேரி-கொள்ளிடம் பிரிவில் உள்ள முக்கொம்பிலும் இந்த விழா கொண்டாடப்படுகிறது.

''வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டும் என்னும் எண்ணம் நம் நாட்டில் மட்டுமல்ல- உலக முழுதும் உள்ள மக்கள் உணர்ந்து, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

''வனவிலங்குகள் மனிதனுக்கு எதிரிகள், தீங்கு விளைவிப்பவைகள்; ஆகவே அவற்றைக் கொன்றுவிட வேண்டும் என்று மனித சமுதாயம் ஒரு காலத்தில் கருதிக் கொண்டிருந்தது.

''கதைகளில் நாம் படித்திருக்கிறோம். மன்னர்களிடம் பொது மக்கள் சென்று எங்கள் பயிரை விலங்குகள் நாசம் செய்கின்றன- சிறுத்தைகள் நாட்டிற்குள்புகுந்து மனித உயிர்களைக் கொல்கின்றன. எனவே நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று முறையிடுவதாகவும், உடனே மன்னன் தனது படை பட்டாளங்களுடன் காட்டிற்குச் சென்று வனவிலங்குகளை வேட்டையாடிக் கொல்வான் என்றும் படித்திருக்கிறோம்.

''விலங்கு என்பது மனிதனுக்கு விரோதி. அதை எங்கே பார்த்தாலும் அழித்துக் கொன்றுவிட வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டிருந்தது. ஆய்ந்து பார்த்தால்

நிகழ்ச்சித் தொகுப்பு:

**தமிழ்ப்பித்தன்**

விலங்குகளுக்கு மனிதன்தான் விரோதி. மனிதனைப் பார்த்து விலங்கு பயப்படுகிறது. அவனுக்குத் தீங்கு செய்ய அது நினைப்பதில்லை. அதன் இயல்பான சூழ்நிலையை மனிதன் கெடுக்க முயற்சி எடுப்பதனால் அச்சப்பட்டு மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கிறதே அல்லாமல் எந்த விலங்கும் தானாக வந்து மனிதனைத் துன்புறுத்துவதில்லை.

''விலங்குகளை மட்டுமல்ல வனங்களையும் நாம் பாதுகாக்க வேண்டும். விலங்குகள் காடுகளில் வாழ்கின்றன. அந்தக்காடுகளைப் பாதுகாத்தால்தான் விலங்குகள் அங்கு வாழ முடியும். காடுகள் பாதுகாக்கப்பட்டால்தான் அங்குள்ள மரங்களின் உதவியால் மழை பொழியக்கூடும். மழை இல்லை என்றால் மனித வாழ்வு இல்லை.

''இதனை உணர்ந்ததனால்தான் இளங்கோவடிகள்,'ஞாயிறு போற்றுதும்' என்று தொடங்கியவர் 'மாமழை போற்றுதும்' என்றும் வணக்கப் பாடலாக எழுதியுள்ளார். சூரியன் உலக வாழ்க்கைக்கு எப்படி அடிப்படையாக அமைந்திருக்கிறதோ அதைப் போல மழையும் அவசியம்.

காடுகள் இல்லை என்றால் மாமழை கிடைக்காது. ஒரு வருஷம் மழை பெய்ய வில்லை என்பதால் வறட்சிக்கு ஆட்பட்டிருந்தோமே! குடிக்கத் தண்ணீர் இல்லாமல் நாம் திண்டாடினோமே !

''ஜீவராசிகளை உற்பத்தி செய்து ஒன்றுடன் ஒன்று இணைந்து வாழும் கூட்டு வாழ்க்கையை-விசித்திர வாழ்க்கையை-அற்புத வாழ்க்கையை இயற்கை ஏற்படுத்தியுள்ளது.

''விலங்குகளைப் பாதுகாக்க வேண்டும் என்னும் உணர்வு மனிதனின் தலையாய உணர்வு-இரக்க உணர்வு -அன்பு உணர்வு-பிற ஜீவராசிகளிடம் ஆதரவு காட்ட வேண்டும்- அன்பு காட்ட வேண்டும் என்ற உணர்வு ஆகும்.

''காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2ல் தொடங்கி சமரச சன்மார்க்கத்தைப் போதித்த வள்ளலார் பிறந்த 5-ந் தேதியையும் உள்ளடக்கி இந்த விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.


''விலங்குகள் எல்லாம் நமக்காக வாழ்ந்துவரும் ஜீவராசிகள் என்பதை உள்ளத்தில் ஏற்று, அவற்றிற்கு மறந்தும் துன்பம் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகக்கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

''இந்த விழாவை இந்த ஆண்டு முக்கொம்பில் நடத்த விரும்பியதற்குக் காரணம், இந்த இடம் மிகப் புகழ் பெற்ற சுற்றுலாத் தலமாக வளர்ச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையில்தான் !

''தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் அருகில் உள்ள கோடியக்கரையில் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலிருந்து பலவிதமான பறவைகள் வந்து தங்குகின்ற அற்புதம் நடைபெற்று வருகிறது. அங்கு பறவைகள் சரணாலயம், பெரிய அளவில் அமைக்கப்பட உள்ளது. அந்த இடம் வெளிநாட்டவர் மனதைக் கவரும் வகையில் சுற்றுலா இடமாக அமைக்கப்படும். அங்கு மான் சரணாலயம் ஒன்றை அமைக்க இருக்கிறோம். கடந்த காலங்களில், அங்கிருந்த மிட்டா மிராசுகள் தினசரி மான்களை வேட்டையாடிக் கொன்று, விருந்து படைப்பதை வேலையாகக் கொண்டிருந்தனர். கடந்த 2, 3 ஆண்டுக் காலங்களில், அத்தகையவர்கள் எத்தனை பெரிய மனிதர்களாக இருப்பினும் சரி, மான்களை வேட்டையாடுபவர்கள் தண்டனைக்கு உள்ளாவர் என்று சட்டம் தீட்டி, அவர்களை எச்சரித்து, மான்களைக் காப்பாற்றி உள்ளோம்.

''இன்னொரு திட்டமும் உள்ளது. கன்னட நாட்டைச் சேர்ந்த கூர்க் மலையில் பிறந்து-கன்னட நாட்டை விட்டுப் புறப்பட்டு தமிழகத்தை வந்தடைந்து தஞ்சை மாவட்டத்தில் புகுந்து - மண்ணைப் பொன்னாக்கிக் கொண்டிருக்கிறது, காவிரி. இந்த இடத்தில் பள்ளத்தை நோக்கி ஓடுகிறது காவிரி. அதனால் மேல் அணை கட்டப்பட்டுள்ளது. கட்டாவிட்டால் அது கொள்ளிடமாக மாறி, கடலில் போய்க் கலந்திருக்கும். அதனால்தான் காவிரி நீரை வீணாகவிடாமல் தடுத்து கரை கட்டி-அணை கட்டி- அதிக வெள்ளம் வரும்போது திறந்து விடும் வகையில் மேலணை கட்டப்பட்டது. மீண்டும் உயரத்தில்போகும் காவிரி ஆற்றை கல்லணைதடுத்து சரியானமுறையில் அனுப்புகிறது. மேலணை, கல்லணை இரண்டும் வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களாகும். இந்த நீர்ப்பாசனத் திட்டம்-தஞ்சையை வளப்படுத்துகிறது என்பது மட்டுமல்ல, உலக விஞ்ஞானிகள் எல்லோரும் வியந்து போற்றும் வகையில் -சிறிதளவு தண்ணீரைக் கூட வீணாக்காமல் பயன்படுத்தும் திட்டம் - சிறிய கால்வாய்களாக மாற்றி தமிழகத்தின் நன்செய்,புன்செய் களுக்குச் செல்ல வைக்கும் திட்டம் ஆகும்.

''சுற்றுலாப் பயணிகளை-வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை இந்த இரண்டு அணைகளின் ஊடே காட்சிதரும் நீர்ப்பரப்பின் கரைகளுக்கு நடுவே பயணம் செய்ய வைத்து 'எங்கள் முன்னோரின் விஞ்ஞான அறிவைப் பாருங்கள்-அவர்கள் கட்டிய கோவில் கலையைப் பாருங்கள்-சிற்பக் கலையைப் பாருங்கள். தமிழகத்தின் பெருமையைப் பாருங்கள் -வருபவர் வைஷ்ணவராக இருந்தால் ஸ்ரீரங்கத்தைப் பாருங்கள்-சைவராக இருந்தால் திருவானைக்காவைப் பாருங்கள்! எங்கள் கலைத்திறனைப் பாருங்கள். உலகத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் ஆண்ட எங்கள் மன்னன் கல்லாலே எழுப்பியஅணை,சிமெண்ட் கண்டுபிடிப்பதற்கு முந்திய காலத்தில்- கான்கிரிட் கண்டுபிடிப்பதற்கு முந்திய காலத்திலேயே எவ்வளவு சிறப்பாகக் கட்டப்பட்டுள்ளது, பாருங்கள், என்றெல்லாம், அவர்களை அழைக்க வேண்டும்.



''1000 ஏக்கர் அளவு நீர்ப் பரப்புள்ள இடத்தில் தங்கி கல்லணையையும் கண்டு செல்ல— இங்கு அமைய உள்ள மான் பூங்காவையும் கண்டு ரசித்துச் செல்ல - சரியான சாலை போட வேண்டும். 1 கோடியே 30லட்சம் ரூபாய் அதற்குச் செலவாகும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.


''மற்ற உயிரினத்திடம் ஈவிரக்கம் காட்ட வேண்டும்- ஆதரவு தர வேண்டும் மனிதாபிமானத்தோடு நடந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வை—என்ற நிலையை மனிதர்களின் மத்தியில் ஏற்படுத்துவதற்காகவே இது போன்ற விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. மனிதன் தவறு செய்கிறான்-மனிதன் மிருகமாகி விடும்போது. மனிதன் மிருகமாகிறான்; ஆனால் மிருகம் மனிதனை விட உயர்ந்த ஜீவராசியாகக் காட்சி தருகிறது. மனிதன் தான் கேடு கெட்ட மிருகமாக மாறுகிறான்.

''பாம்புகூட அது பாட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. மனிதன் அடிக்கப் போகிறான் என்பதை உணர்ந்து சீறுகிறது. எல்லாப் பிராணிகளும் சீறுகின்றன.

''நாம் நல்ல செயல்களுக்கெல்லாம் உதாரணமாக விலங்குகளைத் தான் காட்டுகிறோம். மனிதனின் நன்றி உணர்விற்கு நாயைத் தான் சான்று காட்டுகிறோம். ஒற்றுமை உணர்வுக்குக் காக்கையை எடுத்துக் காட்டுகிறோம். வீரத்துக்கு வேங்கையைக் காட்டுகிறோம். கம்பீரத்திற்கு சிங்கத்தை - தந்திரத்துக்கு நரியை - சுறுசுறுப்புக்கு தேனியை அழகுக்கு மயிலை எடுத்துக் காட்டுகளாகக் கூறுகிறோம்..... எதற்காகவாவது மனிதனை உதாரணம் காட்டுவது உண்டா? ஆனால் வாயில்லா ஜீவன் என்பதால் மிருகங்களை நாம் கேவலமாக நடத்துகிறோம். எனவே விலங்குகளிடம் நாம் கருணை காட்ட வேண்டும். அவற்றை வாழவிட வேண்டும். அவை வாழ்ந்தால்தான் காடு வாழும். காடு வாழ்ந்தால் தான் நாடும் வாழும். எனவே அனைவரும் மற்ற ஜீவராசிகளைக் காக்க வேண்டும் என்ற உறுதியை இந்த விழாவின் வாயிலாக எடுத்துக் கொள்ள வேண்டும்.''

பின்னர் உரையாற்றிய திருச்சி ஜமால் முகமது கல்லூரிப் பேராசிரியர் திரு சி. நயினார் முகம்மது குறிப்பிட்டார்:

'நாட்டில் எத்தனையோ சமுதாய விழாக்கள் கொண்டாடப்



படுகின்றன மகளிர் ஆண்டு, சிறுவர் ஆண்டு, ஊனமுற்றோர் ஆண்டு என்றெல்லாம் கொண்டாடப்படுகிறது. அதைப்போல வனவிலங்குக்கும் விழா கொண்டாடப்படுகிறது.

''வனம் என்னும் சொல்லின் பொருளே சிறப்புடையது. வனம் வனப்பையும், அழகையும் சுட்டும். அடர்ந்து செழித்திருக்கும் விதத்தையும் சுட்டும். மனிதன் மிக உயர்ந்தவன்; அந்த உயிரினத்துக்குத் துணையாக உள்ளவை விலங்குகள். எனவே விலங்குகளைக் கொல்லக் கூடாது.''

அடுத்து கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு தங்கவேல் ராஜ் உரையாற்றுகையில் தெரிவித்தார்: ''இந்த வன விலங்கு வார விழாவையொட்டி வனங்களைப் பேணுவோம்; வன விலங்குகளைக் காப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.''

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் திரு கருப்பையாஅவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார் :

''வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டும்; அவற்றிடம் இரக்கம் காட்ட வேண்டும் என்பதற்காக இந்த விழா ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.''

அடுத்துப் பேசிய முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமது உரையில் தெரிவித்த கருத்துக்கள் :

''பயிரையும் பிற உயிரையும் கண்டு வருந்தி வாழ்ந்தவர்கள் நமது முன்னோர்கள். அந்த வகையிலேதான் நாம் வன விலங்குகள் வாரத்தின் நிறைவு விழாவை இந்த முக்கொம்பில் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

''வனவிலங்குகளையும் வனங்களையும் நாம் காக்க வேண்டும். வள்ளலார் 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ள வகை கிடைத்த குளிர் தருவே' என்று மரத்தை வருணிக்கிறார். மரம் மட்டுமல்ல- பயிர் வாடினால்கூட வாடியிருக்கிறார்கள் நமது முன்னோர்கள்.

''சாமியின் பெயரைச்சொல்லி ஆடு, மாடுகளை பலி கொடுக்கின்றனர் மனிதர். எனக்கொரு ஆசை! பலி கேட்பதாகச் சொல்லப்படும் தெய்வங்கள் 'மனிதர்களே, ஆடு, மாடு பலி! பெற்று எனக்குச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது; புலி, சிங்கம், ஆகியவற்றை இனிமேல் பலி கொடுங்கள்' என்று கேட்கக் கூடாதா என்பதுதான் அந்த ஆசை.

''தெய்வம் அவ்வாறு கேட்டால் மனிதன் என்ன செய்வான் ? புலியிடமும் சிங்கத்திடமும் அவனால் செல்ல முடியுமா ? தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் விலங்குகளிடம் அவன் நெருங்க மாட்டான்! அப்படி நெருங்கினால் அவை அவனைக் கொன்று விடும்.''

பின்னர் உரையாற்றிய ஸ்ரீரங்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சௌந்தரராஜன் குறிப்பிட்டார் :

''நமது தேசத் தந்தை காந்தியடிகள் சொல்லி வைத்த நெறிகளில் குறிப்பிடத்தக்கவை கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவையாகும். காந்தியடிகளின் பெயரைச் சொல்லி நாம் விழா எடுப்பதில் பயன் இல்லை. எந்த வகையான இலட்சியத்திற்காகத் தனது வாழ்க்கையை அவர் அர்ப்பணித்தாரோ அந்தப் பணியை நாம் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட வேண்டியது நமது கடமையாகும்.

''இந்த முக்கொம்புப் பகுதிக்கு மற்றொரு சிறப்பும் உண்டு;

அறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆனவுடன் முதன் முதலில் தொண்டர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்த அந்நிகழ்ச்சி இந்த முக்கொம்பில்தான் நடைபெற்றது. அண்ணா அவர்களைக் கவர்ந்த இடம் இது. இந்த இடம் சிறந்த சுற்றுலாத் தலமாவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து தர வேண்டும்.''


அடுத்து மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றினார். தமது உரையில் அவர் குறிப்பிட்டார்.:

''ஒரு நாட்டில் மூன்றில் ஒரு பங்கு காடு இருக்க வேண்டும். நமது நாட்டில் 31 பங்கு தண்ணீர் 69 பங்கு நிலம். 69 பங்கில் மூன்றில் ஒரு பங்கு காடு இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லை. எந்த நாடு இயற்கை வளத்தைக் குறைவாகப் பெற்றிருக்கிறதோ அது உலக அளவில் பெருமை பெற முடியாது.

நாட்டில் பெரும் பகுதி காடாக இருந்திருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு மரங்கள் அழிக்கப்பட்டு இன்று காடு மிகக் குறைவாக உள்ளது. மனிதர்களை மட்டும்தான் மொட்டையடிக்கிறார்கள் என்றில்லாமல், இன்று நீலகிரியையும் மொட்டையடித்து விட்டார்கள். கொடைக்கானலையும் மொட்டையடித்து விட்டார்கள். மரங்கள் அழிக்கப்பட்டதன் காரணமாக மழை சரியான முறையில் பெய்யவில்லை. சென்ற நூற்றாண்டில் பெய்த மழை அளவு, இந்த நூற்றாண்டில் பெய்யவில்லை. காரணம் காடு பெருமளவில் அழிக்கப்பட்டதுதான்.

''ராஜஸ்தானில் காடு இல்லை- அதனால் பாலைவனம் உருவாகி இருக்கிறது. காடு இல்லாததால் சகாராபாலைவனம் உருவாகியுள்ளது. தமிழகத்தில் அப்படிப்பட்ட பாலைவனங்கள் கிடையாது.

மெர்க்காராவில் அதிக மழை பெய்தால் காவிரியில் அதிக நீர் வரும். உப நதிகளில் தண்ணீர் வரவேண்டுமானால், மழை பெய்ய வேண்டும். அதற்கு ''அடர்ந்த காடுகள் இருக்க வேண்டும். அவற்றை அழிக்கக்கூடாது என்று இந்திய அரசும், மாநில அரசுகளும் ஒருங்கு கூடி முடிவெடுத்ததன் விளைவாகத்தான் இன்று வனவிலங்கு வார விழா எடுத்து வருகிறோம்.



''மழை, இல்லாததால் நன்செய், புன்செய் வளர்வதில்லை. 60 கோடி ரூபாய் சென்ற ஆண்டு நாம் வறட்சி நிவாரண நிதியாகச் செலவிட்டிருக்கிறோம். பெய்ய வேண்டிய மழை பெய்திருந்தால் தண்ணீர் வந்திருக்கும் - விளைவு பெருகியிருக்கும். பணத்தைத் தொழில் வளர்ச்சிக்கும் ஏனைய திட்டங்களுக்கும் நாம் செலவு செய்திருக்க முடியும். ஆகவே காடுகள் எவ்வளவு முக்கியம் என்பதையும் அவற்றைக் காப்பாற்றுவதில் நமக்கு எவ்வளவு கடப்பாடு உள்ளது என்பதையும் நாம் உணர வேண்டும்.

''சந்திரமண்டலத்திற்குச் சென்றவர்கள் அங்கு உயிரினம் வாழ்வதற்குரிய நீரில்லை. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். வெறும் நெல் முளைக்காது அதில் தண்ணீர் விட்டால்தான் அது முளைவிடும். எந்த விதையானாலும் அதுதான் நிலை. நீர்பட்டால் உயிர் இனம் வாழும். அதனால்தான் வள்ளுவர் கூட நீரின்றி அமையா உலகு என்று சொன்னார். உயிர் வாழ நீர் முக்கியம். அதனைத் தருவது காடு.

''அரைத்தால் மணம் கமழும் சந்தனம், அதிக விலையை ஈட்டித் தரும் சந்தனம்-தென்மாவட்டங்களில் அதிலும் ஜவ்வாது மலை- பச்சை மலை - கொல்லி மலை. ஆகியவற்றில்தான் உண்டு. கேரளத்தில் - மைசூரில் உண்டு. என்றாலும் அதிகம் விளையும் பகுதி தமிழ்நாடுதான்.

''உலகில் பல நாடுகளில் தேக்கு மரம் கிடையாது. சின்கோனா மரம் கிடையாது. உலகத்திற்கே சின்கோனாவை நாம்தான் அனுப்புகிறோம். யூகலிப்ட்ஸ் இங்கே உண்டு; ரோஸ் உட் என்னும் மரம் இங்கு உண்டு.

''உள்நாட்டு வாழ்க்கைக்கு மிகவும் பயன்படும் காட்டுச் செல்வம் காப்பாற்றப்பட வேண்டும். ஆகவே மரம் நடுதல் ஊக்கமும் ஆக்கமும் தரும் செயலாகும். பண்டைக் காலத்தில் நிரம்ப மரம் நட்டனர். மன்னர்களின் பெரும் பணிகளில் மரம் நடுதலும் சாலை அமைத்தலும் முக்கியப் பங்கு வகித்தன.

''ஹர்ஷன் கால முதல் ராஜ ராஜன் காலம் வரை மரம் நடாத மன்னர்கள் கிடையாது. அதனை மன்னர்கள்தான் அதாவது ஆட்சியாளர்கள்தான் நடவேண்டும் என்பது மரபாக இருந்திருக்கிறது

சாலையிலே வச்ச மரம்
சர்க்காரு நட்ட மரம்

என்று வழங்கப்படும் நாட்டுப்புறப் பாடலை நாம் கேட்டிருக்கிறோம். இதிலிருந்து என்ன தெரிகிறது; மரங்களை அரசாங்கம்தான் நடவேண்டும் என்பது புரிகிறது.''

விழாத் தொடக்கத்தில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்களும் இரண்டு மரக் கன்றுகளை நட்டனர்.

வனவிலங்குப் பாதுகாப்பில் சிறந்த சேவை செய்த அதிகாரிகளுக்குச் சான்றிதழ்களையும், ரொக்கத்தொகையையும் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் வழங்கினார் திருச்சி மாவட்ட வனவிலங்கு ஓவியப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற மாணவ மாணவியருக்குரிய பரிசுகளை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் வழங்கினார்.

அதிக அளவில் மரங்களை நட்ட திருச்சி தனி போலீஸ் சேமப் படை நிலையத்துக்கு மாவட்ட ஆட்சியாளர் செல்வி சாந்த ஷீலா நாயர் கேடயத்தை வழங்கினார்.

விழா இறுதியில் ஏ.வி. ரமணன், உமா ரமணன் குழுவினரின் மெல்லிசை விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த விழாவை முன்னிட்டு, சிறு அளவில் மிருகக் காட்சிச்சாலை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. புள்ளிமான், சிறுத்தை, முள்ளம்பன்றி, காட்டெருமை, கலைமான் ஆகியவையும் மலைப்பாம்பு, முதலை ஆகியவையும் இடம் பெற்றிருந்த அந்த விலங்குகள் காட்சிக் கூடத்தைப் பெரியவர்களும் சிறியவர்களும் கண்டு களித்தனர். அங்கே நிரந்தரமான விலங்குக் காட்சிச் சாலை அமைக்கப்பட்டால் சுற்றுலாப் பயணிகள் மிகுந்த அளவில் வந்து பார்த்துப் பயன் பெறுவார்கள் என்பதை அக் காட்சி உயர்த்தியது

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண் M. 8676 Licence No. TN/MS(C)/PP-23 தமிழரசு

